
# கவிநாயகர் வி. கந்தவனம்

# மணிவிழா மலர்

05-11-1994



**CORONATION SCHOOL AUDITORIUM**

**4860 VEZINA, MONTREAL, QUEBEC**

மணிவிழாக்குழு வெளியீடு

தமிழ் ஆலயம், மொன்றியல்



# விநாயகப்பா

அரியவொரு பேரொளியாய் அமைந்த ருள்வார்
அன்னையுமாய்த் தந்தையுமாய் அன்பு செய்வார்
உரியதுணை உடன்பிறப்பாய் உருகி நிற்பார்
உடனிருந்து தேவையறிந் துதவி செய்வார்
ஒருமுகமும் இருசெவியும் மூன்று கண்ணும்
நான்குதோ ளுடனைந்து கரமு முள்ளார்
திரிதரநல் நிழல்சொரியும் நுணாவில் சேர்ந்த
திருக்கோலங் கரைச்சோலை திகழ்வார் தாமே.

வி. கந்தவனம்.

"விநாயகப்பா" பக்திமாலையில் கவிஞரின் அர்ச்சனைப் பூ ஒன்று இது.

# தமிழ்த்தாய் வாழ்த்து

எங்கள் வீடு எங்கள் நாடு
இணையில் தமிழ் ஈழம்

என்றே போற்றிச் சங்கே முழங்காய்
எங்கள் இனம் ஓங்க!

எங்கும் இன்பம் யாவும் வெற்றி
இனியோர் குறையில்லை!

எங்கள் மண்ணை எங்கள் தமிழை
என்றும் காத்திடுவோம்!

வாழ்க இளைஞர் வீரம் மானம்
மாட்சி ஆட்சியெலாம்!

வாழ்க உலகத் தமிழர் ஒன்றாய்
வாழ்க தமிழ் ஈழம்!

வாழ்க மனித உரிமை பெருமை
வாழ்க உலகெல்லாம்!

வாழ்க என்றும் வையம் எங்கும்
வாழும் தமிழ் வாழ்க!

தமிழ்த்தாய் மீது கவிஞர் தூவிய அட்சை யொன்று இது.

# தலை வாசல்

ஆலுக்கு விழுது போல் தமிழுக்கு விழுதாகி அதன் அழகும் செழிப்பும் கலை இலக்கியமும் பண்பாடும் சாய்ந்து விடாமல் தாங்கித் தரணியெல்லாம் தமிழர் தம் புகழ்வளரத் தொண்டாற்றும் அறிஞர்களையும் பெரியோர் களையும் இருக்கின்ற போது விலை கொடுத்து போற்றாது இறந்தபின் சிலை வடித்து வணக்கம் செய்யும் மடமைக்குத் தீமூட்டி அவர்கள் வாழ்கின்ற காலத்திலேயே கௌரவித்துப் பற்பல நலன்களை ஆக்குவதற்கு ஊக்கம் அளிப்பதோடு இவர்களின் படைப்புக்களை வெளிக் கொணர்ந்து அதன் மூலம் சமுதாயம் பயன்பெறச் செய்வதே நம்போன்ற தமிழ் ஆர்வலர்களின் கடமையாகும்.

இந்த நிரையில் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் தமிழ் தொண்டினை கௌரவிக்கு முகமாக ஐப்பசித் திங்களில் அகவை அறுபதை நிறைவுபெறும் அவருக்கு மணிவிழா எடுக்க விழைந்திட்டோம்.

கவிஞர் கந்தவனம் அவர்களை கவிஞர் என்று அழைப்பதைவிட பேர்அறிஞர் என்று அழைப்பதே சாலப் பொருத்தமானது.

முத்தமிழிலும் வித்தகரான இவர் சமுதாய மேம்பாட்டிற்கு உரமூட்டும் தத்துவ ஞானியாக பல தத்துவ முத்துக்களை உதிர்த்திருக்கிறார்.

கருவின்றி, பொருளின்றி வெள்ளைக் காகிதங்களில் எழுதுகோல் கிறுக்கிச் செல்ல அவையெல்லாம் பத்திரிகை மேடையில் அரிதாரம் போட்டுவந்து இலக்கிய நாடகம் ஆடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் எழுத்தாளன் என்னும் தொடர் கட்டுரை மூலம் எழுதுபவனும் எழுது கோலும் எப்படி இயங்க வேண்டும் என்றும், சாகாத இலக்கியங்களைச் சமைப்பது எவ்வண்ணம் எனவும் சுட்டிக் காட்டி எழுதுதமிழ் மேன்மையுற நல்ல எழுத்தாளர் உருவாக வழிகாட்டியானார்.

இவர் கவிதைகளும், கட்டுரைகளும் கதைகளும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையே மையமாகக் கொண்டு ஆக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சமுதாய மேடையில் மனித நாடகம் நலன்பெற அரங்கேற ஒரு நல் நெறியாளராக வாழ்ந்திருக்கிறார் என்பது இவரின் படைப்புக்கள் தந்த பாடம்.

இப்பேறுபட்ட பேர்அறிஞனை கௌரவிப்பதில் நாங் கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நேரத்தில் நாம் ஒன்றை நினைவு கூர்ந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த கார்த்திகைத் திங்கள் இருபதாம் நாள் (20.11.1993) கவிநாயகர் அவர்களுக்கு முதன்முதலில் ரொறன்ரோ மாநகரில் மணிவிழா எடுத்த ரொறன்ரோ மணிவிழாக் குழுவினருக்கும் எமது நன்றிகள்.

**மணிவிழா அமைப்புக் குழு**
**மொன்றியால்**

# ஆசிகள்



இலங்கையின் யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவிலில்தோன்றி பாவலனாய் ஆயகலைகளையும் அறிந்த கவிஞனாய் அற்புதப்பாடல் செய்யும் அருந்தமிழ்ப் புலவனாய், பாரெங்கும் பல்வேறு வகைகளிலும் மாணவர்க்கு அறிவூட்டும் ஆசானாய் அருந்தொண்டாற்றி, காலதேச மாறுபாட்டால் கடல் கடந்து கனடா வந்தும் தன் கவிதையினால் தமிழ்மொழிக்கு அழகு செய்யும், சன்மார்க்க நெறி சொல்லி எம்மவர்க்கு வழி காட்டும் கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கு நடைபெறும் மணிவிழாவில் ஆசியுரை சொல்வதில் ஆனந்தமடைவோம்.


அன்னாரின் நிகழ்காலச் சேவைகளுக்கும் அவர் எதிர்காலத்தில் ஆற்றவிருக்கும் கருமங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் ஆயுளும் ஆரோக்கியமும் கொடுத்து அருள வேண்டும் எனவும் கவிஞரின் முயற்சிகள் யாவும் வளர்ச்சியடைந்து இனிது நிறைவுற வேண்டும் என்றும் ஆர்வத்துடன் இறைவனைப் பிரார்த்திப்போம்.

மனித சமுதாயத்திற்கு சேமமுண்டாகச் சகல உயிர்களிடமும் அன்புகாட்டி அவர்களை நல்வழிக்கு இட்டுச் செல்லும் கவிஞர் கந்தவனத்தின் அங்கங்களும் வாக்கும், பலமும், உயிரும், கண், காது முதலிய எல்லா உணர்வுகளும் தத்தம் தொழிலை நன்கு திறனுடையதாகச் செய்யவேண்டு மென்று காணும் பொருள்களின் காட்சியாகவும் அழகாகவும் காட்சிக்கு ஆதாரமாகவும் உள்ள அந்தப் பரப்பிரம்மத்தை சகல உயிர்கள் தோறும் உறைபவனை கருமேனித் திரு மாலும், செம்மேனிச் சிவனும் ஒன்றாயமைந்த வடிவை வீரியத்தின் மேல்நோக்குடையவனை முக்கண்ணனை எல்லாம் தன் வடிவமாகக் கொண்டவனைப் பலவழிகளிலும் நமஸ் காரம் செய்வோம்.

கவிஞர் கந்தவனம் அவர்களுக்கும் அன்னார் தர்மபத்தினி தவமணி அம்மையாருக்கும் தேவர்கள் இதமாக இருக்கட்டும். இந்திரன் சகல சுப மங்களங்களையும் அருளட்டும். பூஷா, சகல வெற்றிகளையும் இனிதருளட்டும், அரிஷ்ட நேமி அன்னார் இன்னல்களை நீக்கட்டும். பிரகஸ்பதி அவரது அறிவை மேம்படச் செய்யட்டும். ஆதித்யாதி நவக்கிரகங்கள் அவருக்கு அனுகூலமாக இருக்கட்டும். சேமம் உண்டாக தைரியமும் வெற்றியும் வீரமும் சிறக்க ஐஸ்வர்யமும் மேம்பட, ஆயுள் வளர்க என எல்லாம்வல்ல நுணாவில் வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு எமது நல்லாசிகள் உரித்தாகட்டும். இம் மணி விழாவினை ஒழுங்கு செய்து நடாத்துவதில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**சிவஞானபானு**
**சிவஸ்ரீ சிவஞான செல்வக்குருக்கள்.**

PREPARATORY SCHOOL UPPER CANADA COLLEGE 220 LONSDALE ROAD, TORONTO, CANADA M4V 2X8



7 October 1994

TO: The Vinayagar Kandavanam Diamond Jubilee Committee

It is my great pleasure to extend warmest greetings and congratulations to the Vinayagar Kandavanam Diamond Jubilee Committee and friends as you gather in Montreal to recognize the 60th birthday of one of your finest citizens and literary scholars.

Vinayagar Kandavanam has earned the deepest respect and admiration from the Upper Canada College community which he has served with distinction since March 1989 and we are extremely proud that he is receiving these special honours from his friends and countrymen.

I extend my personal greetings to all at this celebration and I know that the tributes bestowed are well earned and richly deserved.

Yours sincerely,

Hamish I.F. Simpson
Headmaster




# வாழ்த்துக்கள்

கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு மொன்றியால் நகரில் மணிவிழா! மகிழ்ச்சியான செய்தி இது. கவிஞர்களை, கலைஞர்களை, எழுத்தாளர்களை அவர்கள் வாழும்போதே நாம் கௌரவிக்க வேண்டும்.

இடுப்பில் சால்வையை இழுத்துக்கட்டிக் கொண்டு மிடுக்கு டன் மேடையில் தோன்றும் போதே கலகலப்பை ஏற்படுத்தி விடும் திறமை கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு கைவந்த கலை.

கனடா வாழ் தமிழர்கள் கொடுத்து வைத்தவர்கள்! அவரின் சீரிய தமிழ்ப்பணி தொடர என்றும் எனது வாழ்த்துக்கள்.

**குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்**
பொறுப்பாளர்:
உலகத் தமிழர் ஆவணக் காப்பகம்
செயலாளர்:
உலகத் தமிழர் ஆராய்ச்சி நிலையம்



# MESSAGE FROM
## FORMER DIRECTOR OF EDUCATION, SRI LANKA.

It gives me great pleasure indeed to send this message to felicitate Pulavar Kandavanam on his unique achievements in developing and promoting modern Tamil Language and Literature. I am really happy and proud that the Tamil comrades of Montreal are honouring him today in a fitting manner.

Pulavar Kandavanam started his career as a teacher at St Thomas' College, Matale where he played an important role in organizing H.S.C. classes in Tamil in 1959. St Thomas' College was the first institution in the entire hill country region to conduct classes in Tamil medium at H.S.C. level.

I have come to know him intimately since 1965 when he served on the Georgraphy Text Book Committee in Ministry of Education, Colombo. After the completion of his assignment with distinction, he was posted to Vasavilan Central College where in 1971 he was chiefly responsible for organizing the Silver Jubilee celebration of the institution. The celebration included an exhibition of creative skills of the students, a seminar on education, a cultural festival and the publication of a souvenir. The innovative souvenir which he edited received the encomiums of Principals, Education Officers, teachers and the public of Jaffna.

Pulavar Kandavanam is a great actor. He also had written, directed and produced several plays for school children. The honour of introducing Drama as a subject in the school curriculum for the first time in the Tamil region goes to Pulavar Kandavanam and in this virgin field, he had no peers to equal him or even surpass him. In this context, it is significant to mention that Pulavar was one of the few teachers, selected out of hundreads to follow a course of studies in Drama at the Colombo Campus of the University of Sri Lanka.


Pulavar, of course, is better known for his poetry and oratory. He is a king on the stage. There used to be a time in Sri Lanka, especially in the sixties and seventies, when Tamil people flocked to hear him speak or recite his poem.

As president of the Jaffna Writers' Association, he had encouraged writers to publish their works and had influenced Thanaluckumy Book Depot to have them printed at reduced rate. I was given the honour of declaring open a separate unit at this depot, set up for the purpose of displaying and selling the works of Sri Lankan Tamil authors.

Mr Kandavanam is no doubt a versatile personality - poet, author, orator, actor, dramatist all in one. May the Almighty grant him good health to enable him to continue to serve humanity in this selfless fashion.

I congratulate the Diamond Jubilee Committee and the Tamil people of Montreal for honouring a great personality who has served tirelessly for the cause of Tamil and Tamil Culture during the past four decades. I wish the function all success.

**T. Manickavasagar.**



# நினைத்துப் பார்க்கிறேன்

நெஞ்சத்தோடு நெருங்கிப் பழகுகின்ற சில இலக்கிய இதயங்களை மனதுக்குள் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.

நட்பிலும், புத்தகத்திலும், மதுவிலும் பழையதே சிறந்த தென்பது ஒரு பழமொழி.

ஆம், மண்ணை நேசிக்கும் அந்த மகத்தான கவிஞர் கந்தவனம் என்னுள் நண்பனாகவும், திறந்த புத்தகமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

'பழையதே சிறந்தது' என்ற பழமொழிக்கு என்னுள் இலக்கணமாகிவிட்டார்.

எத்தனையோ ஆண்டு காலத்துக்கு முன்னர், 'ஈழநாடு' பத்திரிகையில் நான் பணியாற்ற ஆரம்பித்த காலத்தில் ஏற்பட்ட நட்பு, நான் லண்டன் வந்து, அவர் கனடா வந்தபின்னரும் தொடர்கிறது.

குரும்பசிட்டி பொன்னையா ஐயாவின் 'ஈழகேசரி'யில் எழுதத் தொடங்கினார். அந்தப் பழம் பெரும் பத்திரிகையின் பணியை மண்ணின் நினைவாக, லண்டனில் நான் தொடர்ந்த போது, எனக்கு ஊக்கமும், உற்சாகமும் தந்து, ஒவ்வொரு இதழிலும் எழுதத் தொடங்கினார்.

கடந்த ஆண்டு கனடா மண்ணில் எனது 'வல்வெட்டியிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர் கள்' நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் கம்பீரத்துடன் பேசினார். சமீபத்தில் கனடாவில் தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் தலைமையில் பரபரப்பை ஏற்படுத்திச் சரித்திரம் படைத்த எனது 'ஆழிக்குமரன்' நூல் வெளியீட்டு விழாவிலும் அவர் பேசி, விழாவிற்கு கவுரவம் சேர்த்து அந்நூலை வெளியிட்டு வைத்தார்.

ஒரு காலத்தில் தமிழீழத்து முத்தமிழ் அரங்குகளில் கவிஞர் கந்தவனம் இல்லாத கவியரங்குகளே இல்லை எனலாம்.

கவிதை மொழியை வாயிலிருந்து பொழிந்து, பாட் டாலே கூட்டத்தைப் பரவசப்படுத்தி விடும் தனித்துவமிக்க கவிஞராக அன்று திகழ்ந்த கவிஞரின் அக்காலம் என் நினைவுத் திரைகளில் பளிச்சிடுகின்றன.

இலக்கியத்தை இதயத்தில் சுமந்து, இலக்கிய நண்பர்களை உயிரென நேசித்தார். யாழ்ப்பாண எழுத்தாளர் களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களுடன் இணைந்து யாழ். இலக்கிய வட்டம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து, அதன் தலைவராக எட்டு ஆண்டுகள் இருந்து அவர் ஆற்றிய பணி மகத்தானது.

எங்களோடு ஒன்றென வாழ்ந்த கவிஞர் இ. நாகராஜன் மறைந்த போது, அவர் குடும்பத்தின் துயர் துடைக்க நிதி திரட்டிக் கொடுத்த கவிஞர் கந்தவனத்தின் இரங்கும் நெஞ்சத்துக்கு இதுவோர் உதாரணம்.

கவிஞரின் எழுத்திலோ, சொற்பொழிவுகளிலோ 'அறுவை' இருக்காது. இதமானவை; விரும்பிக் கேட்கலாம். அதே போன்று தான் அவர் நடித்த நாடகங்களும், எழுதித் தயாரித்தவையும்.

தமிழே மூச்சென வாழ்பவர்! தமிழோடு வாழ்பவர் அவர்! வெளிநாட்டிலும் பத்திரிகைகள் மூலமும், வானொலி மூலமும், தமிழ் அரங்கங்களிலும் தமிழ்ப்பணி செய்து வருபவர் கவிஞர்!


அந்தச் சிறப்பு மிக்கத் தமிழ்த் தொண்டன் புகழ் சொல்லி அடங்காது! அவன் பெருமை கூற இடம் காணாது!

இத்தகைய பெருமைமிக்க தமிழ் அறிஞனுக்குத் மொன்றியலில் தமிழ் அன்பன் கவிதாராஜன் தலைமை யில் மணிவிழா எடுக்கப்படுவது அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில், கவிஞர் கந்தவனம் அவர்களும், அவர்தம் இல்லாளும், குழந்தைகளும் நீடூழி வாழ இதயத்தால் வாழ்த்துகிறோம்.

வாழ்க கவிஞர் கந்தவனம்!
வாழ்க கவிஞர் புகழ்!!

'ஈழகேசரி' ராஜகோபால்.



## GREETINGS FROM MR. M. KARTHIGESU

It is a great pleasure to be invited to extend my greetings and felicitations to Kavignar Kandavanam on the occasion of his Mani Vizha that is being organized by the Tamil Community of Montreal, Canada.

A poet is perceived of as a Creator - a Creator of beauty; words are his play-things; he picks, chooses and places them in the right order to create a "form"; then, become lively, beautiful, didactic and sublime; Kavignar, in this context, stands as a creator of beauty. A Romanticisist he is, he yearns for new forms and new interpretations breaking away from absolute formalism. Reflective poetry becomes his forte; he stands distinguished as a poet, teacher, writer, dramatist and above all as an orator, par - excellence with a flair for repartee.

While felicitating him on his 60th birthday, I take special pride in the fact that his devoted and dutiful wife, Thavamany is an old Mahajanan and former student of mine; Kavignar's links with Mahajana are, therefore, inseparable. His close interaction with the Progressive Tamil writers of his times in Elam bears testimony for his efforts to promote poetic creativity and excellence. His patronage of the Canada Tamil Writers Union which is functioning under the Presidency of Mr.K.T. Shanumgarajah of Montreal is a shining example of his sustained interest in Tamil literary activities in Canada.

We wish Kavignar, his wife, and his children, Vani and Varanan, long life, best of health and happiness at all times. Let his poetic creations grow by leaps and bounds! Let them bring to us vivid memories of the best times, our forebears enjoyed in our homeland several centurics ago as the great poet, Wordsworth, would have sung then--

*"Two Voices are there; one is of the Sea,*
*One of the Mountains (Palmyrah-groves); each a mighty Voice:*
*In both, from age to age Thou didst rejoice,*
*They were Thy chosen Music, LIBERTY!"*

- M. Karthigesu
Former Chairman, Town Council, Kankesanturai
Patron, Mahajana College O.S.A, Canada.

# சீர்பெறும் சீரிய நற்சான்றோன்

அமெரிக்காவின் வடக்கேயாயினும் – ஆங்கே
ஆபிரிக்காவின் தெற்கேயாயினும் – அரிய
தாயக மண்ணின் தனயன் – இவன்றன்
தாயவள் தமிழைத் தரணியெலா மியம்புந்
தூய வித்தகக் கவிமணியாகவு மின்னுந்
துலங்கிடுந் தொழிலாங் குருமணியாகவும்
ஆய கலைகளுள் நாடகத் துறையில் – அவர்
அரங்குகள் பலதை அணிசெய்தவராய்
நம்மிடை வாழ்ந்திடும் மணிவிழா நாயகன் – இந்
நாவலன் நாவுறை வாணியை வழுத்துவோம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரப்புவதில் – கை
தேர்ந்த தமிழறிஞர் உவகையுடன் வாழ்த்துகையில் – யானும்
சார்ந்த "தமிழ்ச் சங்கமாம்" மக்கில் பல்கலைக்கழகந்தன்னில்
சேர்ந்த தமிழ் மாணவர்கள் செழுமையுற்ற பேராசான்கள்
சார்பாக வாழ்த்துரைக்க வழிவகுத்த விழாவிதுவும்
சீர்பெறுக சீரியநற் சான்றோன் போன்றே – என்றும்
சிரிப்புடனே வாழ்ந்திடுக செம்மலவர் குடும்பம் – இன்னும்
சிறப்புற ஆற்றலுடன் ஆண்டுகள் பல வாழ்ந்து
கந்தவனக் கவிச்சிங்கம் செந்தமிழூக் கணி சேர்க்கத்
தந்திடுக வாரணன் தான் வரமளிக்க வாழ்த்துகின்றோம்.

**வீ.எஸ். நேசானந்தர்**
தலைவர்
தமிழ்ச்சங்கம்
மக்கில் பல்கலைக்கழகம்
மொன்றியல், கனடா

# தமிழே போற்றி

கல் உணரும் மண் புலரும்
காலத்தின் முன்னே
கண் மலர்ந்து விண் அளந்த
கவின் மொழியே போற்றி


கடல் கொண்ட இடம் நீங்க
தரையாவும் தனதாக்கி
உடல் எங்கும் கலை மின்ன
நடை பயிலும் தாயேபோற்றி


பகை வென்று நகை சிந்தி
பாவலர் பரணி பாட
தகை கொண்ட தார் வேந்தர்
தலைமேவு தமிழே போற்றி.


மூன்று தமிழாகி மூப்பின் பொருளாகி
முதுமை காணாத கன்னி
சான்று பலவாக சங்கம் அணிசூட
சபையாளும் தேவி போற்றி

மலை அருவி தாலாட்ட
பொதிகை வளர் தமிழே போற்றி
அலை அருவி அரவணைக்க
ஆடிவந்த கலையே போற்றி
பகை வெருவி தலைசாய
பலம் படைத்த தாயே போற்றி
செங் குருதி களம்மலர்ந்த
ஈழம் வளர் தமிழே போற்றி போற்றி......!


தமிழ் ஆலயம்











# JOY IN ACHIEVEMENT

It is immense pleasure to be associated with the release of a commemorative number to honour Kavignar Kandavanam, a remarkable Tamil poet of the century.

Kavignar has been a close friend of mine with whom I journeyed to India from Sri Lanka to bag an arts degree, a title regarded as indispensable to learning.

My earliest recollection of Kavignar is as a student at Drieberg College, Chavakachcheri, where I was being initiated into the teaching process - it was an effulgent period in the annals of the institution with many firsts and a fund of creative activity. Even as a student Kavignar distinguished himself as a serial writer in English to the senior students' paper under the benign care of Mr M.K.Segaram and Kavignar does owe a great deal to his teachers, Pandit Aiyadurai and the acknowledged master P.D. Chinniah. Kavignar was the product of an era of students noted for sobriety, dedication and determination.

It will not be far-fetched to say that Destiny had marked the young aspirant for a niche in the Hall of Fame. It is abundant, joy a soaring sense of pride to see the Tamil language and arts celebrated in Canada. Kavignar was born into a family of brothers Pasupathy and Markandu who nurtured the flowering of their brother; he married into a family of eminent writers- Rasikamani Kanaka Senthinathan and playwright and producer A.T. Ponnuthurai; and was enriched in the company of the writers of Jaffna Literary Circle of which he was president for several years. I am aware that the Circle comprising such luminous personalities as Mahakavi, R.Nagarajan, Ambi, Kruamakal, Sundarampillai, truly enriched the Tamil language with their creative writing. Kavignar was also involved in dramatics, community service and religious activities.

My latest recollection is calling upon my friend to compose a poem on Canada - sometime during the 125th anniversary of Canada - a request he responded with magical competence full of fact, feeling and dignity. My only regret is that the composition had seen the light of the day, bereft of the fanfare and heraldry that should accompany such a marvellous masterpiece. I quote just 3 verses as sampling of the fare therein:

ஏற்ற கல்வி செல்வம் வீரம்
ஈடிற் சுகாதாரம்
ஆற்றல் ஆர்வம் கைத்தொழில் ஆக்கம்
அனைத்தும் கொண்டாய் நீ!

பலமொழி சமயம் பண்பு வழக்கம்
பல்லினச் சமுதாயக்
கலைநகை அணிந்தே கலகலக் கின்றாய்
கற்பகக் கனடாவே!

தனியோர் குடியாள் தவித்தால் கலங்கித்
தாய்போல் காத்திடுவாய்!
மனிதர் உரிமை மதித்துக் கண்ணின்
மணிபோற் பேணிடுவாய்!

I understand that a lively Tamil rendering of the Canadian National Anthem has been made by Kavignar recently.


Kavignar is so unpretentious and unassuming that he naturally has an extensive group of admirers and friends. His solid thinking and mature judgement should serve the Tamil cause and community in the years to come.

My sincere thanks to Mr S. Jegatheesan to have called on me to contribute an article to this laudable compendium.

May the almighty amply bless my good friend with health and vigour to adorn the parade of Twentieth Century Tamil Poets..

**R. Sivanesan.**

# மணி விழா மண்ணில் இன்று!



கே. பி. லிங்கம்

முக்கனியின் சுவை தோற்கும்
முத்தமிழின் சுவை அறிந்து
வித்தகனாய்ப் பாட்டெழுதும்
சுந்தரத் தமிழ்ப் புலவா
வந்தனம் செய்திங்கு
வாழ்த்திட வந்தேன் நான்!

செந்தமிழ் கவி நாயக!
நின் தமிழ் வனத்தில் பூத்த
மலரெலாம் சொரிந்த தேனை
உண்டவர் அமரலோகம்
உள்ளது இங்கே என்பர்!
மனிதனுள் மானுடம் காக்க
மணிக்கவி தந்த வேந்தே
மணிவிழா மன்றில் இன்று
மனமகிழ் கவிதை பாடி
மகிழ்ந்தவர் கோடி! கோடி!!

அள்ள அள்ள வற்றாத
அழகு தமிழ் கொண்டு
கவிகள் பல புனைந்து
கனடியத் தமிழ் மண்ணில்
கம்பனின் தமிழ் கொஞ்சும்
கவிதைக் கல்லணைக்குக்
காவலனாய் வாழ்பவரே! கவிநாயகரே!
கை கூப்பி வணங்குகிறோம்.

கவியென்ற வில் வளைத்து – நற
கருத்துக்கள் தொடுத்தவனே,
மானுடம் செழிக்க வென
மனிதத்தைப் பாடிவைத்து
'பாடு மனமே பாடு' என்று
பாட்டொலிக்க வைத்தவனே!
'சிட்டுக்குருவி' யெனச்
சிறகடித்துப் பறந்தவனே,
குறளை மீட்டு வைத்ததாய்,
குறை கொள்மனிதரைப் பாடிவைத்தாய்!
சாதிகள், வேற்றுமைகள்
வீதி வழி ஓழிந்தோட
வீரமுடன் எழுதி நின்றாய்!

ஆறுபத்து வயதாகியும் – நீ
ஆக்கிவிட்ட கவிதைகளுக்கு
பதினாறு வயதென்று
பாருக்குக் காட்டுதய்யா!
தமிழுக்கும் வயதில்லை – உன்
தமிழ் கவிக்கும் வயதில்லை!
முத்தமிழாய், முக்கனியாய்
மூவேந்தர் வழி நின்று
மூப்பின்றிப் பிணியின்றி
மூத்த தமிழ் வளர்க்கும்
பைந்தமிழ்ப் பாவலனே – இப்
பாரினில் பல்லாண்டு
வாழ்க! வாழ்கவென
வாழ்த்தி நாம் துதிக்கின்றோம்!

எது செய்ய நாட்டுக்கே
எனத்துடித்த சிங்கமே!
இன்றே இன்னே
புதுநாளை உண்டாக்கித்
தமிழ்காப்பாய் புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே
அதிர்ந்தெழுக! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
அழகு காப்பாய்
இதுதான் நீ செயத்தக்க
எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே!

-புரட்சிக்கவி பாரதிதாசன்.

இது தான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம் எழுக நன்றே! என்று எழுச்சிக் கவிதை பாடிய பைந்தமிழ்க் கவிஞரின் கவிதை வரியை எழுது நன்றே' என்று சொல்லிப் பார்க்கும்போது அந்த அமுதக் கவி வாணனின் அன்புக் கட்டளை ஒரு இலக்கியவாதியை-எழுத்தாளனை-கவிஞனை- நினைத்துப் பாடியதாகவே எனக்குத் தோன்றுகிறது.

தமிழுக்குத் துறை தோறும் துறைதோறும்

# கவிஞன் என்றொரு இனமுண்டு

அழகு எமது ஈழத் திருநாட்டின் இன் சுவைக் கவிஞர்களுள் எனக்குத் தெரிந்த முதற்கவிஞர் கவிநாயகர் அவர்களே என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வேன். நான் அறிந்த கவிஞர்கள் பலர், தெரிந்தவர் எனை நன்கு புரிந்தவர் இவரே தான் மனித சமூகத்தின் உணர்வுகளை- உணர்ச்சி கலந்த பிரச்சினைகளை- பிரச்சினைகளின் முடிச்சுகளை அவிழ்த்து விடக்கூடிய கருத்துக்களை எழுதுபவன் - என்றும் நிலைத்து வாழ்வான் என்பது எனது கருத்து அத்தகைய ஆற்றல்மிக்க எழுத்தாளர்களை கவிஞர்களைத்தான் இன்றும் இலக்கிய உலகம் நினைத்துக் கொள்கிறது. நினைவில் நிறுத்தி மகிழ்கிறது. விழா எடுத்துக் கௌரவிக்கிறது.

அந்த வகையில் கவிநாயகர் எழுத்துலகில் தனது இலக்கியப்பணியை சமூகப் பார்வையுடன் செய்து வருகிறார் என்பதில் எவருக்குமே இரு வேறு கருத்து இருக்கமுடியாது.

வாழும் காலத்தில் வறுமையை ஆலிங்கனம் செய்து கொண்டு சமூகப்பிரக்ஞையுடன் எழுதி வந்த - கவிஞர்கள் - எழுத்தாளர்கள் கால தேவனால் அழைத்துச் செல்லப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பின் தான் அடை-டயாளம் காணப்பட்டார்கள், மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டார்கள் இந்த நிலை மாறவேண்டும். அவர்கள் வாழுங் காலத்திலேயே வாழவைக்கப்பட வேண்டும், வாழ்த்துப் பெற வேண்டும், வரவேற்கப்படவேண்டும்.

கவிஞர் அவர்களுடைய மணிவிழாவும் - நிறைவும் இரு வகையில் சிறப்பு வாய்ந்தது.

**கே. ரி. சண்முகராஜா**
.தலைவர். கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.

ஈழத் தாயகத்திற்கு வெளியே வாழும் மூத்த இலக்கிய வாதிகளுள் மணிவிழாக் கண்ட கவிஞர் கவிநாயகர் என்று சொல்லிக்கொள்வதுடன் கனடிய தமிழ் எழுத்துலகில் மணிவிழாக் கண்ட முதற்கவிஞரும் இவரே தான்! அது மாத்திரமன்றி புலம்பெயர்ந்த எழுத்தாளர்களும், கவிஞர்களும் பெருமளவில் வாழ்ந்து வருகின்ற ஒன்ராறியோ மாநிலத்தில் அகவை அறுபதின் நுழைவாயிலில் மணிவிழா எடுத்து, கியூபெக் மாநிலத்தில் மணிவிழா நிறைவைப் பூர்த்தி செய்யும் விழாவைக் கொண்டாடுவதன் மூலம் 'கவிநாயகர்' மேல் தமிழ்க்காதல் கொண்ட இலக்கிய நெஞ்சங்களின் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

அவ்விதம் தமிழ்க்காதல் கொண்டவர்களுள் நானும் ஒருவன் என்று இறும்பூதி நிற்கின்றேன்.

கவிஞர். கந்தவனத்தின் தூயதமிழ் ஒரு நந்தவனத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களின் நறுமணம் போன்று சுகந்தமானது, அதன் வர்ணங்களைப் போன்று வனப்பு மிக்கது. புதுமைக்கும் பழமைக்கும் பாலம் அமைத்துப் பாட்டெழுதம் பசுந்தமிழ் புலவர் இவர், பகுத்தறிவுப் பாசறையில் பாடம் பயின்றவர் என்பது பலருக்குத் தெரியாமல் போனாலும் பழகுவோருக்கு புரியும்.

அறிஞர் அண்ணாவின் அறிவின் ஆழத்தையும், ஆற்றொழுக்குப் போன்ற அழகு தமிழ் பேச்சையும் கேட்டு வளர்ந்தவர்கள் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொள்ளாமல் அடையாளம் காணக்கூடியவகையில் வளர்ந்துவிடுவார்கள். காரணம் அவர்களிடத்துள்ள தமிழ்ப்பற்று, இன உணர்வு, இலக்கிய அறிவு!

இம்மூன்றாலும் முழுமையடைந்த கவிஞரை அடைமொழி இல்லாமலே அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. கந்தவனம் என்று இலக்கிய உலகில் அல்லது பத்திரிகை வட்டாரத்தில் பேச்சு எழுந்தால் நிச்சயம், அவர் கவிஞர். கந்தவனமாகத்தான் இருப்பார்.

எழுத்தையும், எழுத்தாளனையும் நேசித்தபடியால் - மதித்துப் பழகியதால் தான் இவர் எந்த ஊரில் பிறந்தார் எந்த ஊரில் வாழ்ந்தார் என்று ஆராயமல் எவ்வூரிலும் மதிக்கப் பெற்றார். அவருடைய தூய்மையான எழுத்து பிறந்த ஊருக்குப் பெருமை தந்தது, புகுந்த ஊருக்குப் புகழ் தந்தது! வாழும் நாட்டில் விழா எடுத்துக் கௌரவிக்கப்படும் அளவிற்கு உயர்ந்திருக்கிறார் என்றால் அது தமிழுக்குக் கிடைத்த கௌரவம் கவிஞருக்கு வழங்கப்பட்ட பெருமை.

கவிஞன் அல்லது எழுத்தாளன் தனது பெயருக்கு முன்னாலே தான் பிறந்த ஊரின் பெயரைக் குறிப்பிடுவதாலோ அன்றிப் பெயரின் இறுதியில் தனது கல்வியின் சிறப்பை பதிவு செய்து கொள்வதினாலோ உயர்ந்து விடப் போவதில்லை.

கவிஞனுடைய கவிதை அவனை நினைக்க வைக்க வேண்டும், இலக்கியவாதிகளால் பேசப்பட வேண்டும், வாசகர்களால் வாழ்த்துப் பெற வேண்டும்.

எழுத்தாளனுடைய படைப்பு அவனை இனங்காண வைக்கும். எழுத்தாளமுடைய சிந்தனையும் சமுதாயப் பார்வையும் அவனை மக்களிடையே உறவு கொள்ளச் செய்யும். அப்படிப்பட்டவர்களால் தான் பிறந்த ஊருக்குப் புகழ் பெற்ற தாய்க்குப் பெருமை, கற்ற கல்விக்கு மதிப்பு, மக்களிடையே செல்வாக்கு யாவும் கிடைக்கும்.

தமிழ் இலக்கியத்திலே ஒரு சம்பவம். பல நூறு ஆண்டுகள் பின்னோக்கி வாருங்கள். அதோ அந்த அழகிய நகரத்தின் கோடியிலே ஒரு இளைப்பாறும் மண்டபம். மண்டபத்தின் ஓரத்திலே ஒருவர் தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். வெளியூரிலிருந்து வந்த களைப்பு, பல மைல்தூரம் பயணம் செய்த சோர்வு, ஆடம்பரமல்லாத எளிமையான தோற்றம், படுத்துறங்கினாலும் முகத்திலே ஒரு தெளிவு. கசடறக்கற்ற புலவன் என்று தலைமாட்டில் இருந்த ஏட்டுச் சுவடிகள் அறிமுகம் செய்கின்றன. என்ன ஆச்சரியம்! அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படைப்புடன் ஆட்சி செய்யும் அவ்வூர் அரசன் பரிவாரம் புடைசூடி அங்கு வருகிறான். படுத்துறங்கும் புலவனைப் பல நாட்களாக எதிர் நோக்கியிருந்தானோ இல்லை பாடல் ஒன்று யாப்பதற்கு அவசியம் தான் வந்ததோ! பாராளும் மன்னன் தேரிறங்கி வந்தான்! ஊர் மக்கள் வாழ்த்தொலியை உஸ் என்று அடக்கிவிட்டு கண் உறங்கும் கவிஞன் அருகே கால் நடந்து வந்தான். களைப்பாறும் கவிஞனின் கண்ணுறக்கம் கலையாமல் காவலனிவன் சாமரம் வீசி நின்றான். கற்பனைக் கதையல்ல இது. சங்க இலக்கியத்தில் காண்கின்ற காட்சி. காவலன் ஒருவன் கவிஞனுக்குச் சாமரம் வீசி நின்றான் என்றால் 'அந்தக் கவிஞன்' உயர்வு எத்தகையது என்பது தெளிவாகும். அந்தப் பெருமைக்கரிய புலவர் தான் மோசிக்கீரனார்!

கவிஞன் என்ற இனம் புவியாளும் மன்னனைவிட உயர்ந்த இனம். அந்த இனத்தின் வழித்தோன்றல் தான் நமது கவி. கந்தவனம்.

கந்தவனம் என்றால் நல்ல கவிஞர், நல்ல தமிழர், நல்லாசிரியர், நல்ல நண்பர், நல்ல குடும்பத்தலைவர், நல்ல சமூகவாதி, நல்ல பேச்சாளர், நல்ல எழுத்தாளர் என்று பல வகையாலும் தாய் நாட்டிலும் சரி வாழும் நாட்டிலும்சரி பலராலும் அறியப்பட்டவர், நேசிக்கப்படுவர்.

இந்தக் கவிஞனால் பிறந்த ஊர் சிறப்புப் பெற்றது, புகுந்த ஊர் புகழ் சூடிக் கொண்டது.

வாழ்ந்த நாடு வாழ்த்துப் பெற்றது. வாழும் நாடு தமிழால் வளம் பெறுகிறது.

அகவை அறுபதின் நிறைவை விழாவாக்கி இலக்கிய உறவுக்குப் பாலம் அமைக்கும் கனடா, தமிழ் எழுத்தாளர் இணையத்தின் எழுத்தாளர் நண்பர்கள் கந்தவனக் கவியின் வழி நின்று நல்ல தமிழ் எழுதுவோம். நற்றமிழ் நூல்களை ஆக்கிடுவோம்!

வாழ்க தமிழ்! வளர்க கந்தவனத் தமிழ்த் தொண்டு.

# நானும் ரசிகன்.

கவிஞர் கந்தவனம் அவர்களின் மணிவிழா சார்பாக வெளியிடப்படும் மலரில் ஒரு இதழில் என்னையும் எழுதுமாறு கேட்டார்கள். இது அவருக்குப் பெருமை சேர்ப்பதைவிட கவிஞரின் மணிவிழா மலரில் எழுதியதால் நான்தான் அதிகம் பெருமையடைந்து கொள்கிறேன். கவிஞர் தொட்டதெல்லாம் பொன்னாகும் இராசி படைத்தவர். புகலிட கவிஞர்களில் அதிகம் எழுதிக் குவித்தவர். இவை கவியாக, கவிதையாக கட்டுரையாக, ஆய்வுக்கட்டுரையாக, குறளாக பெரும்பாலான பத்திரிகை, சஞ்சிகை, மலர்கள் என்ற பல சாதனங்கள் ஊடாக வெளிவந்தன.

அவருடைய எழுத்தாற்றல், தமிழறிவு இலக்கிய உலகப் புரிந்துணர்வு, நட்பு, நகைச்சுவை என எத்தனையோ சிறப்புக்களை இந்த சாதனங்கள் ஊடாக நான் பார்த்தேன். இன்றும் நான் அவரை உருவகப் படுத்திப் பார்ப்பதுண்டு. இலங்கையில் சில கவியரங்குகளில் பார்த்த ஞாபகம் மட்டுமே பழைய கதை.

இந்த பழைய கதை என்றவுடன் ஞாபகம் வருகிறது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் 1960களிலிருந்து ஏற்பட்ட மாறுதல்களும் வளர்ச்சியும், யதார்த்த இலக்கியம், இடது சாரிச் சித்தாந்த வளர்ச்சியும் இலக்கியங்களும், தமிழர் மீதான ஒடுக்கு முறையும் தமிழ் விடுதலை இலக்கியங்களும் என்பதை முக்கிய இடத்தைப் பிடிக்கத் தொடங்கின. பண்டிதர், வித்துவான்களால் மட்டுமே முடிந்த கவிதைப் படைப்புகள் புதிய பரிமாணத்தை எட்டின. சமூகத்தின் பழைமை சித்தாந்த வாதங்களைத் தூக்கியெறிந்து முற்போக்கு இலக்கியம் படைக்கும் ஆர்வம் மேலிட்டது.

இதிலே முற்போக்கு இலக்கியத்துள்ளும் அவரவர் சார்ந்த அரசியல் சித்தாந்த அடிப்படையில் வட்டங்கள் தோன்றின. இவற்றின் சர்ச்சைகளுக்குள் அகப்படாத ஆனால் சிறப்பாக இலக்கியம் செய்த யாழ். இலக்கிய வட்டம் போன்ற வட்டங்களும் இருந்தன. இத்தகைய வட்டங்களுக்குள் இருந்த பாமரக் கவிஞர்களில் முதன்மையானவர்களுள் கவிஞர் கந்தவனம் அவர்களும் ஒருவரென நாம் நிச்சயமாக கூறலாம்.

கவிஞர் இடதுசாரி, முற்போக்கு கவிஞர்களுடன் இலக்கிய உறவையும், நட்பையும் பேணி இருந்திருக்கிறார் என்றால் அதன் கருத்து அவர் சமூக மாற்றத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளார் எனலாம். அவருடைய சில கவிதைகளில் எமது மக்களுக்குள் இருக்கக்கூடிய சாதி, சமூக அமைப்புக்களைச் சாடியுள்ளமை சிறப்பு உதாரணங்களாகும்.

தனக்கு சரியென்றால் துணிந்து எழுதும் தன்மை கவிஞரிடம் இருந்துள்ளது. ஒரு உதாரணத்தை இங்கு குறிப்பிடல் நலம். கனடாவிலிருந்து வெளிவந்த தாயகம் பத்திரிகை சர்ச்சைக்குள்ளாயிருந்த நேரத்தில் சிலகட்டுரைகளை அவ்வப்போதும், இவ்வார சிந்தனைக்கு என்ற தலைப்பில் குறள் வடிவ இருஅடி குறுங்கவிதைகளையும் எழுதிவந்தார். இது அவரது அணிசேரா தன்மையையும் உலகம் விரிந்தது என்ற பரந்து பட்ட பார்வையையும் கொண்டிருக்கிறார் என்றதை கோடிட்டு காட்டி நிற்கிறது.

இறுதியாக கவிஞர் எவ்வளவோ எழுதிக்குவித்தபோதும் அவையெல்லாம் அவருடையகுறளுக்கு ஈடாகுமா? இதோ நான் வெகுவாக ரசித்த ஒரு குறள்.

"அலுவல் முடியும்வரை அடிக்கடி வருவார் அலுவல் முடிந்த பின் அடிக்கவும் வருவார். எனது விருப்பமெல்லாம் கவிஞர் பத்துக் குறள் வீதம் அகதி, மனைவி, பிள்ளை, பணம், வீடு, உறவு, சொந்தம் என்ற தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து இன்றைய இங்குள்ள வாழ்க்கை முறையை குறளாக படம்பிடிக்க வேண்டும். அது நகைச்சுவையுடன் சிந்தனைக்குரியதாகவும் இருக்க வேண்டும். குறைந்தது முப்பது அதிகாரங்களாவது எழுதி விரைந்து செல்லும் உலகத்துக்கு இலகுவாக படித்து முடித்து பயன் பெறும்படி வெளியிட வேண்டுமென்பதே. எனது இந்த ஆசையை கவிஞர் நிறை வேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை உண்டு.

நீடு வாழ்க கவிஞர்! வெல்க தமிழுலகம்!!

**சின்னத்தம்பி வேலாயுதம்**

# கவி நாயகன் கதை

இது ஒரு வரலாற்றின் வரலாறு, வாழ்வாங்கு வாழ்ந்த மாமனிதன் வாழ்க்கை விளக்கம், கம்பன் இன்று இருந்திருந்தால் பல படலங்கள் வடித்து பாடநூலாக்கி பவனிவர விட்டிருப்பான்.

ஆனால் இந்தக் கவிதாராஜனோ இமயத்தின் உயரத்தை முழந்தடியால் அளக்கப் புறப்பட்டு விட்டான். ஆழக் கடல் நீர் என அறிந்தும் சிறு குடத்தால் அளவிடத் துணிந்து விட்டான்

ஒரு ஆவல், இந்த மூதறிஞனின் கதையை எழுதுவதன் மூலமாவது என் எழுதுகோல் பெருமை தேடிக் கொள்ளட்டும்..

அருச்சுனனோ கர்ணனோ துரோணாச்சாரியாரின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதுவதை விட ஏகலைவன் எழுதுவதே மேல் என்று எண்ணுகின்றேன். காரணம் அவர்களுக்கு அவர் குலக்குரு........... ஏகலைவனுக்கோ குல தெய்வம்.

இதுவரை நேர்முகம் நோக்காமல் கந்தவனத்தை தமிழையே காதலித்து தமிழை ஆழும் திறனைக் கற்றுக் கொண்டதனால் அவன் தமிழால் அவன் கதையை கூறவிழைகிறேன்.

நான் கற்றது கடுகளவு கல்லாதது கந்தவனம் அளவு என்று கவிதைக் களத்தில் நின்று அவனிடம் தமிழை யாசித்தேன். இந்த அறிவுச் சுரங்கத்தின் வாழ்வின் நிகழ்வுகளை ஓர் இருபக்கங்களில் சுருங்கச் சொல்வது கடினமான போதும் மணிவிழா மலர் சரித நூலாகி விடக்கூடாது என்பதற்காக மணித்துளிகளாக சிலவற்றை எழுதி முடிக்கலாம் என்று தொடர்கிறேன்.

புன்னையும் தென்னையும் பூம்பொழிற் சோலைகளும் மண்ணின் செழிப்பின் மாண்பு சொல்லும் மாகளனி வயற்காடும் மலிந்த நுணாவிலம்பதியிலே இந்தக் கந்தவனம் 1933ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 28ம் நாள் அரும்பாகி இதழ்விரிந்து முத்தமிழ் மணம் பரப்பியது.

இந்த நடமாடும் பூவனத்தை தன் கருவறையிலே சுமந்து பெற்று தமிழர் நெஞ்சமெல்லாம் உலாவரவிட்ட புண்ணியவதி சின்னம்மாவையும்.

இவ் வண்ணம் இவன் இருக்க இவன் தந்தை எவ்வண்ணம் நோற்றானோ என்று உலகம் வியந்து நிற்க சான்றுகள் கொடுத்து தமிழமுதம் சுரக்கும் அமுதசுரபியாக ஆக்கி வைத்த பண்புசால் தந்தை விநாசித்தம்பியையும் போற்றத் தமிழினம் கடமைப்பட்டிருக்கிறது.

நாவலனைப் பெற்றெடுத்த நல்லூர் போல் சோம சுந்தரனைப் பெற்றெடுத்த நவாலி போல், கந்தமுருகேசரொடு கதிரவேற்பிள்ளையையும் பெற்றெடுத்து புகழ் சுமந்த புலோலிபோல் இன்னும் பேரறிஞர் பலர்தனை தன்மடியில் சுமந்து தலைநிமிர்ந்து புகழ்செழித்து நிற்கும் கிராமங்களைப்போல்

ஈழத்தின் இங்கர்சாலை மனிதத்தின் மறுபதிப்பை இன்னவன் பிறந்திலனேல் இருந்தமிழ் இனி வாழுமோ என்ற அச்சத்தை விரட்டிய வீசுபுகழ் ஆசுகவி கந்தவனத்தை சுமந்த நுணாவில் மண் மங்கை பூரித்து நின்றாள்.

ஞானசம்பந்தன் ஞானப்பால் உண்டதும் தன் மூன்று வயதிலே பரமனைநோக்கி பதிகம் பாடியதும் பூர்வீகப் புழுகுக்கதையென்றல்லவா நினைத்தேன்.

கந்தவனக் குட்டியின் சுட்டித்தனத்திலும் அறிவறிந்த ஆற்றல் கலந்திருப்பதைக் கேள்விப்பட்ட போதுதான் ஞானசம்பந்தன் கதைகூட உண்மையாய் இருக்கும் என்று துணிகிறேன்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும் வாழுவான் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பது கிராமிய முதுமொழி.

இவன் விழிமலர்ந்து உலகத்தை பார்த்த வேளையிலேயே தன் கருத்து விழிகளையும் அகலத் திறந்து செய்யும் குறும்பிலும் செம்மை இருக்கக் கண்டு பெற்றவரும் மற்றவரும் வியந்து நின்றார்கள்.

## கவிதாரஜன் "தமிழாலயம்" தலைவர் மணிவிழாக்குழு

பாலன் கந்தவனம் 1939 தைத்திங்கள் தைப்பூச நன்நாளிலே நுணாவில் மேற்கு கணேச வித்தியாசாலையிலே மணலை முன்பரப்பி தன் விரலால் அகரத்தை அந்த மண்மேல் பதிய எழுதிய போதே எழுத்தை ஆழும் வித்தைதயை அவன் கைகளுக்கு கலைவாணி வழங்கியிருக்கிறாள்.

1946ம் ஆண்டு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் கல்விக்காக தன் கால்களை பதித்துக் கொண்டான். அந்தக் கல்விச் சாலையில் அவன் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் மேடைகளில் அவன் தமிழ் முழக்கங்கள் எதிரொலிக்கத் தொடங்கியது.

1948ம் ஆண்டு இவனது முதல் படைப்பைச் சுமந்து வந்த ஈழகேசரி ஒரு நல்ல எழுத்தாளனை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமையை தேடிக் கொண்டது. பாலர் பகுதியில் வெளியான அந்தக் கட்டுரைக்கு "ஒருகால் மூன்றுதலை" எனத் தலைப்பிட்டிருந்தார் என்று சொல்வதை விட அந்த தலைப்பின் மூலம் தன் தரத்திற்கு ஓர் தனித்துவம் உண்டென்பதை உணர்த்தியிருந்தார் என்பதே பொருந்தும்.

பத்திரிகை உலகத்தின் சக்கரவர்த்தியாக நித்தமும் ஊர்வலம் வந்து கொண்டிருந்தார்.

இவன் எழுதுகோல் வாசகர் மனதை வசியம் செய்து கொள்ளும் மந்திரக் கலையை எங்கே கற்றுக் கொண்டது?

1954ம் ஆண்டு "ஒன்றரை ரூபாய்" என்ற நூலை தன் முதல் வெளியீடாக இலக்கிய உலகுக்கு தந்தார்.

1954 ஆனிமாதம் மேற்படிப்பிற்காக இந்தியா சென்று சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் மாணவ வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருந்தார்.. பின்னர் 1956 முதல் 1958 வரை கோவை கலைக்கல்லூரியில் புவியியல் பட்டப் படிப்பையும் முடித்து தாயகம் திரும்பினார்.

மாணவனாக இருந்த கந்தவனம் ஆசிரியனாகிறான் போதனைகளை கேட்டு அதன் நெறியில் நின்று வளர்ந்தவன். இப்போ போதனைகளால் மாணவ சமுதாயத்தை கட்டி யெழுப்பும் சாதனை படைக்கத் தொடங்கி விட்டான்.

காம்போதியில் கிடந்த மாணவர்களை கல்யாணிக்கு அழைத்து வந்தான்.

மாத்தளை சென்தோமஸ் கல்லூரி மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஆமாம் அங்கேதான் எங்கள் கந்தவனம் ஆசிரியப் பணிக்கு அறிமுகம் செய்யப்பட்டார்.

1965ல் பாடப்புத்தக சபையில் பணியாற்றிய இவர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலத்திற்கு விரும்பிக்கேட்டு ஆசிரியப் பணியாற்ற வந்தார்.

ஆசிரியப் பணியையும், இலக்கியப் பணியையும் தன் இருவிழியாகக் கொண்டு செயற்பட்டு வந்தார்.

பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் எங்கும் கந்தவனத்தின் முத்திரை பதிக்கப்பட்டது.

இந்த ராமன் சீதையைச் சேரும் நாள் நெருங்கியது. குரும்பசிட்டியிலே அந்த ரோஜா இவனுக்காக பூத்துக்கிடந்தது. 1964 ஆவணித் திங்கள் 20ம் நாளில் தன் மார்போடு அந்த தவமணி மலரை அணைத்துக் கொண்டான்.

திருமதி தவமணி கந்தவனம் தனது கணவரை தமிழ் மணம் கமழும் நந்தவனம் ஆக்கிப் பார்ப்பதில் பெரிதும் நாட்டம் கொண்டவராய் கணவனின் தமிழ்ப ணிக்கு பக்கத் துணையாய் இருந்து வந்தார்.

கந்தவனச் சேவையால் தமிழ் இலக்கிய உலகம் செழிப்படைய காரணமாய் இருந்த அன்னை தவமணிக்கு தமிழ் கூறும் உலகம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளது.

அல்லலை அகற்றி நல்லவை நாடி எல்லோர்க்கும் இனிதுறவாழ்ந்து இறையருள் பெற்று இல்லறம் இயற்றிய காரணத்தால் பேற்றிலும் உயர்ந்த பேறாம் நன்மக்கட்பேறு பெற்று மகிழ்ந்திருப்பதை இன்றும் காண்கிறோம்.

"தக்கார் தகவிலர் என்பது அவ்வவர்
எச்சத்தால் காணப்படும்"

இந்த மெய்மொழியின் விளக்கங்களாய் இவர் மகன் வாரணனும் மகள் வாணியும் கல்வி கலைஞானங்களில் மேம்பட்டவராய் தந்தை எனும் கோபுரத்து கவசங்களாய் வாழ்ந்து வருகிறார்கள்.

ஈழத்தில் மட்டுமல்லாமல் இவரின் ஆசிரிய சேவை தென் ஆபிரிக்காவிலும் தொடர்ந்தது. 1980 முதல் 1988 வரை தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்க மக்களினது நன்மதிப்பிற்குரியவராக இருந்து பிரியா விடைபெற்றுக் கொண்டார்.

கந்தவனம் அறிந்தவை, அறியாதவை என்று இனம் பிரித்தால் தீயவை செய்தறியான், தீங்கு நினைத்தறியான், பிறர் துன்பம் கண்ட போது எனக்கென்ன என்று இருந்தறியான்.

அவன் அறிந்தவை கூறின் விரிபெருஞாலத்து இறந்தார். தொகையை எண்ணுதற்கு ஈடாகும்.

நான் ஓர் விரிந்த வானத்தை குடையளவாய் சுருக்கியிருக்கிறேன். என் கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியதுபோல் மணிவிழா மலரின் நாயகனை அடையாளம் காட்டுவதற்காக அவன் சரித்தின் சாரத்தை மட்டும் எழுதி வந்திருக்கிறேன்.

இந்தக் கட்டுரைக்கு ஆதாரமான பல தகவல்களை தனது எழுத்துலக பிரவேசத்தால் மக்கள் மத்தியில் இன்று மிகவும் பரீட்சயமானவரும் கவிஞருக்கு ரொறொன்ரோ மாநகரில் முதன் முதல் "மணிவிழா" நடாத்த மூலகர்த்தாவாக செயற்பட்டவருமான என் மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜெகதீசன் அவர்கள் எழுதிய "கவிநாயகர் கந்தவனம்" என்ற நூலில் இருந்து எடுத்துத் தொகுத்துள்ளேன். அவருக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் இலக்கியக் கடலில் விழ்ந்து தத்தளித்த எனக்கு கந்தவனம் எனும் கலங்கரை விளக்கத்தை அறிமுகம் செய்து இலக்கியப் பயணத்திற்கு வழிகாட்டிய என் நண்பர் வீணைமைந்தன் அவர்களுக்கும் இங்கே என் நன்றியறிதலை இக்கட்டுரைவாயிலாக கூறிக் கொள்கிறேன்.

இலக்கிய வானில் முப்பது நாளும் பௌர்ணமியாக கந்தவன நிலவு இன்னும் பல்லாண்டு காயவேண்டும், தமிழும், தமிழ்கலையும், பண்பாடும் கறையகற்றி செழித்திருக்க நிறைந்த இவன் சேவை நீள்தரையில் நித்தமும் தொடர்ந்து வர இறையருள் கொண்டு கந்தவனப் பெரியோன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

## புவிபோற்றும் கவிவேந்தே!

கந்தவனக் கவியே! கவிக்கெனவே நீ பிறந்தாய்
சிந்தை குளிரும் உந்தன் செந்தமிழ்க் கவியாலே
சந்தமும் நாம் மகிழச் சாலவே நற்கவி தந்து
வந்தனைகள் பல செய்தே வாழ்த்த வைத்தாய் எந்நாளும்

அன்றங்கு அயலிருந்து அரிய பல கவி தந்தாய்
மன்று பல கண்டு மணி மகுடம் சூடி நின்றாய்
இன்று இங்கும் இனிய பல கவி படைத்து
வென்று நல் விதயங்கள் இவ்விழாவுக்கே வித்திட்டாய்.

நான் என்ற மமதை இல்லாய் நல்லதெல்லாம் செய்திடுவாய்
வான் மழை போல் கவிசொரியும் வன்மையுள்ள கவிராய
தேன் ஒழுகும் விநாயகப்பா தித்திக்கப்பாடி எங்கள்
ஊன் உருகி இறையை உணர வைத்தாய் அழகாக

கவிபாடக் கம்பன் என்ற காலந்தான் மாறியதோ?
புவிபோற்றும் கவிவேந்தே! நின் புகழுக்கு எது ஈடோ
சலியாது கவி பாடும் சற்குணனே! கந்தவனம்
நிலையான சுகம் பெற்று நீடூழி வாழியவே!

**பவளம். சண்முகம்**

# கவிதை எழுதும் கலை.

இரவீந்தரநாத் தாகூரிடம், "நீங்கள் ஏன் நல்ல நாடகாசிரியராக இருந்தும் பல நாடகங்களை எழுதுவதில்லை?" என்று நண்பர்கள் கேட்டனர். தாகூர் விடையிறுத்தார், "சில நாடகங்களை நான் எழுதத் தொடங்கி, பல காட்சிகளை அமைத்த பின்னருங்கூட இடையே ஒரு பாட்டு புகுந்து என் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்ள, நான் பாடலில் என்னை இழந்து நாடகங்களைத் தொடர முடியவில்லை." இதுவே கவிதையின் ஆற்றல்!

நூறாண்டுதோறும் ஒரு ஷேக்ஸ்பியர், காலந்தோறும் ஒரு கம்பன், எழுச்சியில் ஒரு பாரதி, புரட்சியில் ஒரு பாரதிதாசன் தோற்றுவிக்கப் படுகிறார்கள் என்பதே உண்மை! உணர்ச்சிகளின் உந்துதலில் உருவாக்கம் நிகழ்கிறது. காலைச் சுற்றிக் கட்டிக்கொண்டு அழுது தூக்கச் சொல்லும் குழந்தையைப் போல, கவிதை இதயத்தை இறுக அணைத்துக் கொள்கிறது.

ஒரு சோதனைச் சாலையில் வேதியியல் சேர்க்கைகளின் விதிமுறைகளைக் கற்று நாம் விரும்பிய விளைவுகளை அடைவது போன்றது அல்ல, கவிதையின் படைப்பு. 'ஒரு சொல், ஒரு வில், ஒரு இல்' என்பதைப் போன்ற விழுமிய வாழ்வு படைத்தது அது! பொருந்தாதவை, கடலலைகள் ஒதுக்கித் தள்ளுகிற உயிரற்ற சடலமாய் வெளியில் வந்து விழும்! உணர்வலைகள் கவிதையின் தூய்மையைக் காப்பதும் இப்படித்தான்!

ஆங்கிலக் கவிஞர் டென்னிசனைப்பற்றிய ஒரு செவி வழிச் செய்தியொன்றுண்டு. நிலவைப்பற்றிய தம் அழகியற் சுவையைச் சொல்லோவியமாக்கினார் கவிஞர். ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட சொல் அவருக்கு மனநிறைவைத் தரவில்லை. வேறு ஒரு சொல் பொருத்தமாய் அவ்விடத்தில் அமரவுமில்லை. சில திங்கள் கழிந்தன. முழுமதி நாளின் இரவு விருந்தொன்றில் அவர் கலந்து கொண்டு, அந்த நிலாப் பெண்ணைப் புனைய இயலாமையை, நினைந்து தவித்தபோது அவருடைய காதில் தேனாய் இறங்கியது அந்த மழலைச் சொல், "Uncle, Uncle, see how cute is the moon"-உள்ளம் துள்ள cute என்னும் சொல்லை உரிய இடத்தில் சேர்த்து மகிழ்ந்தார் என்பர். சொற்றேர்வு (Diction) என்று இதனைத் திறனாய்வாளர் கூறுவர்.

யாப்பு, மரபு இவற்றையெல்லாம் மீறியும் தோன்றுகிற புதுக் கவிதையோ வடிவங்களுக்குள் சிறைப்பட்டுக் கிடப்பதே பொருள் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. கூண்டுக்குள்ளே இருக்கிற பறவையைவிட, வானில் திரிகிற பறவையே பிறவிப்பயன் (சிறகின் பயன்!) பெற்றது. வேளாவேளைக்குத் துன்பமின்றி உணவு பெறுகிற கூண்டுக் கிளியைவிடத் தானே அலைந்து தானியம் சேர்த்து உண்ணும் சுதந்திரக் கிளிக்குத் தானே வாழ்க்கை மகிழ்வுடையது!

வெறும் செங்கற்களால் ஆன கட்டடம் ஒன்று வீடு எனப்பெயர் பெறினும், அது இல்லறமாய்த் திகழ அங்கு ஒரு குடும்பம் வேண்டும். ஆனால், கூரையின்றியும் கூடாரமிட்டும் மரத்தடியில் தவிக்கிற மனிதர்களோ பாசப் பிணைப்பினாலேயே ஒரு குடும்பமாய்த் திகழ முடியும்.

அது போல, **எண்ணங்களிலேயே கவித்துவம்** இருப்பின், அதன் வெளிப்பாடு சிறப்பாய் அமையும். நினைவின் கை கால்களைத் தொல்லைப் படுத்தி, அலங்காரங்களையே விலங்காக்குகிற வீண் பழைமைகள், இயல்பான கவிதைக்குத் தேவையில்லை. அது சுகப்பிரசவம்!

சந்தம், ஓசை, தளை, தொடை என மரபுக் கூறுகள் தரும் கவிதை மதிப்பை, இவை எவையுமற்ற ஒரு புதுக்கவிதை விஞ்சி நிற்கலாம். சீனத்து யென் கவிதையயொன்று:

"வாழ்க்கை ஒரு வாளைப் போன்றது!
அது காயப்படுத்தும்! தான் காயப்படாது!
வாழ்க்கை கண்களைப் போன்றது!
மற்றவற்றைப் பார்க்கும்! தன்னைப் பார்க்காது!"

**கலாநிதி நிர்மலா சுரேஷ்**

எண்ணங்களில் கவித்துவம் இருந்தால், கருத்தே கவிதை யாகும். மொழி பெயர்ப்பைக் கடந்தும் நிலைக்கும்.

பைபிளில் இடம் பெறும் ஒரு நிகழ்ச்சி இரண்டு அடிக்கவிதையானது. கானாவூர் திருமணத்தில் திராட்சை ரசம் தீர்ந்துவிட்டது. தண்ணீர்க் குடங்களைத் திறந்து பார்த்து ஆசியளித்தார் ஏசு, தண்ணீர் திராட்சை ரசமானது. அதைக் கூறுகிறார் ஆங்கிலக் கவிஞர்:

"தண்ணீர், தன்னைப் படைத்த நாயகனைப் பார்த்து நாணிச் சிவந்தது."

அஞ்சல் பெட்டிகள் ஏன் சிவப்பாக உள்ளன? தமிழ்க்கவிதை யொன்று சொல்லும்:

காதல் கடிதம் எழுதி,
நீ ஒரு அஞ்சல் பெட்டியில் போட்டாய்!
ஊரிலுள்ள பெட்டிகள் எல்லாம்
வெட்கத்தால் சிவந்துவிட்டன!"

கற்பனைகளில் மட்டுமல்ல, அடிமன ஆழங்களை எடுத்துரைப்பதிலும் உரைகளே கவிதையாகக்கூடும்! தன் காதலி செல்மாவைப் பற்றி **கலீல் கிப்ரான்** கூறினார்:

"அந்த நேரத்தில் செல்மா, ஒரு சிநேகிதியைவிட அன்புடையவளாய், ஒரு சகோதரியைவிட நெருக்கமானவளாய், மனத்துக் கினியவளைவிட நேசமுள்ளவளாயிருந்தாள்.

"சிவனால் எரிக்கப்பட்ட மன்மதன், ரதிதேவியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவானாம். அது போல, இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக்கவிதையின் உருவமும் உண்மையான இலக்கிய ரதிகளுக்கே தென்படக்கூடும்" என்பார் மீரா.

கவிதை என்பது ஒரு நூலில் அச்சடிக்கப்பட்ட சொற்களல்ல. அது கவிஞனின் மனச்செயல். இதயப்பரிமாற்றம், படைத்தவருக்கும் படிப்பவருக்கும் இடையே தேவை.

விஞ்ஞானி என்பவன் விளங்கிக் கொள்கிறான், கவிஞன் என்பவன் விளக்கிச் சொல்கிறான் எனக் கூறுவர்.

வாழ்க்கை நான்கு வகையான வழிகள் அல்லது மதிப்புகளை உடையது. சமயம், ஒழுக்கம், அழகியல், அறிவு என்பவையே அவை. எல்லா மனிதர்களும் ஏதோ ஒரு வழியில் நடக்கிறார்கள். அழகியல் சார்ந்தது கவிதை!

மேற்கூறிய கருத்து ஒரு கொள்கையெனில், 'கவிதையென்பது விளக்கிச் சொல்வதன்று, பாதியைக் கூறி மீதியை மறைப்பதே" என்பதும் வளர்ந்து வரும் ஒரு நம்பிக்கை! ஜப்பானிய ஹைகூக் கொள்கை இத்தகையதே!

இதுவரை நாம் கண்டவை, கவிதையின் **உருவம், உள்ளடக்கம்** பற்றிய பொதுவான சிந்தனைகள். மூன்றாவது கூறான **உத்திகள்** என்பதே கவிதைக் கலை–யாகும். 'கவிதை கவிதைக்காகவே' அல்லது 'கவிதை சமுதாயத்திற்காகவே' என்னும் இரு வகைக் குரல்களில் பின்னது வலுப்பட்டிருக்கிற நிலையிலும், இவையிரண்டிற்கும் துணை செய்கிற **உத்திகள்** அனை–வரும் பின்பற்றுவனவே!

**படிமம், குறியீடு** ஆகிய இரண்டும் தற்காலக்க விதையின் இன்றியமையாச் சிறப்பியல்புகளாய் வளர்ந்துள்ளன. இவ்வுத்திகளைப் பற்றி ஆராயும் முன்னர்த் தற்காலக் கவிதை களை வகைப்படுத்திக் கொள்வோம்.

கவியரங்கக் கவிதைகள்! பெரும்பாலும் இளகிய நடையில் விளக்கமாகவே அமைகின்றன, உரை சார்ந்த கவிதைகளாகவே உள்ளன.

தொலைக்காட்சிக் கவிதைகள், வானொலிக் கவிதைகள் ஆகியனவும், மேடைக் கவிதைப் பாணியிலேயே அமைகின்றன.

செறிவும் இறுக்கமும் உயர்கலை நுணுக்கமும் பிணைந்திருந்தால், ஒரே ஒரு முறை மட்டுமே கேட்க வாய்ப்புள்ள சுவைஞர்க்கு செய்தி சென்று எட்டாமல் போகலாம். இது கருதியே இக்கவிதைகள் ஓரளவு எளிமையாகவும் விரிவாகவும் அமைகின்றன. உயர்கலை நுணுக்கங்கள் மிகுதியாக இருப்பின் கேட்பவர் அதைப் பாராட்டினாலும், முழுவதையும் நினைவில் இருத்திக் கொள்ளவோ, எண்ணத்தில் மீட்டுக் கொணரவோ இயலுவதில்லை. எனவே, இத்தகு கவிதைகளைப் படைப்போர், கருத்துக்காக ஒரு பகுதி, கலைக்காக ஒரு பகுதி, நயங்களு க்காக ஒரு பகுதி என அமைத்தலே பொருத்த முடையது.

இனி, இதழ்களில் வெளியாகும் அல்லது நூலாய் அச்சிடப்பெறும் கவிதைகள் தம் முழு ஆற்றலையும் காட்ட வல்லவை.

**எஸ்ராபவுண்ட்** தம் கவிதைக் கோட்பாடுகளில் மூன்று தன்மைகளை வரையறுக்கின்றார். அவை, பொருளை நேரடியாக அணுகுதல், தேவையற்ற ஒரு சொல்லைக் கூடப் பயன்படுத்தாதிருத்தல், கடினமான யாப்பு முறைகளைத் தவிர்த்து இசையின் எளிமையைப் பின்பற்றல். இம்மூன்று உத்திகளையும் பின்பற்றினால் கவிதை சிறக்கும் என்பது அவர் கருத்து.

பொருளே வடிவமாகும் என்னும் சிறப்பானதோர் உண்மையை உணர்த்தியவர் எஸ்ரா பவுண்ட் ஆவார்.

"இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?

என்னும் கவிதை இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

**படிமம்:**

ஓர் ஓவியமோ, சிற்பமோ அல்லது காட்சியோ தன்னைச் சொற்கள் மூலமாக வெளிப்படுத்திக் கொள்வதே **படிமம்** ஆகும். மனப்பாவனையை நொடிப்பொழுதில் தெரியக் காட்டுவது இது!

ஓர் இயற்கைச் சூழ்நிலை எளிமையாகப் படிமமாக்கப்படலாம்.

(எ.கா)

"புன்னை மர நிழல்...........
புதுமணல் விரிப்பு.........
தாழை ஏட்டின்
சுகந்தக் கவிதையை
வாரி இறைக்கும்
தென்றற் காற்று..................

ஓர் உருவகத் தோற்றம் தரும் முறையிலும் படிமம் அமையலாம்.

(எ.கா.)

"இருட்டைப் பிழிந்து
எடுத்து வைத்ததுபோல்
படுத்திருந்தது ஆட்டுக்குட்டி
பாதை ஓரம்
காலை நேரம்."

கருத்துகளைக் கூடப் பருப்பொருளாக உருவகம் செய்து தெளிவாகப் படிமத்தைக் கையாள முடியும். ஒரு நம்பிக்கை செத்துக் கிடக்கிறது என்னும் தலைப்பில் வருகிற படிமமிது.

"ஒற்றையடிப் பாதை.........
எந்த ஊரிலும்
இரையெடுக்காமல்
இளைத்து இளைத்து
எங்கேயோ போகிற
ஒற்றையடிப் பாதை"

இழந்த நம்பிக்கை ஒற்றையடிப்பாதையைப் போன்றது என்னும் உவமையே உருவகப்படுத்தப்பட்டு, படிம வடிவம் மேற்கொண்டது.

உவமைகள், உருவகங்கள், வருணனைகள் ஆகியவையே செறிவு. இறுக்கம், தெளிவு இவற்றை மேற்கொண்டு படிம வடிவமாகலாம். நெஞ்சம் நினைப்பதை ஓவியமாய்த் தீட்டுகிற முயற்சியிது!

**குறியீடு:**

உணர்வின் ஆழத்தையும் அழுத்தத்தையும் குறியீடுகள் மூலம் எழிலுடனும் ஏற்புடனும் கூறமுடியும். குறியீடுகள் வாழ்விற்குப் புதியன அல்ல. **குழந்தையை 'கண்மணி'** எனவும், **பெண்ணை 'பூ'** எனவும், **'மான்'** எனவும் **'கண்ணகி'** எனவும், நம்பிக்கையை 'விடியல்' எனவும், துன்பத்திற்குப் பின்வரும் மகிழ்ச்சியை 'கிழக்கு' எனவும், 'பூபாளம்' எனவும், சோகத்தை 'முகாரி' யெனவும், இன்பத்தை 'வசந்தம்' எனவும், வீரத்தில் சிறந்தவனை 'கட்டபொம்மன்' எனவும், காட்டிக் கொடுப்பவனை 'எட்டப்பன்' எனவும் கூறுதல் உலக வழக்கில் உள்ள குறியீடுகளாம்.

அவ்வாறே கவிதைகளில் போலித்தனம் 'முகமூடி' யெனவும், சத்தியம் 'சூரியன்' எனவும், அடிமைத்தனம் 'இருட்டு' எனவும், புரட்சி 'பூகம்பம்' எனவும், ஒழுக்கமின்மை 'சிவப்பு விளக்கு' எனவும், காலத்திற்கேற்ப மாறுவோர் 'நாணல்கள்' எனவும், கோழைத்தனம் 'புழு' எனவும், கவிஞர்கள் 'வானம்பாடிகள்' எனவும் குறியீடுகளாய் அமைவதுண்டு.

நிறங்களும் குறியீடுகளாகின்றன. ஆனால், இவை நாட்டுக்கு நாடு வேறுபடலாம். 'நீலம்' ஆழத்துக்குக் குறியீடாய் இருந்தது. தற்போது அதன் பொருள் சிறிது மாறியுள்ளது. 'மஞ்சள்' மங்கலத்திற்கும் தரக்குறைவான தனிமனிதர் செய்திகளைத் தரும் இதழ்களுக்கும் குறியீடாகிறது. 'பச்சை' வளமைக்கும், 'வெண்மை,' தூய்மைக்கும் குறியீடுகளாகின்றன.

இந்த எடுத்துக்காட்டுகள் யாவும் குறியீடுகளைப் புரிந்து கொள்ளவும், பொருள் எவ்வாறு இதன் மூலம் பெறப்படுகிறது என அறியவும் துணை செய்யும்.

"இசைக்க வேண்டிய சுதந்திர வீணை
சுமக்க வேண்டிய சிலுவையாய்ப் போனது"

இக்கவிதையில் சுதந்திரத்திற்கு வீணை, சிலுவை ஆகிய இரு குறியீடுகள் உள்ளன.

பாரதியின் பாடலான,

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு! தழல்
வீரத்திற் குஞ்சென்றும் மூப்பென்றும்
உண்டோ?"

என்பதும் குறியீட்டியல் வழியில் அமைந்ததுவே.

காப்பிய மாந்தர்களின் பெயர்களும் புதுக்கவிதையில் சில பண்புகளுக்குக் குறியீடுகளாய் அமைந்தன. கொடுங்கோலருக்கு 'துரியோதனர்', காப்பவன் 'கண்ணன்' (ஏ.கா)

"எந்தக் கண்ணன் இங்கு வந்தால்
கோவர்த்தனங்கள் குடையாகும்?"

எனவே, குறியீடுகளைக் கண்டுபிடிப்பதும், புதியவற்றைத் தேடுவதும் தேர்ந்தெடுப்பதும் கவிதையின் வெற்றிக்குப் பெரிதும் உதவும்.

### தவிர்க்க வேண்டியன:

நகல் கவிதைகளைப் பற்றி திறனாய்வாளார்கள், எச்சரிக்கை செய்கின்றனர். கவிதைக் கலையைக் கற்கும்போது நேர்மை தேவை. நமது கவிதை, எங்கோ கேட்டது போல் உள்ளதே' என்னும் உணர்வைப் பிறருக்கு ஏற்படுத்தக்கூடாது. பொதுவான, பலராலும் கையாளப்படுகிற சொற்கள், உவமைகள், உருவகங்கள் மீண்டும் மீண்டும் புதிய பயிற்சியாளர் படைப்பில் தலைதூக்குவது தமிழ்க்கவிதைக்கு கேடாகும். கவிதையின் உள்ளடக்கம் ஏற்கனவே உள்ள ஏற்பாடாக, சில தலைப்புகளையே சுற்றி வருதல் போலித்தனமாகும்.

"அறிஞர்கள் ஒன்று போலவே சிந்திக்கிறார்கள், சிந்திக்கலாம். ஒரு செய்தி அச்சில் வந்துவிட்டதென்றால், அதனை மீண்டும் தீண்டக்கூடாது என்ற மனவுறுதி கவிஞர்களுக்கு ஏற்பட வேண்டும். அப்போது தான் கவிதையில் ஒருங்கிணைப்பு இருக்கும். கவிஞர்கள் தங்கள் நூல் வெளிவருவதற்கு முன் தாங்களே ஒரு சுயதணிக்கை செய்து, இதுவரை அச்சில் வராத கற்பனைகளை மட்டுமே அச்சேற்றமுனைய வேண்டும்."

### முரண்பாடுகள்:

ஒரே கவிதையில் கூறப்படும் உவமைகள் அல்லது உருவகங்கள் ஒன்றோடொன்று முரண்படுதல் கூடாது. வேறு வேறு உவமைகள் அல்லது உருவகங்கள் ஒரே பொருளினை விளக்க வந்தால், அவை நியாயப்படுதப்பட வேண்டும். 20 அடிகளுக்குள் அடங்கும் ஒரு சிறிய கவிதையில் ஒரே குறியீடு, அதைச் சுற்றிப் பின்னிய செய்திகள், மற்றும் ஒருமைக் கற்பனை கொண்ட படிமம் அமைதல் சிறப்பாகும். (எ.கா.)

"நிலவுக்கும் தேனிலவாம்!
நீலவானத்தூல் மோகனமாம்!
நட்சத்திர அட்சதையாம்!
மேகம் தைத்த மெத்தையாம்!
செவ்வாயில் தாம்பூலம்!
புதன்செய்த மாங்கல்யம்!
வியாழனின் வாழ்த்துப்பாவாம்!
வெள்ளியில் கட்டிலாம்!
பூமிக்கு நகைப்பாம்,
சாமிக்குத் திகைப்பாம்!
பகலுக்கு வெட்கமாம்,
முகம்மறைத்துக் கொண்டதாம்!
பிரபஞ்சத் தலைவனுக்கு
இனி
சந்திரிகை சொந்தமாம்"

ஒரே கருத்தைக் கொண்ட படிமம் இங்கு இடம் பெற்றுள்ளது. தேனிலவு என்பது கருத்து!

பொருத்தமில்லாத சொல், தெளிவில்லாத எண்ணம் கவிதையைச் சிதைக்கும். (எ.கா.)

"சீக்கிரம் சொல்லிவிடு
உன் இதயமானவன்
நான் என்று
இல்லை
நீ ஏற்றிவைத்த
காதல் தீபம்
உயிர் விளக்கின்
தண்டுவடத்தையும்
உருக்கிவிடும்"

ஒரு தீபம், இன்னொரு தீபத்தை உருக்குவதாய்க் கூறுவது வழக்கன்று. உயிர் விளக்கின் தண்டுவடம் என்பது தெளிவில்லாத சிந்தனையாக உள்ளது. இத்தகைய கவிதைகள் எண்ணற்று வெளி வருகின்றன. எழுதுபவர், மனத்தில் புடம் போட்டுப் புடம் போட்டெடுத்த உணர்வுகளை எண்ணத்தில் அசை போட்டு, ஆழ இதயத்தூல் பதித்த பின்னர் வெளிப்படுத்தினால், கவிதை சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. அப்போது முரண்பாடுகள் தவிர்க்கப்படும். இதற்குரிய பொறுமையும் முயற்சியும் இன்றைய இளம் கவிஞர்களிடத்தில் இல்லை என்பதே உண்மை.

'கவிஞன் பிறக்கிறான், உருவாக்கப்படுவதில்லை' என்பர். கவிஞராய்ப் பிறந்தவரும உலகுக்கு உடனே அறிமுகமாவதில்லை. காலச் சூழலுக்கு ஏற்பவே, விரைவிலோ அல்லது தாமதமாகவே இந்த அறிமுகம் நிகழ்கிறது. ஆனால், கவிஞராய்ப் பிறந்தவரும் கவிதை உத்திகளைப் பயின்று பயன்படுத்தல் இன்றியமையாதது.

**டி.எஸ்.எலியட்,** கவிஞர்களை மூன்று வகைப்படுத்திப் பேசுவார். உத்திகளை வளர்த்து விரிவாக்குவோர் ஒரு வகையினர், மற்றவரின் உத்திகளைப் பார்த்து அப்படியே நகல் எடுப்போர் மற்றொரு வகையினர், புதிய உத்திகளைத் தாமே புனைந்து உருவாக்குவோர் பிறிதொரு வகையினர்.மிகப்பெரிய உத்தி எதுவும் இல்லாமலேயே மனந்தொடும் கவிதைகள் பிறப்பதுண்டு.

# கவிஞர் கந்தவனமே ஒரு கவிதை

ஆழக் கருத்து அமைந்ததுவே
அழகுக் கவிதை என்பது போல்
ஈழக் கவிஞன் கந்தவனம்
இயம்பும் கருத்து இருப்பதாலும்
வேழ மெறியும் வீரப்புற
விழுமம் கவிதைக் கிருத்தல் போல்
வாழும் கவிஞர் கந்தவனம்
வாழ்க்கை வழக்கம் இருப்பதாலும்

கவிதை கன்னி யாள் கற்பு
காக்க யாப்பு இருப்பது போல்
கவிஞன் கந்த வனச்சிறப்பைக்
காக்கும் அறநெறி இருப்பதாலும்
செவிபாய் அணியாம் செய்யுள் நயம்
செழுமை பயக்கும் சீர்போல
புவியியல் கவிஞன் கந்தவனம்
புகலும் நயமும் புனைவதாலும்.

அகமாம் வாழ்க்கைத் திணை முறைமை
அறைதல் கவிதை என்பது போல்
நகம்சதை போலக் கந்தவனம்
நல்லறம் செழித்துச் சிறப்பதாலும்
தகவுடை சொல்பொருள் ஐந்துறுப்புத்
தன்னால் கவிதான் தளிர்விடல் போல்
நிகரிலா ஐம்புலனை நிலைநிறுத்தம்
நேரியன் நெறிகளை நீடலாலும்

அசையும் சீரும் அணைந்து வரும்
அடிகள் வளரக் கவி சிறக்க
இசைவ போல கந்தவனத்
தில்லற வாழ்க்கை இருப்பதாலும்
தசையாய் அமையும் தளைபோலே
தமிழெழிற் கவிதை இருப்பதாலும்
திசை போய் தளைக்கும் கந்தவனம்
திடமாம் உடலுளம் இருப்பதாலும்.

எதுகை கொண்டு வருமடியை
எடுக்கும் கவிதை இயல்பது போல்
எதுவே வரினும் கந்தவனத்
எழிலார் திடமும் இருப்பதாலும்.
கதுவாய் - மோனை கவிதைக்கும்
கனதித் தொடர்பு கருதல்போக
மெதுவாய் செவ்வாய் விரித்துரைக்கும்
மென்றுரைத் தொடர்பு மேவலாலும்.

கவிஞன் கந்த வனத்தியல்பும்
கவிதை இயல்பும் ஒன்றாக
கவினாய் இருக்கும் திறத்தாலே
கந்த வனமும் தமிழ்க்கவியும்
புவியில் புகலல் பொருந்துமன்றோ
புகழுற அறுபது புகலாண்டுத்
தவிசி லிருத்தித் தாரணியில்
தவம் புகழ் பல்லாண்டறைகுதுமே.

ஈழத்துப்பூராடனார்

# வாழிய தமிழின் செல்வ.....!

வாழி நீ தமிழின் செல்வ
வரலாறு உனக்கே அப்பா
ஆழி சூழ் மண்ணைவிட்டு
அவலத்தில் வந்தோம் இங்கு
நாழியும் பொழுதும் நல்ல
தமிழ்க்கவி நீயோ செய்தாய்
தூளியில் இட்டு வைத்துத்
தென்றலால் வீசு கின்றோம்!

காலைகள் மாலை இன்னும்
கண்விழித் திருக்கும் எந்தக்
காலையும் தமிழை நெஞ்சிற்
காத்திடும் தலைவ வாழி
மாலைகள் தொடுத்தாற் போன்று
மரபுக்கு இலக்க ணத்தின்
சாலையை தொடர்ந்தே நல்ல
சரித்திரம் படைத்தாய் வாழி!

கணக்கிற்கு தமிழை வைத்துக்
கட்டியே உவமை சேர்த்து
அணங்கிற்கு நகையே போல
அணிசெய்த தமிழின் ஐய
வணங்கற்கு தமிழை வையா
வகைகெட்ட மாந்தர் இங்கு
குணங் கெட்டார் நீயோ மாண்பின்
குன்றேறி நின்றாய் அப்பா!

முள்ளும் உனக்கு மலரேயாகும்
முகவயப்பிற் கல்லு முருகும்
சொல்லுமழகு மனதை ஈர்க்கும்
சொல்லிடங்கி வாதம் அகலும்
இல்லையாசான் நில்லை யின்னொரு
எழுத்து ளாளன் என்பதாலிந்
நல்விழா வின்நாயக மானவி
நாயகக் கவிஞனே வாழியநீடு!

பிள்ளையார் அருளைப் பெற்று
பிள்ளையார் பாடல் செய்தாய்
நல்லையின் முருகன் பாடல்
நாற்பது தந்தாய் ஐயா!
வல்லலை தெறிக்கும் கீரி
மலையினிற் சிற்பம் செய்தாய்
எல்லைகள் நீளும் உந்தன்
எழுத்துக்கள் மாலை கண்டால்!

வாழிய கவிஞர் கந்த
வனமெங்கள் மூதறிஞ்ஞா!
வாழிய அகவை நூறு
வாழிய மனைவி மக்கள்
வாழிய தமிழின் மாண்பு
வழிகொண்டு எழுதிஎன்றும்
வாழிய புலவ வாழி
வாழி பல்லூழி வாழி!

தீவகம். வே. இராஜலிங்கம்.

# அலைகடலாய் கரவொலிகள் எழுந்தே நீளும்

செந்தமிழும் பல்கலையும் தெளியக்கற்ற
செழுங்கவியின் வித்தகனே நுணாவில்தந்த
கந்தவனக் கவிமணியே கலைப்பேராறே
காய்ந்தநிலம் கழனி எனப்பாராதெங்கும்
சிந்திநீர் பசுமைசெயும் நதியேபோன்று
சீராரும் தமிழீழ விழாக்கள்தோறும்
முந்திநீ கவிசொல்லிச் சொல்லிச்சொல்லி
முத்தமிழின் நலம்வளர்த்த முறைதான் என்னே!

கருக்கொண்ட முகிற்கூட்டம் கொட்டும்வெள்ளம்
கவிமணிநின் பாமழைக்கு ஈடோ இல்லை
பருப்போடு பால்பாகு தேனும் சேர்த்து
பண்ணான கவிப்பொங்கல் தந்தே எம்மை
விருப்போடு நின்சுவைஞர் குழாத்துள் ஈர்த்த
வித்துவத்தை யாரறிவார்! கூவிக்கூவி
உருகுகின்ற குயில்போன்று தமிழேபாடி
உயர்ந்தனை நீ கவிமணியே நீடுவாழி!

அரங்கத்தில் நின்கவிதை கேட்டுக்கேட்டு
அலைகடலாய்க் கரவொலிகள் எழுந்தே நீளும்
தரம் தெரிந்து மொழியழகு தோன்றும்வண்ணம்
தமிழ்சொல்லும் குரல்வண்ணம் நெஞ்சையாளும்
சரிந்தமனப் போக்குடையார் கூனல் கொல்லும்
சமுதாயச் சிந்தனைகள் அமைந்தே வெல்லும்
விரிந்தபுகழ்க் கவிவல நீ தமிழ்வாழ் ஆழி
வியன்கவிதை தந்தென்றும் சீராய்வாழி

பன்னிரண்டு திருமுறைகள் இராமகாதை
பரந்தாமன் அருள்பேசும் ஆழ்வார்பாக்கள்
பன்னிரண்டு விழிமுருகன் பரிசில்பாடும்
பைந்தமிழர் கந்தவேள் புராணம்எல்லாம்
இந்நிலத்தில் அமைந்தமொழி தமிழேஇந்த
அவனியிலே பத்திமொழி அதுவேஎன்றார்
முன்னையவர் வழித்தோன்றல் நீயோ என்ன
முழுநிலவே (வி)நாயகப்பா தந்தாய் வாழி!

**அனலை ஆறு. இராஜேந்திரம்**

# நவில்தொறும் நூல் நயம் போலும்

வள்ளுவனிடம் கடன்வாங்கிய தலையங்கம் ஏன்? தன்னிலும் அறிந்தோர் முன் தான் தனி மடம்மேனும் தன்மையே பெரிதென்றா? கந்தவனக் கவிஞனுக்குப் புகழாரம் சூட்டும் தகுதி எமக்குண்டா? உத்தம நட்பின் உருவமாக விளங்கும் அச்சிறு குடும்பத்தை உள்ளும் புறமுமாக அறிவோம் எனப் பீற்றிக் கொள்ள உள்ளப் பண்பு இடங் கொடாமையால் வள்ளுவனிடனம் சரண் அடைந்தோம்.

"கந்தர் எப்படி இருக்கிறீர்கள்"

"சுகத்துக் கென்னகுறை,? மனிசி சமைத்துப் போடும் போது"

"அது சரி, கனடாவில் தமிழர் பண்பாடு நிலைக்குமா" வாதம் எதிர்வாதம் சந்தேக நிவர்த்திகள் ஐந்து நிமிடம் நடைபெறும். குறிக்கப்பட்ட விடயம் பற்றிய ஒரு தொடக்கம் தெளிவாகும்.

"நீங்கள் விளாசித் தள்ளிவிடுவீர்கள் சும்மா என்னை ஆழம் பார்க்கிறீர்களாக்கும்" என்ற நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள்......... கனடாவுக்கு வந்தபின் இப்படியான டெலிபோன் தொடர்புகள்........... பரஸ்பரம் நிகழும்.

கந்தவனம் ஒரு நந்தவனம் எனப்பற்பலரும் கூறி விட்டார்கள். நறுமணம் கமழும் பல்வகைப் பூக்கள் நிறைந்து நந்தவனம் போல பல்வகைக் கலைத்துறைகளிலும் பங்களிப்பு நல்கும் கந்தவனம் இலக்கிய உலகத்தால் மறக்கப்படாதவர். தமிழ்கூறும் நல்லுலகால் கவிஞராக-கட்டுரையாளராக-கல்வியியலாளராக நாடகக்கலைஞராக இன்னும் பல உருவங்களில் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட நண்பரைப் பற்றி மேலதிகமாக நாம் எதைக்கூறமுடியும்? எமது நட்பையும் அனுபவத்தையும் கூறுவது சாலப் பொருந்தும்.

இலக்கியவாழ்வில் எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய குரும்பசிட்டிக் கிராமமும் சன்மார்க்க சபையும் இரசிகமணி கனக செந்திநாதன், கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை, ஆசிரியர் இராச ரத்தினம், ஆ. தம்பித்துரை போன்றோரும் மறக்கப்பட முடியாதவர்கள். ஈழகேசரியில் முதற்சிறுகதை 1955 இல் வெளியானபின் இவர்களின் அறிமுகம் கிட்டியது. இரசிகமணி அவர்களுக்கு - சோர்வை யறியாத அவரது பேனா மூலம் தமிழ் ஈழம் முழுவதும், இந்திய எழுத்தாளருடனும் புகழ் சேர்ந்திருந்தது. சேர்ந்தோரை ஊக்குவித்து உயர்த்தி வைக்கும் பண்புடைய உந்துசக்தியாக விளங்கியவர் அவர்.

ஏற்கனவே கவிதையாற்றல், எழுத்தாற்றல், அறிவாற்றல் வாய்ந்த கந்தவனத்தார் போட்டி பொறாமைகள் அற்ற - நற்பண்புகள் நிறைந்த குரும்பசிட்டி மண்ணில் காலடி வைத்தார். யேசு பிரானின் அருள் மொழிபோல நல்ல விதையொன்று பசளை நிறைந்த விளைச்சல் நிலத்தில் விழுந்து விட்டால் அது ஒன்றாகிப் பலவாகிப் பன்மணித் திரளாகப் பன்மடங்கு விளைச்சலைத் தருவது ஆச்சரியமல்லவே.

அறுவடை செய்ய ஓர் குரும்பசிட்டியாரின் தனலக்குமி புத்தகசாலை, செய்விக்க ஓர் மாமனார். அடுக்கிவைக்க தவமணியம்மையார். பரக்கப் புகழ் சேர்க்க ஓர் ரசிகமணியும் அவரைச் சேர்ந்தோரும் வேறென்ன வேண்டும்?, இரவிரவாகக் கிறுக்கித் தள்ளலைத் தவிர...!

இவரில் உற்சாகமும் ஊக்கமும் சூட்டோடுசூடு எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும், அவற்றைத் தம்பேருக்கும் புகழுக்கும் சமுக நலத்துக்குமாக ஆக்கிக் கொள்ளும் சாதனையும் மிகச் சாதுரியம் வாய்ந்தவை. இரவில் கவியரங்கம், மறுநாள் அது எங்காவது பிரசுரம் ஆகிவிடும். மந்தரை சூழ்ச்சிப் படலத்தை வகுப்பில் கற்பிப்பார், மறுபிரசுரம், மறுவாரம் பாடசாலை மாணவர் மத்தியில் 'கூனியின் சாதனை' தவழும். க. குணராசா கவிஞர் கந்தவனம் புவியியல் நூல்கள் போட்டி போட்டு வெளிவரும். கல்வி டிப்ளோமாவில் எத்தனையோ பேர் ஆய்வுக்கட்டுரையில் உயர்புள்ளி எடுப்பர். ஆனால் இவரின் 'ஆசிரியர்' தான் நூலாக வெளிவரும். நாற்பது வருட அனுபவத்தில் ஒருநூலைத் தன்னிலும் வெளியிடத் தயங்கிய எமக்கு இதனைப்பார்த்து மலைப்பு. அடிக்கடி உற்சாகம் தருவார். பயத்தை நீக்கி ஒரு நூலை வெளியிடுங்கள் பிறகு அந்த விசர் ஊக்கிக் கொண்டே ஆளைத் தப்பவிடாது என்று கூறுவார்.

## வள்ளிநாயகி இராமலிங்கம்.

கந்தவனத்தாரின் குரும்பசிட்டிப் பிரவேசத்தின் பின்தான் எமக்கு அவர் அறிமுகமானார். அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது ஏதோ குற்ற வாளியைப் பிடிப்பது போலத்தலையைச் சரித்து கூர்மையான முழியை உருட்டி அளவெடுத்தார், முகத்திலும் ஒரு தீவிரம், உடனேயே சிரித்துக் கொண்டு உங்களைப் பற்றி இவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள் என நேசபாவத்தோடு சிரிக்க முயன்றார். அப்பாற் போய் விட்டார். புதியவர்களோடு ஜாக்கிரதையாக நடந்து கொள்வாரோ? என்ன வெருளுறார் என நினைத்தேன்!

அக்காலத்தில் அவர் போக்கை அவதானித்தால் பெண்களோடு அவ்வளவு சகஜமாகப் பழகமாட்டார். அநாகரீகமாக நடந்து கொள்ளமாட்டார். தேவையை ஒட்டியே பேசுவார். பலரதுமுன்னிலையில் மிகக்கவனமாக எதிர்பாலாரிடம் இருந்து ஒதுங்கியே இருப்பார். சன்மார்க்க சபையில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்கள் யாழ்.இலக்கிய வட்ட நிர்வாக குழுக் கூட்டங்கள் எமது பழகத்தையும் நட்பையும் வளர்த்தன. மற்றும் குரும்பசிட்டி நண்பர்கள் போலவே நாமும் குடும்ப நண்பர்களாகி உறவினர் போல விருந்துண்டு மகிழ்வோம்.

தொடக்கத்தில் ஒருநாள் நான், சுந்தரம்பிள்ளை, இவர் மூன்று பேரும் பேசிக் கொண்டிருந்தோம். "பார்த்தசாரதி இப்படிச் சொல்கிறார் நீரென்ன நினைக்கிறீர் கவிஞர்" என்று கேட்டுக் கொண்டே திரும்பிப் பார்த்தால் ஆள் இல்லை. காரை விழுந்து விழுந்து சிரித்தார். "அவன் நழுவிற்றான் வித்தியானந்தன் வாறார் பெண்களோடை பேசிக் கொண்டிருந்தால் ஏதும் நினைப்பார் என்று ஓடிட்டார்" என்றார். நான் உடனேயே வேண்டுமென்று மிஸ்டர் கந்தவனம் எனப் பெலத்து அழைத்தேன். உடனே அசடு வழியாமல் தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு

"பூச்சாடியைச் சரியாக வைத்திருக்கிறார்களோ எனப் பார்க்கப் போனேன்" என்றார். இதே போலத்தான் ஊர் இரண்டுபடும் போதும் கட்சிப் பூசல்களின் போதும் தன்பெயர் கெட்டுப்போகாதபடி வாதப்பிரதிவாதங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்வார். ஈற்றில் தம் தீர்க்கமான கருத்தைச் சொல்வார்.

ஒரு எழுத்தாளன் தமது வாழ்வு பொதுமக்களின் விமர்சனத்துக்கு உட்பட்டது என்பதைப் பூரணமாக உணர்ந்து கொள்ளவேண்டும் தமது ஒழுக்கம்பற்றிக் காமாளைக் கண்ணன் கூடப்பேச இடம் வைக்கக் கூடாது. தம்மைப் பற்றிப் பூரணமாக வாசகன் அறியும்வரை தாம் கதைக்கு இடங்கொடுக்ககூடாது எனும் கந்தவனத்தின் போக்கு, அதை உணந்தபின் எமக்கும் பிடித்துக் கொண்டது. நான் சுத்தம் பிறர் ஏதும் பேசட்டும் என்ற மனோபாவமும் அலட்சியமும் என்னிடம் மாறத்தொடங்கியது.

வயது ஏறஏற, அனுபவமுதிர்ச்சியும் ஏற்பட உலகத்தில் தனக்கென்றொரு இடம் பிடித்துக் கொண்டதும் அவரிடமும் பல மாற்றங்களையும் கருத்துவிரிவுகளையும் கண்டுள்ளோம்.

அந்தக் காலத்தில் கூட்டம் ஏற்பாடு செய்வோர் இரசிகமணியை வந்து பிடிப்பார்கள். சொற் பொழிவா? போடு இன்னாரை, கவியரங்கமா போடு இன்னார் இன்னாரை, பட்டி மன்றமா இன்னார் இன்னார் இன்னாரென எழுதப்பண்ணுவார். இவர்கள் வருவார்களோ எனச் சந்தேகம் தெரிவித்தால் "போய்ச் சொல்லு செந்திநாதன் சொன்னதென்று" அதற்கு அப்பீல் கிடையாது. குரும்பசிட்டி தெல்லிப்பளை காங்கேசன் துறைக் கலைஞர்களுக்கு ஒரு கார், யாழ்நகர் தின்னவேலி பக்கத்துக்கு ஒரு கார். கரவெட்டியோ, மூளாளையோ எல்லாக் கலைஞர்களும் ஒன்றாகச் சந்தித்து நட்புடன் அளவளாவி மகிழ்வோம். மேடையில் ஒருவருக் கொருவர் சளைக்காது ஆரோக்கியமான போட்டியோடு ஒரு – வருக் கொருவர் சளைக்காது ஆரோக்கியமான போட்டியோடு செயற்படுவோம். கவிஞர் கந்தவனத்தின் கார் எங்களைச் சுமந்து செல்லும்.

பட்டிமன்றங்களில் கவிஞர் பற்றிய இரு அனுபவங்கள் மறக்கமுடியாதவை. பட்டிமன்ற ஏற்பாட்டாளர் வந்து இத்தலையங்கத்தில் எந்தப்பக்கம் பேசப்போகி றீர்கள் என்று கேட்பார். கந்தவனம் எந்தப்பக்கம் பேசுகிறார் என நான் கேட்பேன். "நீங்கள் எப்பவும் கடினமான பகுதியைத்தான் தெரிவு செய்வீர்களாம் அந்தப்பக்கத்துக்குத் தன்னையும் போடட்டாம்." என்பார். நான் வாதத்திறமையைக் காட்ட முயலுகையில் அவர் நட்பையும் பேணிப் பொதுமக்கள் அறிவையும் வளர்ப்பதில் செயற்பட்டார். இன்னொரு தடவை கவலையோடு சொன்னாராம், குறமகளுக்கு சோடியாக இன்னொரு பெண் கிடைக்காததால் பட்டிமன்றத்துக்குப் போடமுடியாமல் இருக்கிறது என்று. கந்தவனம் சோடி தேடாதீங்கோ. அறிவும் ஆற்றலும் வாதத்திறமையும் தான் மக்கள் ரசிப்பது. ஆனபடியால் மற்றப் பக்கத்துக்கு ஒரு ஆணைப் போட்டு விடுங்கள் என்று சொன்னாராம். அதன்பின் பல பட்டிமன்றங்களில் தனி ஒரு பெண்ணாகப் பங்கு பற்றியுள்ளோம். ஆண்பெண் என்ற பேதம் இன்றி அறிவைப் போற்றும் கவிஞரின் உள்ளம் எனக்குப் பிடித்துக் கொண்டது.

கவிஞர் கந்தவனம், காரை சுந்தரம்பிள்ளை, குறமகள் மூவருக்கும் பலவகையிற் நெருங்கிய தொடர்பிருந்தது. கூட்டங்கள் இலக்கிய வட்டச் சந்திப்புகள் மாத்திரமல்ல கல்வித்துறையிலுங்கூட மூவருமே கல்வி டிப்ளோமா (வெளிவாரி), ஆசிரியர் ஆலோசகர் பயிற்சி, நாடகடிப்ளோமா ஒன்றாகச் செய்தவர்கள் புத்தகங்கள் குறிப்புகழ் பரிமாற்றம், சேர்ந்துபடித்தல் அரட்டையடித்தல் பல களப்பயிற்சிகளில் பங்குபற்றியவர்கள். "வாடாமச்சான் கோப்பி குடிப்பம்" என்று ஒருவரை யொருவர் அழைத்து, நீங்கள் என்ன செய்ய யோசனை" என்று கேட்பர்" உங்களுக்கென்ன எந்தநேரம் போனாலும் சாப்பாடு றெடியாய் இருக்கும். என்னை எதிர்பார்த்து எத்தனை சீவன் இருக்கு" என்று சமாளித்துவிட்டு அவர்கள் கடைகளுள் நுழைவதைப் பார்த்துக்கொண்டு பெருமூச்சுவிடுவேன். "நானும் ஆணாகப் பிறக்கவில்லையே" என என்மனம் ஏங்கும். எதற்காக பொய்சொல்ல வேண்டும் அந்தக் காலத்தில் கண்ட கடைகளுள்ளும் பெண்கள் சென்று அரட்டை அடித்து 'ரீ' குடிப்பதில்லை. கொழும்பில் படிக்கவந்த போது இது விதி விலக்காகிவிட்டது.

கந்தவனத்தில் எனக்குப் பிடித்த மற்றொரு விடயம் அவரது பேசும் பாணி – கண்ட பாட்டுக்கு அலட்ட மாட்டார். நின்று நிதானித்து அளந்து பேசுவார். அதிலும் தீர்க்கமான முடிவுகளைச் சொல்லும் நேரத்தில் முகத்தைத் தீவிரமாக்குவார் குரலைத் தணித்து அதில் கனதியைச் சேர்த்து இதற்குமேல் உங்களால் ஒன்றும் சொல்லமுடியாது என்பதுபோல் உறுதியாக விளம்புவார். நாடி கீழிறங்க கழுத்து நரம்புகள் சுருங்க தாடைகள் இறுகச் சொல்லும்போது அதன் மேல் பேச எம்மால் முடியாது போல் பேசுவார் குரலைத் தாழ்த்தியும் உயர்த்தியும் நாடகபாணியிலான இடைமௌனம் விட்டும் நடக்கும். ஒன்று மட்டும் பிடிப்பதில்லை. யாரைப்பற்றி பேசுகிறாரோ அவரை நீண்டநேரம் முறைத்துப் பார்த்தபடி பேசுவார். குறிக்கப்பட்டவரோ கண்களை விலத்தி நெளிவார்.

கவிஞர் அவர்கள் என் உடன் பிறவாச் சகோதரன், நண்பன். அவரது மனைவியோ என்மீது மட்டற்ற அன்பும் மதிப்பும் வைத்திருப்பவர்கள். பிள்ளைகள் சொந்த உறவாக மதிப்பவர்கள். இவரது அறுபதாவது ஆண்டில் இவர்கள் பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று வாழ்க வாழ்க என வாழ்த்துகிறேன்.

"எழுத்து வளைந்து நெறிந்து குனிந்து குழைந்து தற்கொண்டான் சொற்படி நடக்கின்றது. எழுத்து தலைவி, எழுத்தாளன் தலைவன். இருவரும் கூடிப் படைக்கின்றனர். கவிதை, கட்டுரை, கதை நாவல், நாடகமாக பிள்ளைகள் பிறக்கின்றனர்."

– கவிஞர் கந்தவனம்.

('எழுத்தாளன்' கட்டுரையிலிருந்து)

# கனடிய தமிழ் எழுத்துலகில் கவிஞர் கந்தவனம் உருவாக்கிய இலக்கியவனம்

**எஸ். திருச்செல்வம்**
(பிரதம ஆசிரியர், தமிழர் தகவல்).
(தலைவர் மணிவிழாக்குழு).

1993ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 28ம் திகதி தமது மணிவிழா ஆண்டினை ஆரம்பித்த கவிஞர் வி. கந்தவனம் அவர்கள், கடந்த மாதம் 28ம்திகதியுடன் அதனைப் பூர்த்தி செய்துள்ளார். கனடாவில் மணிவிழாக் கொண்டாடிய முதலாவது தமிழ் எழுத்தாளர் என்ற மதிப்பினையும் பெருமையையும் பெற்றிட்ட கவிஞர் அவர்களின் மணிவிழாக் கொண்டாட்டம் கடந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் ரொறன்ரோவின் ஆரம்பமானது.

மணிவிழாக் குழுவின் தலைவராக நான் இருந்தமையால் , அந்த மணிவிழாக்கும் தலைமைதாங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. கவிஞர் அவர்களை ஆசிரியராக, நண்பராக, கவிஞராக, நாடகத் தலைவராக, எழுத்தாளராக, விமர்சகராக, குடும்பஸ்தகராக என்று பல்வேறுகோணங்களில் பலரும் பார்வையிட்டு உரையாற்றினர். பாராட்டுக் கவிதைகளின் தொகுப்பு நூலும், கவிநாயகர் கந்தவனம் என்னும் வாழ்க்கை வரலாற்று நூலும் இவ் விழாவில் வெளியிடப்பட்டன.

கடந்த ஓராண்டாக, பல்வேறு அரங்குகளிலும் கவிஞர் அவர்க்ள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். தமிழர் தகவலின் மூன்றாவது ஆண்டு விழாவில் கவிஞர் அவர்களின் இலக்கியப்பணிக்காக தங்கப் பதக்கமும், விருதும் வழங்கப்பட்டது. ஒன்ராறியோ குடியுரிமை அமைச்சர் எலெய்ன் ஸியம்பா இதனை வழங்கினார்.

கடந்த மாதம் மகாஜனாக் கல்லூரி மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் மணிவிழாக் கவிஞருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். இவ்வாறான பல்வகை விழாக்களின் முடிவில் 1994 நவம்பர் 5ம் திகதி மொன்றியாலில் மணிவிழாப் பூர்த்தி விழா நடை பெறுகின்றது. இவ்வகையில் கவிஞர் அவர்கள் தமது மணிவிழாவை பூரணமான ஆண்டு பூர்த்தியாகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பூர்த்தி விழாவை யொட்டி வெளிவரும் மலரில், வாழ்த்துக்களை வழங்குவதற்காக எழுதப்படும் இச்சிறு கட்டுரையில் சில கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வது பொருத்தம் போலத் தெரிகிறது.

கவிஞர் அவர்கள் ஓர் இரட்டைப் பட்டதாரி. நீண்டகாலம் ஆசிரியப் பணி புரிந்தவர். ஓய்வு பெறுவதற்கு முன்னர் அதிபராகப் பணியாற்றியவர். அதன்பின்னர் ஆபிரிக்க நாடொன்றில் வேற்று நாட்டு மாணவர்களுக்கு போதனாசிரியராகப் பணியாற்றியவர். இதனை அடுத்து, எட்டாண்டுகளுக்கு முன்னர் தமது குடும்பத்தினருடன், மற்றைய ஈழத்தலைவர்கள் போன்று கவிஞரும் கனடாவில் குடிபுக நேர்ந்தது.

கவிஞர் கந்தவனம் அவர்களுக்கும் எனக்கு மிடையிலான தொடர்பு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு (நான் மாணவனாக இருந்த காலத்திலிருந்து) மேற்பட்டது. இலங்கையில் கொடிகட்டிப் பறந்த கவிநாயகனாக (மேடை, வானொலி) அவர் திகழ்ந்தார். "கந்தவனம் இல்லாத கவியரங்கு கவியரங்கல்ல" என்று கூறுமளவிற்கு கவியரங்க மேடைகளைக் கோலாச்சியவர். தமிழீழத்தின் மூலை முடுக்குகள் மட்டுமன்றி, இலங்கையில் தமிழர் வாழ்ந்த இடமெங்கும், அழைப்புகளை மறுக்காது, கவிபாடச் சென்று தமிழ் வளர்த்த பெரியார் இவர்.

கவிஞர் என்றால் கந்தவனம் என்றும், கந்தவனம் என்றால் கவிஞர் என்றும் தமிழ்மக்கள் கூறுமளவுக்குத் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் தமது கவித்திறனால் பெயர் துலங்கப் புகழ்பெற்றவர் இவர். ஆனால், தமிழிலக்கிய உலகில் இவரது பேனா கவிதைகளை மட்டும் படைக்கவில்லை. சிறந்த சிறுகதையாளராக, கட்டுரையாளராக, நாடக எழுத்தாளராக, விமர்சகராக, ஆய்வாளராக, நாட்டார் இலக்கிய வித்தகராக என்று எழுத்துலகின் இன்னோரன்ன துறைகளிலும் கை தொட்டு, தன் திறமையை வெளிக்காட்டியுள்ளார். பலபரிசில்களைப் பெற்றுள்ளார். பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

"கனடாவில் கந்தவனம்" என்று பார்க்கையில், இவரது எழுத்துக்கள், இவரது படைப்புக்கள் இங்கு இலக்கிய இலக்கணம் வளர முதற்காரணியாக அமைந்துள்ளது என்று துணிந்து கூறலாம். கனடாவில் ஒருலட்சம் தமிழர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களுள் 90 வீதத்திற்கும் அதிகமாயுள்ளவர்கள் கடந்த ஒரு தசாப்த்திற்குள் புலம் பெயர்ந்தவர்கள்.

ஒரு புறம் தமிழிலக்கிய உணர்வின் வெளிப்பாடாக ஆக்க இலக்கியம் கடந்த ஐந்தாண்டுகளுக்ளேயே கனடாவில் பிரசுரிக்க ஆரம்பித்தது. தமிழ்ப்பத்திரிகைகளில், சஞ்சிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் இதற்குக் களமைத்துக் கொடுத்தன. இவைகள் பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்டவை. இந்தப் பின்னணியைப் பார்க்கையில் கவிஞர் அவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகத் தென்படுகிறது.

"தமிழர் தகவல்" சஞ்சிகையில் கடந்த நான்காண்டுகளாக இவர் எழுதிவரும் "கனடியக் காட்சிகள்" தொடர் காலத்தால் அழியாத படைப்பு புவியியல், குடியியல், சரித்திர, தகவல், விடயங்களை, இலக்கியம் கலந்த எளிமையும் நகைச்சுவையும் இணைந்த எழுத்தாக வாசகர்களுக்கு எவ்வாறு வழங்கலாம் என்பதற்கு இந்தத் தொடரைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்ந்து இதனைப் படித்து, தங்கள் பாராட்டைத் தெரிவித்து வருவதே, இதற்கு

வாசகர்கள் மத்தியில் இருக்கும் அமோகமாக வரவேற்பைத் தெரியவைக்கின்றது.

"ஈழகேசரி" பத்திரிகையில் தொடர்ச்சியாக கவிஞரால் எழுதப்பட்டு வரும் "எழுத்தாளன்" கட்டுரைத் தொடர், குறள்விளக்கம் போலானது. கடுகு சிறிதானாலும் காரம் பெரியது என்பார்கள். இதனையே, "சுருங்கச் சொல்லித் தெரிய வைப்பது" என்போம். எழுத்தாளன் தொடர் புதிய எழுத்தாளர்களுக்கு மட்டுமன்றி, பழைய, வளர்ந்த, எழுத்தாளர்களுக்கும் பல தகவல்களைச் சுமந்து செல்வது. என்னைப் பொறுத்தளவில், கனடியக் காட்சிகள், "எழுத்தாளன்" ஆகிய இரு தொடர்களும் நூலாக வெளிவரவேண்டியவைகள் என்று துணிந்து கூறுவேன். அடுத்த தலைமுறையினர் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டியவை.

"தேமதுரம்" வானொலி நிகழ்ச்சியில் கவிஞர் கந்தவனம் தயாரித்து வழங்கிய உரையாற்றும் பகுதி, அவரது பேச்சு, உச்சரிப்பு, கருத்தாழம், சொல்வன்மை, பிரச்சனைகளின் மையக் கருத்தினைத் தொட்டுச் செல்லும் பாங்கு, ஒவ்வொரு நேயரையும் தம்வசம் இழுத்திடும் தனித்துவம் ஆகியவைகளை நாம் அறிந்து கொள்ள வழிவகுத்தது. ஒருவகையில் கூறுவதானல் கவிஞர் அவர்களது பங்களிப்பினால் "தேமதுரம்" ஒரு படி மேற்சென்று, தமிழ் மக்களின் உயர்ந்த அங்கீகாரத்தையும் பெற்றது என்றும் சொல்லலாம்.

கனடிய தமிழ் மேடைகளை கோலாகலமாக அலங்கரித்து வருபவர் கவிஞர் அவர்கள். அவரது மணிவிழாக் கொண்டாட்டத்தின் இறுதியில், தமது பதிலுரையில், "தமிழன் எதற்காகத் தமிழைக் கற்க வேண்டும்" என்று கவிநடையில் அவர் குடுத்த வேண்டுகோல் ஒவ்வொரு தமிழையும், உடம்பில் சூடேற்றி உணரவைத்தது. சொல்ல வேண்டிய விடயத்தைச், சொல்ல வேண்டிய இடத்தில், சொல்ல வேண்டிய முறையில் சொல்வதற்கு கவிஞர் அவர்களுக்கு நிகர் கவிஞர் அவர்களே.

ஈழநாடு பத்திரிகையில் இவர் எழுதிய கவிப்பதில்கள் பகுதி, பொதிகையில் இவர் எழுதிய விநாயகப் பா, சூரியன் பத்திரிகைகளில் இவர் எழுதிய குறள் விளக்கம் ஆகியவையும், ஐரோப்பிய நாட்டுச் சஞ்கிகைகள், பத்திரிகைகளில் எழுதிய மற்றும் பல தொடர் அம்சங்களும் கவிஞர் அவர்களின் பல்துறைச் சிறப்பினையும், ஆற்றலையும் தெரியவைத்தன. முழுத்தமிழினமுமே அவரது திறமையை எண்ணி மெச்சுகின்றது.

மகாஜனாக் கல்லூரி விழாமலரில் பிரசுரமாகி இருந்த தேசிய கீதத்தின் தமிழாக்கத்தைப் படித்த பலரும் மூக்கில் விரலை வைத்தனர். இவ்வாறான ஒரு மொழியாக்கத்தை கவிஞர் கந்தவனத்தைத்தவிர வேறு எவராலும் செய்திட முடியாது. என்று துணிந்து கூறலாம்.

கவிஞர் அவர்களது எழுத்தாற்றலை, தமிழ்ப்புலமையை, தமிழினின் பால் கொண்டிருக்கும் நேயத்தை, தமிழ்தாயின் மோகத்தை ஒரு சிறு கட்டுரைக்குள் அடக்கி விடமுடியாது. தமிழாய்வுக்கு உட்படுத்தப்பட பற்பல விடயங்கள் இவை. கவிஞரின் எழுத்துக்களும், தமிழ்ப்பணிகளும், கனடாவில் அவர் செய்துவரும் தமிழிலக்கியச் சேவையும் பல்கலைக்கழக மட்டத்தில் என்று கூறினால் அது மிகையாகாது.

கனடிய தமிழிலக்கியத்துக்கும் "பிதாமகர்" என்று கவிஞர் கந்தவனம் அவர்களைத் துணிந்து கூறாலாம்.

பட்டங்கள் சிலருக்கும் பெருமை சேர்த்துக் கொடுக்கும். ஆனால் பட்டங்கள் இவரால் பெருமை பெறுவதற்கு "மணிவிழா" என்ற மகுடம் கவிஞர் கந்தவனம் அவர்களால் கனடாவில் சிறப்புப் பெற்றுள்ளது.

பாராட்டப்படவேண்டிய ஒருவர், பாராட்டப்படவேண்டிய வேளையில், பாராட்டிக் கொண்டாடப்பட்டுள்ளார். என்னும் வகையில் கவிஞர் கந்தவனம் அவர்களுக்கு தொகுக்கப்பட்டுள்ள மணிவிழா பெருமையான தமிழ்விழாவாக வரலாற்றில் பொதிக்கப்படும் ஓர் விழாவாக பெயர்பெற்றுள்ளது.

வாழ்க கவிஞர் கந்தவனம்!
வளர்க அவர்தம் தமிழ்ப்பணி!

" ஆக்கி எழுதும் திறன் இரு வகைப்படும். ஒன்று : உள்ளதை உள்ளவாறு அல்லது சுருக்கி எழுதுதல். இது உண்மை நிகழ்வு, தகவல், கருத்துகள் அல்லது அபிப்பிராயங்கள் போன்றவற்றை வெளிப்படுத்தும் முயற்சியாக இருக்கும். அதனால் இது 'வெளிப்பாட்டு எழுத்து' எனப்படும். இரண்டு : உள்ளதை மிகைப்படுத்திக் கூறுதல் அல்லது இல்லாததை உள்ளதுபோலக் கூறுதல். இது மனப்பான்மை, உணர்ச்சி, உணர்வு ஆகியவற்றுடன் உறவாடும் செயற்பாடாக இருக்கும் அதனால் இதை 'பாதிப்பு எழுத்து' என்பர்." - கவிஞர் கந்தவனம்
('எழுத்தாளன்' கட்டுரையிலிருந்து)

" இலக்கியம் என்பது ஓர் உன்னத கலை. இந்தக் கலையின் இயல்பை விளங்கிக்கொள்வதற்கு கலை என்றால் என்ன என்பதை அறியவேண்டியது அவசியமாகும்." - கவிஞர் கந்தவனம்
(வானொலிப் பேச்சிலிருந்து)

மணிவிழாக் கவிஞர் கந்தவனத்திற்கும் எனது ஆருயிர்க் கணவனாகிய இலக்கிய வித்தகர் நாவற்குழியூர் நடராசனுக்கும் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகத் தொடர்பு இருந்து வந்தது. ஒத்த குணம், ஒத்த நலம், அயலூரவர் என்றதனால் ஈழம் தொடங்கி கனடாவரை வள்ளுவர் வாக்குக்குக் கேற்ப நட்பு வளர்ந்தது "நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு".

கவிஞர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து கலந்துரையாடுவார். இருவரும் ஒரே மேடையில் சொற் பொழிவு ஆற்றுவர், ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில், கவியரங்குகளில், கனடாத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில், பங்கு பெறுவர். தமிழ் நூல் வெளியீடுகளில் மதிப்புரை கூறுவர்.

கவிஞர் கந்தவனத்தின் பிறப்பிடம் நுணாவில், நடராசனின் பிறப்பிடம் நாவற்குழி. இரு கிராமங்களும் தென்மராட்சியைச் சேர்ந்தன, நுணா என்னும் மரத்துக்கருகே ஓர் இல்லம் இருந்ததாலோ அல்லது நுணா மரம் ஒரு குளத்துக்கருகே இருந்ததாலோ இருக்கலாம். நுணா + இல்: வில் - குளத்துக்குச் சிங்களச் சொல் என ஒத்துக்கொண்டால்

("பொதிகையில்")

"இயலிசையிற் கிளி குயில்கள் நாடகத்தில்
இனிய மயிற் சோலைவள நுணாவிலூரின்
வயல் வெளியின் பருவவெளில் தண்ணென் காட்சி
வரம்பினுயர் புக்குளங்கள் வழங்கும் மாட்சி
அயலழகுப் பனங்கூடல் காட்டும் மீட்சி"
(பாடுமனமே என்ற தொகுப்பில்)

நுணாவிலூர் என்ற கட்டுரைத் தொகுப்பு ஒன்றும் வெளியிட்டிருக்கிறார். கனடாவிலிருந்தும் நுணாவிலை மறக்க வில்லை.

நடராசர் தன் பெயருக்கு நாவற்குழியூர் நடராசா என்று அடைமொழி கொடுத்து தன் கிராமத்தை தமிழுலகமெங்கும் அறிய வைத்திருக்கிறார். என்று நாவற்குழி மக்கள் அவரைப் பாராட்டியுள்ளனர். கூட்டுறவு வர்த்தக முறையை இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் நாவற்குழிக்கு அறிமுகப்படுத்தி கூட்டுறவு சங்கத்தை நிறுவி அதில் தொண்டாற்றினார் நடராசர்.

# இறந்தகால ஏணியில் இறங்கிவரும் எண்ணங்கள்

நுணா + வில். நாவற்குழியின் தோற்றம் வெளிப்படை, பள்ளமான ஊர்வாரியின் வயலுக்கருகே நாவல் மரம் இருந்திருக்கலாம். நாவல் தமிழ்ப்புராணத்திலேயே வரும் மரம். முருகக் கடவுள் சிறுவனாய்ச் செய்த ஒரு திருவிளையாடல் ஔவையாருக்கு பழுத்த நாவற் கனிகளை மணலுக்குள் எறிந்தது! கவிஞர் கந்தவனத்தின் மனைவியின் ஊர் குரும்பசிட்டி. குரும்பை என்றால் தென்னை, அல்லது பனையின் பிஞ்சுக்காய், சிட்டி - ஓர் அளவுக்கருவி, அல்லது சூதாடு பகடு உருட்டும் செப்பு, குரும்பை, குரும்ப என்று மருவியது. எனது கிராமமாகிய உரும்பராய் பராய் மரத்தைச் சார்ந்த பெயர், கிராமத்தில் ஒரு பராய் மரத்தையும் நான் காணவில்லை. எனது முன்னோரின் குல தெய்வம் வைரவர், வீட்டுக்கண்மையில் உள்ள ஞான வைரவர் கோவிலின் முன் ஒரு பெரிய அரச மரம் தான் இருந்தது. நல்ல காலம். பௌத்த தீவிரவாதிகள் அங்கு வந்திருந்தால் புத்தருக்கும் சிலையை எழுப்பி, ஞான வைரவரை கேணிக்குள் நீர் மூழ்கி வைத்திருப்பர்! வவனியாவில் அப்படி ஒரு சம்பவம் நடந்தது. மலர்களிலும் பார்க்க மரங்களே கவிஞர்களின் மனத்தைக் கொள்ளை கொள்கின்றன.

"I think that I shall never see a poem as lovely as a tree;
Poems are made by fools like me;
But only God can make a tree;

என்று ஓர் அமெரிக்க புலவர் சிந்தித்தார்.

ஐயோ! மரங்களையும் தெய்வீக ஆற்றலையும் குறித்தேன் ஒழிய பெரும் கவிஞரை "மூடர்" என்று நான் கணிக்கவில்லை.

கவிஞரின் பெயரிலேயே சோலை மரத் தொகுதி காணப்படுகிறது. கந்தவனமும் நடராசரும் சொந்தக் கிராமங்களில் அலாதி பற்றுடையவர்

"தென்னை பனை நிறைந்த வள நுணாவில்"

"நாட்டுக் கெந்த வகையி லேனும்
நாமு ழைக்க வில்லை யாயின்
நாடெ மக்குச் செய்யவென்ன உண்டு?" கென்டி
கூறமுன்னரே.

ஒரு கவிதையில் அறை கூவினார். ஆங்கிலத்தில் ஒரு தேசியபாட்டு பின் வருமாறு

Land of our birth we pledge to thee
Our love and toil in the years to be........

அரசாங்க ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றபின்தான் கிராமத்தில் வசித்து தொண்டாற்ற வேண்டும் என்பது அவர்கள் கனவு. நாட்டின் நிலையால் எதிர்காலத்தில் செய்ய விரும்பியது விருதா ஆகிவிட்டது. எனினும் நடராசர் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஒரு திறந்த வெளியரங்கத்தை நிறுவி ஊரார் பயன்படுத்தி விடவேண்டும் என்ற உறுதியைப் பெற்றுத்தான் கனடா புறப்பட்டார்.

நான் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் London Inter Arts வகுப்பில் படிக்கும் பொழுது என்னிலும் ஒரு வகுப்புக்கூட M. கதிர்காமசேகரம் என்ற ஒருவர் சிங்கப்பூரிலிருந்து வந்து படித்தார். றிபேக்

## தங்கராணி நடராசா

கல்லூரியில் அவர்தான் கந்தவன இளைஞனுக்கு ஆங்கில இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார். The Adventures of Sam என்ற குறுநாவலை எழுதக் கவிஞருக்கு உற்சாகம் ஊட்டினார். நூல் நிலையத்தை முழுமையாக பயன்படுத்தும் பழக்கத்தை யும் ஏற்படுத்தினார்.

கல்வித்திணைக்கழகத்திற்கு அதிபராக இருந்தவர். ஈ.எல். விஜேமன்ன, விஜேமன்ன பாடசாலைப் பரிசோதகராக இருந்த காலத்தில் லீவு எடுத்து கொழும்புப் பல்கலைக்கழக கல்வி வழாகத்தில் என்னுடன் சக மாணவராகக் கற்றார். அருட்திரு தனிநாயக அடிகள் தமிழுடன் ஆங்கிலப்போதனா முறையையும் சிறப்புடன் கற்பித்த காலம் அது! விஜேமன்ன என்னை அழைத்து "தமிழில் புது முறைகளை ஆண்டு இலக்கணம் கற்பித்தல், வயதுக்கும் ஆர்வத்துக்கேற்ப கவர்ச்சிகரமாகத் தமிழ் நூல்கள் எழுதுதல்" போன்ற விஷயங்களில் ஆசிரியருக்கான கருத்தரங்குகளில் பேச வைத்தார். புகழ் பெற்ற ஆசிரியர், எழுத்தாளர், கவிஞர் ஆகிய கந்தவனம் புவியியற் குழுவில் ஒதுங்கி இருந்தது அப்பொழுது எனக்குத் தெரியாது. தெரிந்திருப்பின் இந்த விஷயங்களிலும் திரு. கந்தவனம் என்னிலும் விஷேசமாக அறிவுரை நடத்துவார் என்று கூறி பின் நின்றிருப்பேன்.

கந்தவனம் ஈழகேசரிப் பாலர் பகுதியில் முதன் முறையாக "ஒருகால் மூன்றுதலை" என்ற தலைப்பில் அனுப்பிய கட்டுரை பிரசுரமானது. ஒரு அபூர்வ தென்னைமரம், வழமைக்கு மாறாக 3 கிளைகளோடு வளர்ந்தது. கவிஞரின் இலக்கிய உள்ளத்தை கவர்ந்தது. அந்த தென்னை மரம் போல் கந்தவனத்தின் எதிர்காலம் கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும், நாடகவிற்பன்ன வராகவும் மிளிருவார் என்பதற்கு முன்னறிகுறி.

கவிஞர் கந்தவனத்தின் அருமை மனைவி தவமணியைக் கனடாவுக்கு வந்த பின்னரே அறிமுகமானேன். 30 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் கந்தவனத்தைத் திருமணம் செய்தார்.. ஒரு மாதத்துக்குள் பெண் பார்த்து, ஒருவரை ஒருவர் விரும்பி, பதிவுத் திருமணம், கலியாணம் எல்லாம் நிறைவேறின. பெரியோர் தேர்ந்தெடுத்து இணைத்து வைத்த தம்பதிகளின் காதலோ கலியாணத்தின் பின் அரும்பாகி மொட்டாகி, மலராகி, அன்பு ததும்ப வாழ்கின்றனர். இவர்களின் அன்புமலர் அலராகி, வீயாகி, வீழ்ச்சி அடையவே மாட்டாது என்பது உறுதி! ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி:

Some fall in love others grow in love after marriage, ஆம் fall; வீழ்ச்சி தான்! காமத்தைக் காதல் என நினைத்து விழுந்து விவாக ரத்தோடு சிலரின் காதல் முடிகின்றது. சந்தர்ப்பம் சூழ்நிலையால் நடராசருக்கும் எனக்கும் காதற் திருமணம் தான்! பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து பெற்றோரின் ஆசிக்கு மூன்று வருடம் காத்திருந்து, திருமணம் செய்தோம், ஏதோ தெய்வ அநுக்கிரகத்தால் 42 வருடகாலம் இன்புற்று சுற்றம் தழுவி இல்லறம் நடத்திய வாழ்க்கை முற்றிற்று! நடைப்பிணம் ஆனேன்............

கவிஞர் கந்தவனமும் தவமணியும் ஓர் இலட்சிய தம்பதிகள். வாலிபச் சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. ஒரு பெரியவர் உலகத்தால் பெரியவராகக் கணிக்கப்படுவதற்கு காரணமாக இருப்பவர் ஒரு பெண்தான் என்பது மேனாட்டு முதுமொழி. சக்தி இன்றிச் சிவம் இல்லை. கிறிஸ்தவ விவிலிய நூலில் படைப்பின் ஆரம்பத்தில், ஆதாம் என்னும் முதல் மனிதன் தன் மனைவி ஏவாளின் துர்ப்புத்தியைக் கேட்டதால் தான் எல்லா வளங்கள் நிறைந்த, ஏதேன் தோட்டத்திலிருந்து ஆண்டவனால் துரத்தப்பட்டானாம்.! மனிதன் வியர்வை சிந்தி உழைப்பதற்கும் பெண் பிரசவத்தின்போது வேதனைப் படவேண்டும் என்ற தண்டனையைப் பெற்றதும் பெண்ணாலேயே என்பது பழைய ஏற்பாட்டு யூதரின்கதை! – தவமணியும் தங்கராணியும், தத்தம் குடும்பங்களின் முழுப்பொறுப்பையும் எடுத்து கணவன்மாரின் உயர்வுக்கு ஓரளவு காரணராய் இருந்தனர் என்று கூறுவது மிகையாகாது.

கவிஞர் கந்தவனமும், நடராசரும் பட்டதாரி ஆசிரியர்களாக உத்தியோகத்தை ஆரம்பித்தனர். கவிஞர் மாத்தளைப் பரி தோமஸ் கல்லூரியில், மற்றவர் கொழும்பு றோயல் கல்லூரியில் இருவருக்கும் கவிதையில் கலைகளில் ஆர்வம். உத்தியோகம் புருஷ லட்சணம் என்பதற்காகவே இவர்கள் தொழில் புரிந்தனர். இன்றேல் முழுநேரமும் எழுத்தாளர்களாக தமிழை அபிவிருத்தி செய்பவராக இருந்திருப்பர். நடராசரைப் பொறுத்த அளவில் கஷ்டமான அரசியல் வாதிகளின் தலையீடுள்ள ஒலிபரப்புத் தாபனத்தின் உத்தியோகம் வந்திராவிடில் நிம்மதியாக நாவற்குழியில் கவிதைகள் பொழிந்து கொண்டிருப்பார் என்று நான் அவருக்குச் சொல்வதுண்டு! கவிஞர் கந்தவனமோ சிறந்த ஆசிரியராக முழுநேர வேலை செய்து கொண்டு மாலை முதல் நள்ளிரவு வரை சொற்பொழிவுகள், நாடகங்கள் கவியரங்குகள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றில் ஈடுபட தவமணி, சீறிச் சினக்காமல், அல்லது கோபித்து மௌனம் சாதிக்காமல், வீட்டுப்பணி, பிள்ளை வளர்ப்பு முழுப்பொறுப்பையும் ஏற்று, கணவனின் இலக்கிய முன்னேற்றத்துக்கு உறு துணையாக இருந்தார். நடராசர் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்ததால் தமிழ் மொழியை வளர்க்கவும், கவியரங்கம், கதாப்பிரசங்கம், நாடகம், நாட்டுக்கூத்து, கர்நாடக சங்கீதம், மூலம் ஆங்காங்கே இருந்த கலைஞரை அழைத்து ஒலிபரப்புச்செய்யவும் சந்தர்ப்பம் பெற்றது அவருக்கு மன ஆறுதல் இல்லாவிடில் முப்பது ஆண்டுகள் அந்தச் சிக்கலான உத்தியோகத்தை நடத்தியிருக்க மாட்டார்.! கனடா ஒளிபரப்பொன்றில் "தமிழ்மொழியால் தான் எனக்கு உத்தியோகமும், ஊதியமும் கிடைத்தது" என்று கூறினார். தமிழ்ப்பணிப்பாளர் ஒருவரே ஆனதால் பிரபல்யம் கிடைத்தது.

தவமணி சமையற்கலையில் கைதேந்தவர் தான். தாவர போசகராயிருந்தபோதும் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் விருப்புக்கேற்ற அறுசுவை உணவு தயாரித்துக் கொடுத்தார். குரும்பசிட்டியில் 17 வருட காலம் சீதன வீட்டிலிருந்த பொழுது தகப்பனார் பொன்னர் இளையப்பா. உப்போடு கூடிய முப்பத்திரண்டும் கடைகளுக்கும் சந்தைகளுக்கும் சென்று வாங்கிக் கொடுத்தார். கவிஞர் மேன்மேலும் கலைகளில் ஈடுபட நல்ல சந்தர்ப்பத்தை மாமனார் அளித்தார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த கந்தவனத்துக்கு மாமனார் தந்தை போல் ஆனார். நடராசருக்கு ஓரளவு வசதி இருந்தது. 27 வருடங்களாக எனது மாமியார் கூடவே இருந்து 94ஆவது வயதில் காலமானார்.

கவிஞர் கந்தவனம்போல் என் கணவர் அரசாங்க சேவையில் இருந்தே முதுமானி (MA) முனைவர் (Phd) பரீட்சைகளை எழுதும் பொழுதும் லீவு எடுக்கமாட்டார். நான் வெவ்வேறு பல்கலைக்கழக நூலகங்களுக்குச் சென்று அவரின் ஆராய்வுக்கு வேண்டிய குறிப்புகளை மட்டும் எழுதி உதவியதில் ஆத்ம திருப்தி அடைந்தேன் எனின் – இறந் கால ஏணியில் நான் நின்று நினைவுறும்போது என்னையறி யாமலே கண்களில் இருந்து நீர் வடிகிறது.. 1983 இல் எனக்குப் பாரிய இருதய வியாதி பீடித்தபின்

என்னை தாய்போல் நோயாளியைக் கவனிக்கும் தாதிபோல் என் ஆருயிர்க்கணவன் என்னைப் பராமரித்ததாற் தான் இன்றும் உயிரோடு இருக்கிறேன். இரு கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர் சபைகளில் சிறப்புடன் அங்கம் வகித்த பதவிகளை உதறித்தள்ளி மகளின் உதவி பெற கனடாவுக்கு அழைத்து வந்தார்.! வேளா வேளை மருந்துக்குழிகைகளை எடுக்க நினைவூட்டுவார். "ஏன் இந்தப்பாடு அப்பா? எவ்வளவு காலம் என்னைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?" என்று அன்று காலைதான் கேட்டேன். அதற்கு அவர் கோபித்தது போல் "30 வருடங்களாக நீர் எல்லாவற்றையும் செய்தீர், 10 வருடங்கள் தானே நான் உம்மை கண்ணும் கருத்துமாக பார்க்கிறேன்" என்றார். கவிஞர் கந்தவனம் தம்பதிகளின் சிறப்பைக் கூறவந்து எங்களைப்பற்றிக் கூறிவிட்டேன். மன்னியுங்கள்.

கவிஞர் தன் மாமனின் அன்பைப் பாராட்டி "பாடு மனமே" என்ற கவிதைத் தொகுப்பில் பின்வருமாறு பாடுகிறார்.

கன்னற் றமிழாடி
மண்ணும் கவிபாடி
வண்ணப் பறவையென
உன்னிப் பவனி வர
என்னைத் தினம் விட்டுத்
தன்னந் தனியாக
என்றன் குடும்பத்தை
தன் கண்ணிமை போல்
என்னே தவறு செய்தேன்
என்னத் தினம் போற்றி
பொன்னே யெனக் காக்கும்
என்னார் மணமாமன்
பொன்னர் இளையப்பா
வென்னும் குணக்குன்றுக்
கென்றோர் கைமாறு
இந்நூல் காணிக்கை.

திருமணத்தின் பின் கவிஞர் வெளியிட்ட இலக்கிய உலகம் ஏன் இந்த மூச்சு, பாடு மனமே, உய்யும் வழி, கீரிமலையினிலே, நுணாவிலூர் போன்ற பல நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்தவர் மாமனார். அக்காலத்தில் ஆசிரியரின் ஊதியம் குடும்பத்தைக் காப்பாற்றத்தான் போதுமானது என்பது யாவரும் அறிந்ததே. மனைவியைப் போல் மாமனாரும் கவிஞரின் இலக்கிய முன்னேற்றத்துக்கு உந்து சக்தியாக இருந்தனர்.

பிள்ளைகளை முறைப்படி வளர்ப்பதில் தவமணி ஈடு இணை இல்லாதவர் என்று உணர்கிறேன். கவிஞர் தம்பதிகளுக்கு வாணி, வாரணன் என்ற இரு பிள்ளைகள், எங்களுக்கு வத்ஸலா நங்கை, மகிழ்நன் நம்பி என்ற இருவர். நால்வருமே நல்ல பிள்ளைகள்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை, அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற" என்ற வள்ளுவர் வாக்குக்கமைய நாம் பழி பிறங்காப் பண்புடைய மக்களைப் பெற்றோம். பெற்றார் சொற்கேட்டு நடந்தவர்கள் நடக்கிறவர்கள். "தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" எனினும் தவமணியைப் பொறுத்தவரை தன் பிள்ளைகளை வளர்க்கும் ரீதியில் வாணிக்கும், வாரணனுக்கும் தாயின் சொல் மந்திரமாயிற்று. இதனால் கவிஞர் தந்தைக்குரிய பொறுப்பை நழுவவிட்டார் என்று நான் கருதவில்லை. அவருக்கு மனைவியிலுள்ள நம்பிக்கை பெரிது. என்னைப் பொறுத்தவரையில் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்று வற்புறுத்தி எனக்குரிய பொறுப்புகளை சிலவற்றை ஏற்கத்தவறி விட்டேன். பிள்ளைகளின் விஷயத்தில் சின்ன அலுவலிலேனும், பெரிய அலுவலிலேனும் முடிவு எடுக்க மாட்டேன். சிறு வகுப்புகளிற் படிக்கும்போதே, பாடசாலை ஆசிரியர்களோடு உல்லாசப் பயணத்துக்கு, மிருகசாலைக்கு, நூதனசாலைக்குப் போக உத்தரவுச் சீட்டில் சம்மதம் தெரிவியுங்கள் என்று கேட்டால் "பொறுங்கள் அப்பா வந்தபின் கேட்போம்" என்பேன். "அப்பா! அப்பா! என்று அம்மா சொல்லுவா, அப்பா சம்மதிப்பார் என்று எங்களுக்குத் தெரியும்" என்று முணுமுணுப்பர். மற்றொரு குறை என்னில், நான் ஒரு கோழை, ஒரு சொட்டுக் குருதியைக் காணத் தலை சுற்றும். பிள்ளைகள் ஓடியாடி விழுந்து காயப்படுவது சகஜம். அப்பா அரவணைத்து கழுவித் துடைத்து துணிகளால் கட்டுவார். அல்லது band-age போடுவார். பிள்ளைகளும் ஆறுதல் அடைவர்.

கவிஞர் போல் நானும் ஆசிரியர் கடமையில் அதிக சிரத்தை காட்டுவேன். பரீட்சையில் திறமைச்சித்தியும் கிடைத்தது உண்மை. பாடசாலைப் பொதுக்கூட்டங்களில் சிங்கள அதிபர் சிங்களத்தில் தான் பேசுவர். அது அவர்களுக்கு "கௌரவம்" என்று எண்ணினர் போலும்! பறங்கிப் பிள்ளைகளுக்காக ஆங்கிலத்திலும், தமிழ்ப் பிள்ளைகளுக்காக தமிழிலும் நேரடி மொழிபெயர்ப்பு செய்வேன். நான் மாணவரின் கவனத்தை ஈர்ப்பதில் நல்ல ஆசிரியை என்ற பெயரை உடையவள் ஆயினும் எனக்கு மாணவரைக் கண்டிப்பதோ, கட்டுப்படுத்தும் ஆற்றலோ இல்லாத குறை! 25 வருடம் ஒரு கல்லூரியில் தமிழ்ப்பிரிவுத் தலைவியாகவும், உபதலைவியாகவும் இருந்தாலும் Discipline Committee என்ற கட்டுப்பாட்டுக் குழுவுக்கு சிங்கள அதிபர் என்னை நியமிக்கமாட்டார். "குற்றம் செய்யும் குழப்படிப்பிள்ளைகளுக்காகப் பரிந்து பேசும் திருமதி. நடராசா இந்தக் குழுவுக்குத் தகுதி அற்றவள் என்று தள்ளப்பட்டவள் நான். பறவாயில்லை, இன்றும் தான் பல நூற்றுக்கணக்கான மாணவர் தங்கள் சுகதுக்கங்களுக்கும், எங்கள் குடும்ப நன்மை தீமைகளுக்கும் என்னோடு அன்போடு தொடர்பு கொள்ளும் பொழுது, என் குறையை மறந்து விடுகிறேன். சொந்தப் பிள்ளைகளையும் நான் தண்டித்ததில்லை, அவர்களும் தண்டிக்க இடம் தரவில்லை.

கவிஞர் கந்தவனம் உயர் கலாசாலைகளிலும் கண்டிப்பானவர். அதே நேரத்தில் மாணவரின் மதிப்பையும் அன்பையும் பெற்றார். மாணவரின் கட்டுப்பாட்டுடன் எதிர்பாலித்தார். ஆகவே அவர் என்னிலும் விஷேஷமான ஆசிரியர் என்று தயங்காது கூறுவேன்.

நடராசா ஒரே ஒரு நாள் வத்ஸலா நங்கை மருந்து குடிக்காததால் அடித்தார். மகிழநன் ஒரு நாளும் அடிவேண்டச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்று சமீபத்தி லும் மகனைப்பாராட்டக் கேட்டிருக்கிறேன். கந்தவனம் சைக்கிளை ஓடியதற்கு ஒரு நாள் வாரணனை அடித்தாராம். மனைவியின் கண் கலங்கியதைக்கண்டு அதற்குபின் மகனில் தொடுவதே இல்லையாம். கவிஞர் இரக்கச் சுபாவம் உள்ளவர்.

கவிஞரும் நடராசரும் நுண்கலைப்பிரிவில் வத்ஸலா நங்கையும், வாணியும் சிறு வயது முதல் பரத நாட்டியமும் கர்நாடக சங்கீதமும் முறைப்படி கற்றனர். இந்த விஷயத்தில் இருவருக்கிடையில் சிறு வேறுபாடு உண்டு. "மகள் பரத நாட்டியத்தை இரசிக்க வேண்டுமென்பதற்கே பயிற்றினேன், அரங்கேற்றம் வேண்டியதில்லை" என மறித்து கர்நாடக சங்கீதத்தை தொடர்ந்து படிக்க வைத்தார். அவளின் விருப்பத்திற்கேற்ப மேனாட்டு பியானோவைப் படிக்கவிட்டார்.

கந்தவனம் தம்பதிகளின் வாணியின் அரங்கேற்றத்தை பல மேதைகளின் முன் நடத்தி இன்புற்றனர். வாரணனுக்கு மிருதங்கம் பயிற்றினர். வத்ஸலா நங்கை மனையியற் சாஸ்திரப் பட்டதாரியானார். மகிழ்நன் நம்பி Accountancy படித்து இங்கிலாந்திலும், சவுதியிலும் வேலை பார்த்து இப்பொழுது கொழும்பில் சொந்த வர்த்தக தொழிலில் ஈடுபடுகிறார். கனடாவில் வேலையில்லாத் திண்டாட்டம் முடிந்தபின் வருவாராம்! வாணி விஞ்ஞானப் பட்டதாரியானபின் தொழிற் வாய்ப்புக்கேற்ற Accountancy யும் படித்து முடிக்கிறார். வாரணன், தொழில்நுட்ப டிப்ளோமா படிப்பு முடித்துக்கொண்டிருக்கிறார். இருவருடைய எதிர்கால நல்வாழ்வுக்கு எனது ஆசி.

நடராசாதான் கவியரங்குகளுக்கு முன்னோடி என்று நான் கருதினேன். ஆனால் "கவியரங்கில் கந்தவனம்" என்ற நூலையே கவிஞர் வெளியிட்டிருக்கிறார்! கவிஞர் யாழ் இலக்கிய வட்டம் பண்டிதர்மார் முற்போக்கெழுத்தாளர், பத்திரிகையாளர், அரசியல் வாதிகள் யாவருடனும் நெருங்கிப் பழகுவார். நடராசா வாலிபப் பருவத்தில் மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து ஈழத்து இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றது உண்மைதான். ஆனால் ஒலிபரப்பு ஸ்தாபன இயக்குனராக உத்தியோகம் வகித்தால், நடுநிலைமை தாங்கவேண்டுமென, பல்வேறு இலக்கிய குழுக்களில் ஒன்றையேனும் சாராது ஒரு அரசியற் கட்சியையும் சேராது ஒதுங்கி விட்டார். அல்லாவிடின் ஆங்கில சிங்கள இயக்குநர்களுக்கு நடந்ததுபோல் தற்காலிக வேலை நிறுத்தம் பெற்றிருப்பார். கவிஞர் கந்தவனமும் நடராசரும் ரொறன்ரோவில் எழுத்தாளர் சங்கத்தில், கலையரங்கம், தேமதுரம், ராகப்பிரவாகம், கீதவாணி போன்ற ஒலிபரப்புச்சாதனங்கள், மற்றும் எல்லாப் பத்திரிகைகளிலும் தமது ஆற்றலைக்காட்டியதோடு, நாட்டை விட்டு வந்து தமிழர்க்கு தமிழ் மணம் கமழச் செய்தார்கள். கவிஞரின் சேவை மென் மேலும் ஓங்குக என்று வாழ்த்துகிறேன், தமிழ்ச்சமுதாயமே வாழ்த்தும்.

கவிஞர் கந்தவனம் இறை பக்தி நிறைந்தவர் நுணாவிலில் அவர் வீட்டருகே அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலயம் இருந்தது. விநாயகர் கந்தவனத்துக்கு குல தெய்வம் ஆனார். அவர் தந்தையின் பெயர் விநாயகர், மகன் பெயர் வாரணன், இருவருமே பிள்ளையாரின் நாமத்தை தரித்தனர். வீட்டிலே ஒழுங்காக விநாயகரைத் தொழுவர். அவர் "விநாயகப்பா" என்று வீரகத்தி விநாயகர் மீது பாடல்களை ஒரு தொகுப்பாக வெளியிட்டுள்ளார். கவிஞரின் விநாயக பக்திக்கு உதாரணமாக ஒரு கவியரங்கம் நடாத்துமுன் கடவுள் வணக்கமாக

> ஆங்காரம் முடித்தருளும்
> ஓங்கார வடிவழகன்
> வீரகத்தி விநாயகனை
> நேரிருத்தி கவி படைப்பேன்

என்று பாடுகிற விநாயகர் அருள் அவருக்கு எப்பொழுதும் உண்டு. என் கணவருக்கும் இறைபக்தி மிகவும் உண்டு. ஆனால் ஆசாரங்களில் கிரிகைகளில் அதிகம் நம்பிக்கை இல்லை. God is Supreme Consciousnesஎன்று கூறுவார்.

எட்மண்டனில் "யார் உண்மையான இந்து சமயத்தவன்" என்ற பொருள் பற்றி தொடர்ச்சியாக Asian Horizons ஒளிபரப்பில் சொற்பொழிவு நடத்தினார். எட்மண்டனில் மகாகணபதி கோவில் ஒன்று புதிதாக கட்ட இருக்கிறார்கள். சம்பிரதாய முறையில் எப்படி கோவில் கட்டவேண்டும் என்று ஆராய்ச்சி செய்து, கோவிற் சபைக்கு அறிவுறுத்தினார்.

கடைசியாக நான் ஒன்றைக்கூற மறந்துவிடக் கூடாது. கவிஞர் கந்தவனம் மிகவும் கருணை உள்ளம் படைத்தவர். என்பதை என்வாழ்க்கையில் நடந்த பேரிழப்பின் போது கண்டுகொண்டேன். சுக தேகியாய் உலாவப்போக இருந்த கணவன் 15 நிமிடங்களில் மாரடைப்பால் இறைவ னடி சேர்ந்தார். மகள் வத்ஸலா நங்கை எட்டமண்டனில், மகிழ்நன் நம்பி கொழும்பில்! இணைபிரியாத் தம்பதிகளாக நாங்கள் வாழ்ந்ததை கவிஞர் அறிவார் போலும். நான் தன்னந்தனிய ஏங்குற்று செயலற்று பித்துப்பிடித்தவள் போல் இருந்தேன். கருணைக் கந்தவனம் வந்தார். நண்பனும் அவரும் முதற் சனிக்கிழமை தேமதுரத்திற்கு சில ஒளிப்பதிவுகள் செய்தனர்! சம்பவத்தை விசாரித்தார். கண்ணீர் சொரிந்து அன்றிரவே வானொலியில்


"என்னையா நடராசா! என்ன பிழை செய்திட்டோம்" எனக் கண்கலங்கி இரங்கலுரை ஆற்றினார். பத்திரிகையாளர், வானொலி, வானொளி இயக்குநர் யாவரும் கவிஞர் கந்தவனத்திடம் இரங்கலுரைக்குச் தேடிச்சென்றனர். சிரமத்தை பொறுத்துக்கொண்டு பலவேறு இரங்கலுரைகளை யாத்துக்கொடுத்தார். கனடா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக "வானுறையும் தெய்வம்" என சிறப்பாக நினைவு நூலையும் நண்பரின் பிறந்த தினத்தன்று வெளியிட்டார். எனக்கு சொந்த சகோதரன் போன்று பல்வேறு உதவிகளை செய்தார். கவிஞர் கந்தவனத்திற்கு கருணைக் கவிஞர் கந்தவனம் என்று தான் நான் மதிக்கிறேன்.

கவிஞர் இலக்கியத்துறையில் ஏணியின் உச்சத்தை அடைந்து விட்டார் எனின் இமயமலை வர ஏறிப் புகழ் பெற இடம் இருக்கிறது. புகழ் பெறுவார் தம்பி கந்தவனமும் தவமணியும் திருமண வைர இனிது வாழ்வுற (75 வருட Diamond Jubilee) பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டு களிக்கப் பிரார்த்திக்கிறேன்.

மணிவிழாக்காணும் மாண்கவி கந்தவனத்தைப் பற்றி நடராசன் கூறிய வாழ்த்தை விட நான் எப்படி வாழ்த்துவேன்.

> ஐந்து கரத்தனை ஆறு முகத்தனை
> ஆய சிவத்தினையோர்
> முந்து பரம்பொருள் ஆனதன் ஆகம
> முனைவுக ளாய்க்கொண்டே
> சிந்து மணிக்கதிர் தந்து விளைந்தொழில்
> சேரு நுணாவிலிலே
> வந்து பிறந்து வளர்ந்து வனப்புகள்
> வண்டமிழ்க் கீய்ந்தவனாம்.
> புந்திக் கெட்டாப் புனைவுகள் நூறு
> புதினத் தாள்தோறும்
> சிந்தித் தமிழ்வாள் ஒலியிற் சேர்க்கும்
> சிந்தனை பல்வேறும்
> தந்தித் திசையில் தமிழைக் காக்கும்
> தன்மைகள் பலதேக்கும்
> கந்த வனக்கவி வாணா நீடிக்
> காசினி வாழ்ந்திடுவாய்.









கவிஞர் கந்தவனத்தின் ஆக்கங்கள் இன்று உலகெலாம் எங்கு தமிழ் சஞ்சிகைகள் பிரசுரிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் காணப்படுகின்றன. அங்கெல்லாம் அவர் புகழ் பூத்து நிற்கின்றார். அவர் நீண்ட காலம் வாழ வேண்டும். தமிழ் அவரால் வாழவேண்டும்.

அவர் மனைவியார் எமது கல்லூரியின் மாணவி. கவிஞரின் பலம் அங்கு தான். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை. கவிஞரின் காவியம் யாவற்றிலும் கைகொடுக்கும் பாரியாரையம் ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்று என உள்ள கவிஞரின் செல்வங்களையும் வாழ்த்துகின்றேன்.

கவிஞர் கந்தவனத்தை நான் தெரிந்து கொண்டது ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன். ஆனால் அவரை அறிந்து கொண்டு" எட இதற்கு முன்னரேயே இவருடன் ஆத்மார்த்தமான நட்பினை ஏற்படுத்தத் தவறிவிட்டேனே" என அல்லாடத் தொடங்கியது. ஆறு வருடங்களுக்கு முன்னரே. கனடா வந்ததினால் எனக்கு ஏற்பட்ட பல அனுகூலங்களிலே கவிஞர் கந்தவனத்தின் நட்பு முதன்மை வகிக்கிறது என்றால் அது மிகையான கூற்று அல்ல.

ஈழத்திலே வாழ்ந்த போது அவ்வளவாக பொது நிகழ்ச்சிகளிலே பங்கு கொண்டவன் அல்லன் யான். பேச்சோ எழுத்தோ எனக்குக் கைவராத பல கலைகளில் சில. கானமயிலாட இந்த வான் கோழியும் ஓரிரு முறை முயன்று அசட்டுப் பட்டத்தை சம்பாரித்திருக்கிறது. எனவே மேடையில் முழங்குங்கள் என யார் அழைப்பர். எழுதினாலும் யார் பிரசுரிப்பர். ஆகவே என் பாடசாலை உண்டு,நான் உண்டு என இருந்து விட்டேன். அங்கேயும் ஒன்றும் புரட்டிக் கொட்டவில்லை என்பது வேறு கதை.அவர் என்னிலும் வேறுபட்டவர். சிறந்த ஆசிரியராய், திறனுடைய உப அதிபராய், ஆற்றல் மிக்க அதிபராய் கடமை புரிந்த போதிலும் தனது மனதிற்குகந்த எழுதுவதையோ, பேசுவதையோ கவிபாடுவதையோ சிறப்பாக செய்ததுடன் தனது திறமையை பல்வேறு துறைகளிலும் துலங்க வைத்தார் என்பதை நான் சற்றுப் பொறாமையுடனேயே கூறவேண்டும்.

அவரும் நானும் ஆசிரியத் தொழில் ஆற்றிய காலம் சம காலம். நான் உயர்தர வகுப்பிலே விலங்கியல் கற்பித்தேன். (இங்கு உள்ள பழைய மாணவர்களை எப்படி கற்பித்தார் எனக்கேட்டு என் மானத்தை.........) பரீட்சை எடுத்திருப்பார்கள். மாணவர்கள். பெறு பெறுகள் வரப் போகின்றன என்ற நாள் தொடக்கம் தெல்லிப்பழை தபாற் கந்தோர் தொடக்கம் கல்லூரி வரை சைக்கிளில் போகின்றபோது அது பின்பக்கமாக போகின்றது போன்ற உணர்வு எனக்கு ஏற்படும்! பரீட்சை முடிவுகள் பற்றி அவ்வளவு பயம். படித்த எனக்கே இப்படி என்றால்? கற்ற மாணவர்களுக்கு?! இந்த மனிசன் என்னடா என்றால் பரீட்சையில் சித்தி அடைவது எப்படி? என நூல் எழுதுகிறார். நானும் ஓர் சிறந்த ஆசிரியர்தானே? எனக்கு ஏன் அப்படிப்பட்ட சிந்தனை ஓடவில்லை.

எழுத்தாளன் சிந்தனையாளனாக பிறக்கும் போதே பேனாவுடன் பிறக்கிறார்களா என்பதாலா? நானும் கல்வியில் டிப்ளோமா செய்தேன். ஏதோ கடமைக்கு ஆய்வு செய்து கட்டுரையும் சமர்ப்பித்தேன். கதை அதனோடு முடிந்து விட்டது. அவ்வளவே! கவிஞர் அப்படி அல்ல. கர்மவீரர் தொலை நோக்குடையவர். இலங்கையில் ஆசிரியத் தொழில் பற்றிய விபரமான ஆய்வு ஒன்றினை நிகழ்த்தினார். அவரின் உழைப்பு அவரது பரீட்சையுடன் முடிவு பெறவில்லை. ஆசிரியத் தொழிலிலே ஈடுபட விரும்பும் யாவருக்குமே ஒரு வழிநூலாக ஏன் ஈழத்துக் கல்வி விருத்தி பற்றி அறிய விரும்பும் எவருக்குமே சிறந்த உசா நூலாக அமையும் வண்ணம் "இலங்கையில் ஆசிரியத் தொழில்" என நூல்வடிவம் கொடுத்து விட்டார்.

**பொ. கனகசபாபதி**

எழுதுவது, கவிபாடுவது வெறுமனே இன்றைய சமுதாயத்திற்கு மாத்திரமல்ல "நாளைய சமுதாயத்தை நன்னெறிப்படுத்துவதும் இன்றைய சமூகப் பெரியோர்களின் கடமை என்பதை கவிஞர் பூரணமாக உணர்ந்ததின் விளைவே அவரது ஆக்கங்கள் பல நூல் உருப்பெற்றமை. இன்னும் பல வரவுள்ளன. வரவேண்டும். அதுதான் கந்தவனம்.

1977 என எண்ணுகிறேன். "தேர்தல் முடிந்து காங்கேசன் துறை தொகுதி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அமரர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக தெரிவு செய்யப்பட்டார். நடேஸ்வரா கல்லூரி பழைய மாணவர் அமரர் திருநாவுக்கரசு வட்டுக்கோட்டை தொகுதிப் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இவர்கள் இருவருக்கும் ஓர் பாராட்டு விழாவை நடேஸ்வராக் கல்லூரி எடுத்தது. அன்று கவிஞர் கந்தவனம் எழுதிய வாழ்த்துக் கவிதையை திரு. ஏ.ரி பொன்னுத்துரை அவர்கள் வாசித்தார்கள். அக்கவிதையின் ஓசை நயமும், சொல் நயமும் இன்றும் என் காதுகளில் ரீங்காரம் இட்டுக் கொண்டு இருக்கின்றன. அன்று தொடக்கம் அவர் பாட்டுக்கு நான் அடிமை. மெல்ல மெல்ல அவரிடம் கொஞ்சம் சகவாசத்தை கூட்டிக்கொண்டேன். நல்லவரோடு இணங்கி நடப்பதும் நன்றே. 1980 ஆம் ஆண்டு என எண்ணுகின்றேன். கவிஞர் அவர்கள் தென்ஆபிரிக்காவில் உள்ள லெசோத்தோ என்னும் ஊருக்கு ஆசிரிய பணி மேற்கொள்ளப்போவதாக அறிந்தேன். உங்களைப் போன்ற

# ஒரு கல்லூரி கற்றுக்கொண்டிருக்கிறது!

வித்தகர்கள் இந்த நாட்டை விட்டு என்றுமே போகப்படாது. நான் சொல்வதால் அவர் மனம் மாறி நின்று விடப்போகிறாரா? ஏதோ என் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறினேன். அவர் போனதும் ஓரளவுக்கு நல்லதுதான். நானும் கனடா வந்து விட்டேன். அவரும் வந்துவிட்டார். எமது நட்பு முன்னிலும் இறுகியது.

கனடா வந்ததும் ஏதோ சிறிது காலம் அஞ்ஞாத வாசத்தில் இருந்தார். எனக்கு பரம சந்தோசம். என்னை எழுத்தாளனாக(?) கனடா சஞ்சிகைகள் கருதி எழுதுமாறு பணிக்கின்றனவே..... எழுதுவோம் என எண்ணினேன். அது அற்ப ஆயுசாகி விட்டது. கவிஞர் எழுத தொங்கி விட்டார் என்றார்கள். எங்கும் கவிஞர் என்பதே பேச்சு. என்னை சீண்டுவார் இல்லை. ஒதுங்கி கொண்டேன் இன்று அவரைப் பற்றி எழுதுவதால் சந்தர்ப்பம் கிடைத்தது.

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்கு
தன் தேசமல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்கு
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

# வசிட்டர் வாயால் மகரிஷிகள்.

கவிஞர் வி. கந்தவனம் அவர்களை அவருக்கு என்னைத் தெரிந்திருக்க நியாயமில்லாத காலத்திலிருந்தே நான் அறிவேன். நாம் கல்லூரிக்கு வெளியே நடாத்திய மன்றத்தின் விழாக்களுக்கு, பேச்சாளராக அவரை அழைப்பதற்குப் பல இளைஞர்கள் கூட்டமாக சைக்கிள்களில் எமது அயலூரான அவர் வசித்த குரும்பசிட்டிக்குப் போவது வழக்கம் அந்தக் கூட்டத்துள் ஒருவனாக நான் இருநத்தால் என்னை அவர் நினைவு வைத்திருக்க முடியாது. வி. கந்தவனம் அவர்கள் கவிஞர், எழுத்தாளர், நாடகக்கலைஞர், சமயத்தொண்டர், ஆசிரியர் என்ற பல பரிமாணங்களைக் கொண்ட ஒருவர். எங்கள் கல்லூரி ஆசிரியரும் நாடகக் கலையில் அளப்பரிய ஈடுபாடு கொண்டவருமான ஏ.ரி. பொன்னுத்துரை அவர்களும் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். அவர்களுடன் சேர்ந்து, வானொலி நாடகம் உட்படப் பல நாடகங்களில் பங்குபற்றிய வி. கந்தவனம் அவர்களுடன், 1969ம் ஆண்டுக்குப் பின்னர், அவரைப் பற்றி அவ்வப்போது கேள்விப்பட்டபோதும் எனக்கு நேரடியான தொடர்பு ஏற்படவில்லை. காரணம், நான் தொழில் நிமித்தம் கொழும்பில் இருக்கவேண்டி நேர்ந்துவிட்டமையே.

பின் எழுபதுகளின் பிற்பகுதிகளிலே க.பொ.த.ப (உயர்தர) வகுப்பிற்கு நாடகவியல் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டு, அதனைப் போதிப்பதற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்குடன், நாடகடிப் ளோமாப் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்பட்டதையும், யாழ்ப்பாணத்திலிருந்து சில ஆசிரியர்கள் அதில் கலந்துகொண்டு, நாடக டிப்ளோமாப் பட்டம் பெற்றார்கள் என்பதையும் நான் அறிந்திருந்தேன். ஆயினும், அந்த ஆசிரியர்கள் யார்யார் என்பதை அறிந்திருக்கவில்லை.

1980களின் தொடக்கத்தில் இலங்கையில் தேசிய ரீதியில் தொலைக்காட்சி அறிமுகமாகி, நான் அதிலே கடமையாற்றத் தொடங்கிய காலத்தில், பிரபல சிங்கள நாடகக் கலைஞரான காலஞ்சென்ற தம்ம ஜாகொடவுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தம்ம ஜாகொட அவர்கள் சிங்கள நாடக உலகில் மிகவும் குறிப்பிடக்கூடிய ஒருவர். உலக நாடுகள் பலவற்றிக்குச் சென்று, அந்தந்த நாட்டு நாடகத்துறைகளை அவதானித்துத் தனது நாடகத்துறை அறிவை வளர்த்துக் கொண்டவர். இப்படிப் பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் அனுப்பி, நாடகத்துறை சம்பந்தமான பூரண அறிவைப்பெற வழி செய்திருக்கிறது. க.பொ.த.ப(உயர்தர) நாடகப் பாட நெறியை வகுத்தவர்களில் தம்ம ஜாகொடவும் ஒருவர். இவர்தான் தமிழ் ஆசிரியர்களுக்கான நாடக டிப்ளோமாப் பயிற்சியை நெறிப்படுத்தியவர். இவர், இன்னும் சில சிங்கள நாடகக் கலைஞர்கள், நான் எல்லோருமாக அநேக இரவுகளில் மணிக்கணக்கில் நாடகத்துறை சம்பந்தமாக உரையாடுவதுண்டு. அத்தகைய உரையாடல்களின்போதெல்லாம் தம்மஜாகொட அவர்கள் அடிக்கடி நாடக டிப்ளோமாப் பயிற்சியில் பங்கு பற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிலரின் திறமையை விதந்து பாராட்டுவதுண்டு. அப்படிப் பாராட்டப்பட்ட ஆசிரியர்களில் திரு. கந்தவனம் அவர்களும் ஒருவர். எனக்கு இது மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. எனக்கு நன்றாகத் தெரிந்தவர்களை - நான் அபிமானம் கொண்டவர்களை, வேற்று இனத்து விற்பன்னர் ஒருவர் பாராட்டும்போது கிடைக்கும் மகிழ்ச்சி ஒருபுறம். எனது தொழில்வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சிங்கள கலைஞர்கள் மத்தியிலேயே செலவழிக்கவேண்டியிருந்ததால் அவர்கள் நாடகத்துறையில், சினிமாத் துறையில் அடைந்திருக்கும் முன்னேற்றங்களைக் கண்டு என்னுள்ளே அவர்கள் மத்தியில் புளங்கும்போது ஒரு தாழ்வு மனப்பான்மை தோன்றியது உண்மை. தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் தனிப்பட்ட ரீதியில் சிங்களக் கலைஞர்கள் மத்தியில் எனக்கு மரியாதை இருந்தபோதிலும், இனரீதியாக எழுந்ததே இந்தத் தாழ்வு மனப்பான்மை. அத்தருணத்தில் தம்ம ஜாகொட போன்ற ஒரு கலைஞன், இவர் நாடகத்துறை சம்பந்தமான பூரண அறிவு கொண்டவர் மட்டுமல்ல, உண்மைக் கலைஞனுக்கே கொண்ட உளப்பாங்கைக் கொண்டவர். தனது உணர்வுகளுக்கு வஞ்சகம் செய்யாதவர். தனது அபிப்பிராயத்தை அப்படியே வெளியிடுபவர். அத்தகைய ஒருவர், எம் இனத்தின் சிலரது திறமைகளைப் பல கலைஞர்கள் மத்தியில் இருந்து பாராட்டியமை எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்ததில் வியப்பேதுமில்லை.

ஆனாலும் எமது துரதிர்ஷ்டம் நாடகத்துறையில் அறிவுமிக்கவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் எம்மிடம் இருந்தும் நாம் இத்துறையில் பெரிதாக எதையும் சாதிக்கமுடியாது போய்விட்டது. இதற்குக் காரணம் பணமே. ஆயினும். அதைத் திரட்டி நாடகத்துறையை வளர்க்கக்கூடிய ஸ்தாபன ரீதியான அல்லது அமைப்பு ரீதியான முயற்சிகள் எம்மிடையே எடுக்கப்படவில்லை. அதேவேளையில் சிங்களக் கலைஞர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்கென்று பெரிய கலைப் பாரம்பரியங்கள் எதுவும் இல்லாதபோதும் அவர்களுக்கு என ஓர் அரசு இருந்தமையால், அவர்கள் பலவிதமான ஊக்குவிப்புகளுடன் முழு உற்சாகமாக நாடகத்துறையில் ஈடுபட்டு சாதனை புரியக் கூடியதாக இருந்தது. எமக்கு அத்தகைய அரசு ஊக்குவிப்புகள் உரியமுறையில் கிடைக்காது போயினும் நாம் ஒற்றுமையாகத் திட்டமிட்டு ஓர் அமைப்பு ரீதியாகச் செயற்பட்டிருப்போமேயாகில், நாம் ஓரளவுக்காவது அவர்களுக்கு ஈடுகொடுத்திருந்திருக்கலாம்.

இன்று எம்மிடமிருந்து திறமைகளும் சிதறுண்டு விட்டன. திறமை அதைவிட மேலான அனுபவமிக்க கலைஞர்கள் உலகின் நாலாபுறமும் சிதறுண்டு கிடக்கின்றார்கள். ஆயினும் கனடாவில் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் வந்து குடியேறிவிட்டதால், எமது இனத்தின் பெருமையை உயர்த்தும் கலை நடவடிக்கைகளுக்கு ஒரு சிறிதேனும் இடமுண்டு என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. குறிப்பாக மேடை நாடகத்துறையை நாம் நிச்சயம் விருத்திசெய்யலாம். இலங்கையில் நாடகத் துறையில் டிப்ளோமாப் பட்டம் பெற்ற இரண்டு கலைஞர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒருவர் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள். மற்றவர் குரமகள் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள். இவர்கள் இருவருமே மணிவிழா ஆண்டில் இருக்கிறார்கள். கலை இலக்கியத்துறைப் பணிகளுக்கு வயது ஒரு தடையல்ல. அனுபவம் பெறுமதி மிக்கது. தற்போதைய நிலையில் எமக்கு மிகவும் இன்றியமையாதது.


**ரி.விக்கினேஸ்வரன்**

புலன்களைப் பூப்பூக்க வைக்கும் கவிஞர். உணர்வுகளுடன் உறவாடி அவற்றை உச்சத்திற்கு ஏற்றிவைக்கும் கட்டுரையாளர். இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களையும் இதயங்களின் சந்தோஷமான பரப்புகளுக்கு அனுப்பி வைக்கும் அதீத ஆற்றல் பெற்ற இனிமையான எழுத்தாளர்.
மேடைகளுக்குக் கம்பீரத்தையூட்டி சபையோர்க்குக் கௌரவம் சேர்க்கும் சுவாரஸியமான பேச்சாளர்.
உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர்.
வசீகரம்மிக்க இந்த அறிமுகஅட்டையைத் தனதாகக் கொண்டிருப்பவர்.

**கவி நாயகர் கந்தவனம் !**
இதயங்களை இலக்குவைத்தே அவரது இலக்கியப்பணி அமைகின்றது.
அதனால் இலக்கியக் களங்களெல்லாம் அவரின் பெயரை உற்சாகமாக உச்சரிக்கின்றன - பிரியமுடன் பிரசுரிக்கின்றன.

# கீர்த்திக்கு ஒரு கிரீடம்

அறிவால்.......... ஆற்றலால்......... அனுபவத்தால் அவர் முதியவர்.
இலகுவாய்......... இனிமையாய்.......... இதயத்தால் எழுதுவதில் அவர் இளையவர்.
எல்லோருக்கும் சமஸ்தானம் கொடுக்கும் பொதுவுடமையின் சின்னம் அவரது இதயம்.
கவிதை என்பது அவரது வாழ்வின் முகவரி.
அவரது -
சிந்தனைக்கு ருசி உண்டு!
கற்பனைக்கு வாசம் உண்டு!
மேடைகளைப் பிரதானமானவராக அலங்கரிக்கின்றார்
- விழாக்கள் பிரமாதமாக அழகுபெறுகின்றன.
வார்த்தைளில் வசியம் சேர்த்து எழுதுகின்றார்.
- காகிதங்கள் அதனால் காயம் படுவதில்லை.
செதுக்கப்பட்ட செந்தமிழால் பரவசப்படுத்திப் பிரமிக்க வைக்கின்றார்.
-புகழ் அபாரமாய் அதன் அகலத்தை அதிகரிக்கின்றது.
நுணாவிலில் 28-10-1933ல் பிறந்தார்.
குரும்பசிட்டியில் 20-08-1964ல் மணந்தார்.
விநாயகர் - சின்னம்மா அவரது பெற்றோர்.
பிள்ளைகளாய் வாணியையும் - வாரணனையும் பெற்றார்.
அவரது ஆருயிர் மனைவி தவமணியை - அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் நேசத்திற்கும் பஞ்சமில்லாத ஒரு வருடத்தில் பிரமன் படைத்தான்
இளமையில் பெற்றோர் மறைந்தனர்.



முன்னுக்குத் தாய்மாமன் தம்பாப்பிள்ளையும் பின்னுக்குத் தாரம் கொடுத்தமாமன் இளையப்பாவும் அன்புகாட்டி அரவணைத்தனர்.
இளையவனத்தை ஆளாக்குவது அவர்களின் கடமை யானது!.
அந்த வனத்தை வனப்பாக்குவது அவர்களின் பணியானது!!.
விதைக்குப் பிறந்தாலும் பூவிற்கு வேறு குணம்.
விவசாயிக்குப் பிறந்தாலும் அவர் கவிஞர் இனம்.
நிறந்தெரியாத கற்பனைகளை விவரந்தெரியாத வயதில் அவரிடம் நிறைந்தது நுணாவில்.
அதன் இயற்கையின் சோபிதத்தில் நெஞ்சம் மயங்கினார்.
அந்தச் சின்ன ஊர் தனது கலாச்சாரத்தின் முந்தானையில் முடிந்து வைத்திருந்த கலைகளில் உள்ளம் லயித்தார்.
கூத்துப்பாடல்களிலும், மேடை நாடகங்களிலும், கிராமிய நடனங்களிலும் மனதைப் பறிகொடுத்தார். திருவிழாக்களைப் பெருவிழாக்களாக்கிய வாத்தியக் கருவிகளை இதயத்தில் இருத்திவைத்தார்.
பாசை தெரியாத பருவத்தில் - மொழியின் மீது மோகம்

## எஸ்.ஜெகதீசன்

மலர்ந்தது. கலையின் மீது நேசம் படர்ந்தது.
வளர்ந்தபின் அவை எல்லாம் விசுவரூபமெடுத்து அவரின் இலக்கிய இதயத்தைத் தாளலயத்துடன் இடை வெளியின்றி என்றும் துடிக்க வைக்கின்றன..
நுணாவில் கணேச வித்தியாசாலை, சாவகச்சேரி இறிபேக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, கோவை கலைக்கல்லூரி ஆகியனவற்றில் அவர் கற்றார்.
ஆசிரிய ஒய்வறைகள் எங்கும் அவர் பெயர் புகழப்பட்டது!
மாத்தளை புனித தோமஸ் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாசாலை, கொழும்புத்துறை ஆசிரியப்பயிற்சி கலாசாலை, யோகபுரம் மகாவித்தியாசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, லெசோத்தோவில் டிக்காகெங் உயர்பள்ளி, தென்னாபிரிக்கா சென் கத்பேட்ஸ் உயர்பள்ளி ஆகியனவற்றில் ஆசிரியராக, அதிபராக அவர் கற்பித்தார்.
மாணவ வகுப்பறைகள் எங்கும் அவர் நாமம் போற்றப்பட்டது!!

ஆண்டு அறுபது அவர் அடைந்துவிட்டார்.
தமிழ் இலக்கியவாதி ஒருவருக்கு முதலாவது மணிவிழாவாகவும் அதுவே ஒரு முதன்மையான விழாவாகவும், கனடிய மண்ணில் அவரது மணிவிழா அமைந்தது.
அவரது கீர்த்திக்கு மேலும் ஒரு கிரீடம் அமைத்தது.
முதன்மையான அந்த இனிய தமிழரின் சிறப்பான வரலாறு கனடாவில் வெளிவந்த முதலாவது சரிதை கூறும் தமிழ் நூல் என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றது.
வரலாற்றை எழுதுவதற்குப் பாதிப்புன்னகையோடு எனக்கு அவர் அனுமதி தந்தார்.
அவரது நேசத்தில் எனக்கு வாசம்.
அவரது சகவாசத்தால் எனக்கு சுகவாசம்.
புத்தக வடிவில் அந்த இலக்கியமேகம் பொழிய ஆரம்பித்து நாற்பது வருடங்களாகின்றன.
எனவே சிவப்புக்கல் விழா தேவை எனக்கோரி அவரது நூல்கள் இலக்கிய வானில் மின்னலடிக்கின்றன.
1954ம் ஆண்டு அவரது முதலாவது நூல் வெளிவந்தபொழுதே தமிழ் இலக்கிய உலகம் அவரது பெயருக்கு அடிக்கோடு இட்டுக்கொண்டது.
அக்குறுநாவலுக்கு அவர் வைத்தபெயர் "ஒன்றரை ரூபாய்."
பொலிஸ்காரர் லஞ்சம் வாங்குவதை தனக்கேயுரிய அதீத நகைச்சுவையுணர்வுடன் நன்கு வெளிப்படுத்தியி ருந்தார்.
அன்று வாசகர் செய்த கரவொலி "றாலாமிமார்" பலரின் காதுகளைக் காயப்படுத்தியது.
அந்த உற்சாகத்தால் அவரது பேனையின் இரத்த ஓட்டமும் கணிசமான அளவு அதிகரித்தது.
பதினாறு நூல்கள் இதுவரை அவரால் பிரசவம் பார்க்கப்பட்டன.
கவியரங்கில் கந்தவனம், ஏன் இந்தப் பெருமூச்சு, உய்யும் வழி என்பன அவரது அரங்கக் கவிதைகளைக் காட்டின.
கீரிமலையினிலே வேந்தன் போல் வீற்றிருந்து இலட்சிய சமுதாயம் ஒன்றை அமைத்துக்காட்டினார். - அவரது கீரிமலையினிலேயில்.
இலக்கியம் என்றால் என்ன என்பதற்கும் வேறும் பலவிற்கும் இலக்கிய உலகமும், கவிதை என்றால் என்ன என்பதற்கும் மற்றும் பிறவிற்கும் பாடுமனமேயும் தகுந்த பதில் தந்தன.
மூவருடன் இணைந்த கவிதைகளை சிட்டுக்குருவி காட்டிநிற்க, யாழ். இலக்கிய வட்டம் சார்பில் பேராசிரியர் வித்தியானந்தனை போற்றிநின்றது வித்தியானந்தமாலை.
பரீட்சையில் சித்தியடைவது எப்படி? இலங்கையில் ஆசிரியத் தொழில் ஆகியன வழிகாட்டும் வல்லமை பெற்றன.
விநாயகப்பாவும், நல்லூர் நாற்பதும் பக்தியைப் பாடி பரவசமடைய நுணாவிலூர் அவரது பிறந்த ஊரைச் சித்தரித்தது.
கம்பரின் கூனியைப்பற்றிப் புதிய கோணத்தில் ஆய்வு நடத்தி அவளை ஒரு கெட்டிக்காரியாக நிலை நிறுத்தும் முதற் தமிழ் இலக்கிய நூலாகச் சாதனை படைத்தது அவரது கூனியின் சாதனை. தமிழ் ஈழ வீரம் பேசும் விடுத லைக் கவிதைகள் ஆங்கிலத்தில் Hail The Tamil Tigers! என வெளிவந்தது.-
பலரது இதயச் சுவர்களில் ரத்தத்தைப் பசையாக்கி, விடுதலை வேட்கை அப்படியே அப்பப்பட்டது.
அவரது கட்டுரைகள் கவிதைகள் எல்லாமே நூலுருவம் பெறவில்லை. ஏராளமானவை 1986ல் இலங்கை ராணுவத்தால் குரும்பசிட்டியில் உள்ள அவரது வீட்டுடன் சேர்த்தே சேதமாக்கப்பட்டுவிட்டன. நூலுருவம் பெற்றவை அவரது எழுத்துக்களில் சுமார் கால்வாசிதான்.
கவிதைகள் மட்டும் நான்கைந்து தொகுதிகளாக வெளியிட்டு இருக்கலாம் என்பது அவரது ஆதங்கம்.
வானம்பாடி, வானெலியில் கந்தவனம், தேவர்கள் யாழ்ப்பாணத்தில் அருந்து என்று சிலவற்றை அவர் தொகுத்தேவைத்திருந்தார். கொஞ்சும் மொழி, குலவும் மொழி என இரு சிறுவர்பாடல் தொகுதிகள் என இரு சிறுவர் பாடல் தொகுதிகள்கூட வெளிவர இருந்தன.
ஈழத்துக் கூத்து மொழிகள் அவர் எழுதிய சிறந்த ஆராய்ச்சி கட்டுரைத்தொகுதியாகும்.
கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதன் பிரதி தற்பொழுதும் இருக்கின்றது.
கலைஞர்கள் எழுத்தாளர்களை வாழும் பொழுதே கௌரவிக்க வேண்டும் என்பதில் நம்பிக்கையடையவர்கள் தனி நபர்களாகவோ அல்லது சார்ந்திருக்கும் மன்றங்கள் சார்பாகவோ அவரது நூல்களைப் பதிப்பித்துப் பிரசுரம் செய்தால் தமி ழீழத்தில் அவர் வாழ்ந்த கால கட்டத்தை எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் தத்ரூபமாக படம் பிடித்துக் காட்டிய பெருமையுடையவர்களாவார்கள்.
தமிழ் இலக்கியம் அவரால் மனசு கறுத்து அழுததுமில்லை. கண்களால் தூவானம் சொரிந்ததுமில்லை.
தமிழால் தானும் வாழ்ந்து தன் வாழ்வால் தமிழையும் வாழ வைக்கும் இனிய தமிழர் அவர்.
ஆசிரியராய் அதிபராய் அவர் வாழ்ந்த வாழ்வு மனிதத்திற்கு மதிப்பெண் போடக் கற்றுக்கொடுத்தது.
நடிகராய் - இயக்குனராய் -நாடகப் போதனாசிரியராய் அவர் தாங்கிய வேஷம் சமூகத்துக்கு அரிதாரம் பூசுவோரை அம்பலப் படுத்தி அவர்களின் இதயத்தின் உட்தோலைக் கூட உரிக்க வைத்துச் சீர்திருத்தம் செய்தது.
கவியரங்கங்கள் - கருத்தரங்கங்கள் - பட்டிமன்றங்கள் - சமயச் சொற்பொழிவுகள் என்பன மனித மனோபாவங்களின் முகத்தைத் தடவிப் பார்க்க வைத்து உரைகளால் உலகத்தை உரசலாம் என உணரவைத்து மனிதரில் இறந்து கிடந்த மனிதரை எழுப்பவைத்தது.
மரத்துவிட்ட மனித மனங்களை வனப்பாக்கிவிட அவரால் முடியும்! மானிடத்திலிருந்து மனிதம் அன்னியப் பட்டுப் போகும். அநியாயம் அகற்றவும் அவரால் இயலும்.
அவரது இதயம் - இலக்கியத்திடமிருக்கின்றது. அதனால் என்றும் இனிமையோடு இருக்கின்றது.
அவரது இலக்கியத்திடம் - இதயம் இருக்கின்றது. அதனால் இன்றும் துடிப்பு மிளிர்கின்றது.
கனடா தேசிய கீதத்தை அழகாகத் தமிழாக்கம் செய்தார்.
இனிய தமிழ் வார்த்தையின் அணிவகுப்பை தேசியக் கொடியே மரியாதையுடன் ஏற்று புதிய மெருகுடன் வானில் பறக்கின்றது.
அந்த "றியல் மான்"க்கு இன்று மொன்றியலில் விழா!
தமிழ் அவர்மீது ஆரவாரத்துடன் பன்னீர்த்து ளிகளை அள்ளித் தெளித்து ஆர்வமுடன் ஆசீர்வாதப் பூக்களை அள்ளிச் சொரியும்.
அந்த தமிழ்வனத்தைத் தழுவி வரும் தென்றல் கூட உற்சாகப் பூக்களை உதிர்த்துச் செல்லும்.

சொல்தெரிந்து பொருள்தெரிந்து சுவையும் கூட்டிச்
சுந்தரத் தமிழ் இலக்கியத்தை எமக்குக் காட்டும்
நல்ல மனமும் வல்லமையும் ஒருங்கே பெற்ற
வனப்புமிக்க கந்தவனம் வாழ்க! வாழ்க!

# KAVIGNAR V. KANDAVANAM: A PHILOSOPHICAL POINT OF VIEW.

As a student of philosophy, I think it is better to explain my understanding of poems in a few, words, before writing some thing about Kavingar V. Kanthavanam from my memory in the middle school experience.

*A momentless intensity pure and bare,*
*I stretch to an external everywhere.*
*I have become what before time I was;*
*A secret touch has quieted thought and sense.*
*All things by the agent mind created pass*
*Into a void and mute magnificence.*

-Sri Aurobindo

Human life is caught in the ceaseless movement of time, of perpetual coming - to - be and passing - away. The changing forms of human life and of native have captured man's reflective attention in the East and West througout the ages by shaping the main thrust of his philosophical quest and by posing the basic questions of his religious life. Consider for a moment the perpetual change of role, seen and actor in nature's theater: Summer's growth becomes fall's harvest; night following day, clouds of white alter into ominous thunder heads. Children grow into aged men. Is it surprising that the earliest thinkers were amased at the transience of all forms and contents of the world, including themselves? Yet such coming to be and ceasing to be essentially define time. In this maelstrom of change man has sought to understand the meaning, of the life given to him and its relationship to the nature of all beings. What I am emphasizing here is that the poet's and the philosopher's questions are the same.. Ultimately what is the purpose of human life? Subramanya Bharathi also asking the same question in the fallowing poem:

தேடிச்சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி மனம்
வாடித்துன்ப மிகவுழன்று -பிறர்
வாடப் பல செயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப் பருவமெய்தி-கொடுங்
கூற்றுக்கிரையெனப் பின்மாயும்-பல
வேடிக்கை மனிதரைப் போலே -நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

Devotional Songs - 4
Bharathiyar Poems.

Good poets whatever their time, nationality and language are exceptional beings and carriers of divine truth. The only significant difference from poet to poet is perhaps the difference in the chronology of their lives. In the external forms of poetry, such as technique and style, certain differences may exist among them; but all true poets belong to the one unit and whole of poetic genius. Each poet in his own manner brings to this world a new message, a new form of reality. This message is the truth of Creation. A poet tries to express this ultimate reality in order to inspire human beings. This reality is expressed in a language that is suited for a period in time and for social way of thinking. It is because reality is affected by units of time, tradition and society, that a poet attempts to express this reality in terms of those units.

**- A.K.ANANDANATHAN,**
B.A. (Hons.), M.A., Senior Lecturer.,
Dept. of Philosophy & Psychology,
University of Peradeniya, Sri Lanka.
Doctoral candidate McMaster University.

As poetry is capable of distilling the sensuous enjoyment of all the senses and as it is born in the very deep experience of those senses ultimately perceiving the aspect of ultimate reality, it carries with the intoxication of liquor, the swetenss of a limitless firmament. Poetry is born over a very deep experience of the senses, the intellect, the mind as well the spirit. Without separating the joy or the sorrow of the world, a poet looks at life, at the completeness of the world of joys and sorrows. One who merely looks at the joy of life and runs away from its sorrows can not be a true poet; on the contrary poetry is the expression of the frenzy arising from the intoxcation of life. Poetry is born of the experience of the harmonies of the world and great passion that emanates from experiencing the tiniest joys of the universe. Not only joy, but sorrow too is a note in the harmony of the world. The above aspects we can clearly see in the following works of Kavingar V. Kandavanam:

ஏன் இந்தப் பெருமூச்சு, கீரிமலையினிலே,
கவியரங்கில் கந்தவனம், விநாயகப்பா.

The life vision of completeness of life is the primary experience of Indian poetry. Kavingar V. Kandavanam belongs to this group of Indian poets who perceive life as whole and complete.

Turning to my experience with Kavingar V. Kandavanam, I had the opportunity of studying under him when I was a middle school student at Va-

savilan M.M.V. Sri Lanka in 1965. During my middle school time we were very scared of Kandavanam, because he was a very strict disciplinarian, but a nice and good hearted man. He was always concerned about the students' future. He never intended to take revenge against any student. His character reminds us of Avaiyar Muthurai:

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

ஔவையார் மூதுரை (23)

*By hasty wrath disjoind the meaner Kind*
*Like broken stone are never more combined*
*Remingle soon the better soul their hearts.*
*Like fractured gold by fussion blend again*
*No longer sundered do the best remain*
*Than water that pointed arrow parts*

-Avaiyar Muthurai

What I am trying to say is that Kavingar Kadavanam's anger always helpful to the student to remove ignorance and illusions, not distroy or hurt their feelings or their future.

In conclasion, nothing could give me greater pleasure than to, bear witness to the extra ordinary qualifications that my esteemed teacher, poet and dear friend has for this kind of celebration (Manivizha). His standing as a poet of Tamil is well recognized in Sri Lanka and Canada. His publications and many students (including me) he has produced will amply testify to that. And I also want to add that Kavignar V. Kandavanam is a distinguished philosopher in his own right and a thinker possessed of a powerful mind. He has also a great understanding of the Tamil Saiva Religion, philosophical issues from a classical Tamil perspective which I have rarely seen matched. He is one of the rare kind of people who are proficient in Tamil and English in our community in Canada. Kavignar V. Kandavanam has a fine presence and unusual capacity for establishing social relationship with people of diffferent ethnic and cultural background. And, most of all he is awise man, with a benevelont disposition which endears him to all who come across him.

I wish him many more years of fruitful work for our community which I know lie before him in Canada.

# கந்தவனம் ஒரு நந்தவனம்

மணிவிழா!...........
மனிதத்தை நேசித்த மனிதன் ஒருவன்
இன்று மணிவிழா காண்கிறான்!
நந்தவனத்திற்கும்
இந்த-கந்தவனத்திற்கும்
நடுவினில் நிறைய ஒத்த பண்புகள்......
மல்லிகை, முல்லை, ரோஜா
மருக்கொழுந்து, செண்பகமென்று
ஒன்றாய் இணைந்த உலகம்
அந்த-நந்தவனம்!...........

கதை, கவிதை, கட்டுரை
நாடகம், நடிப்பு, பேச்சு என்று
இலக்கிய வனம் இந்த-கந்தவனம்!.........
தமிழில் நாடகத்தையும்
ஒரு பாடமாக்கிய பெருமை
இந்த நாயகனுக்குரியது!
எழுத்தில், பேச்சில், நடிப்பிலென்று
தமிழோடு தன்னை இணைத்துக்கொண்ட இந்தவனம்
மணிவிழாக் கண்டு மகிழட்டும்!......
அன்னை தமிழுக்கு அணிகலன்கள் செய்துபோட்டு
கன்னல் தமிழ் தொடுக்துக் கவிபடித்த
இந்த-கந்தவனம்
இன்னும் பல விழாக்கள் கண்டு
வாழவேண்டும்!.........
இலக்கிய உலகினை
ஆளவேண்டும்.

**நிலா குகதாசன்**

20-11-1993 ல் ரொரன்ரோவில் நடைபெற்ற கவிஞர் கந்தவனம் அவர்களின் மணிவிழாவில் வெளியிடப்பட்ட மணிவிழாப் பாமலரில் இருந்து உங்கள் பார்வைக்கு - இதோ ஒரு கவிதை

கவிஞர் கந்தவனத்தின் கவின்மிகு கவிதைகள் பற்றித் தொடராக ஈழநாட்டில் எழுதி வந்தார் இரசிகமணி கனக. செந்திநாதன்.

தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்ற இக்கட்டுரை 29-01-1978ம் ஆண்டு ஈழநாட்டில் பிரசுரமாகியிருந்தது.

இக்கட்டுரையை அனுப்பி வைத்த மதிப்புக்குரிய திரு. குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களுக்கு எமது நன்றி.

கவிஞர் கந்தவனத்தையும் சமூகப்பார்வையையும் தாய்மொழிப்பற்றையும் காட்டுகின்றார் இரசிகமணி.!

# தமிழ் எங்கள் உயிருக்கு மேல்!

எந்த விஷயமும் மனித சக்தியாலும் அதற்கு மேற்பட்ட தெய்வ சக்தியாலும் நடைபெறுகின்றதென்பது நமது முன்னோர் கொள்கை. எங்கள் மொழியைத் தெய்வத் தமிழ் மொழி என்று சொல்லுவதும் கடவுளர்களைத் தமிழின் சுவை என வர்ணிப்பதும் புலவர்கள் மரபாகிவிட்டது. ஆதிசிவன் பெற்ற தமிழ் என்றே பாரதி யார் கூறினார். முருகப் பெருமான். அருணகிரிக்கும் தமிழை உபதேசித்தார் என்று கூறுவதும் மரபு. எனவே எங்கள் மொழிக்கு நேர்ந்த இடர் தீரக் கவிஞர் தமிழ் தந்த முருகனையே வேண்டி நிற்பதில் நியாயம் இருக்கிறது. அவர் நல்லூர்க்கந்தன் மீது பாடிய நாற்பது பாடல்களுள் வேண்டும் பத்து என்ற பகுதியில் தமிழைக் காக்கவேண்டும் என்று முருகனிடம் வேண்டுகின்றார். பாடல்கள் தமிழின் பழமையையும் அழகையும் சுவையையும் அப்படியே காட்டுகின்றன. உதாரணத்துக்கொரு பாடல்!

மொழியினிலே யரியதமிழ் மொழியைப் போன்றோர்
மொழிவே றென்றில்லையென மொழிந்தார் சான்றோர்
விழியினிலே பெருமூச்சில் விழும் நீரோடு
வீரமொழி தீரமொழி வீழ்ந்தாள் தாழ்ந்தாள்
வழியெதுவு மில்லா வறியோர் போல
வந்தகுறை யெச்சமதில் வாழும் ஈனப்
பழியழிய நல்லூரில் படைவேற் கந்தா
பார்த்தருள வேண்டுமவள் பார்மே லோங்க.

இறைவனை வழிபடுவது, முத்தியின்பம் பெறும்பொருட்டேயாயினும் ஒவ்வொருவரும் தத்தம் தளத்தின் நின்று தத்தமக்கு வேண்டியதையே இறைவனிடம் கேட்கின்றனர். வறியவன் பொருளுக்காக வேண்டுகின்றான். மலடி பிள்ளைப் பேற்றுக்காக வேண்டுகின்றாள். முற்றுந்துறந்தவர்களாலேதான் மோட்ச சாம்ராஜ்யத்தைக் கேட்கமுடியும். எங்கள் கவிஞர் பொன்னைப் பொருளைக் கேளாமற் போக வாழ்க்கையைக் கேளாமல். தமிழைக் காக்கும்படி கேட்கிறார். சிலருக்கு இது நகைப்பைக் கொடுக்கலாம், ஆனால் ஈழத்துப் புலவர் மரபுவழி இதுவேதான்!.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன்-இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்றார் தமிழ்விடு தூதுபாடியவர்.

சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன்
சாம்பல் தமிழ் மணக்க வேகவேண்டும்'

என்றார் கவிஞர் சச்சிதானந்தன்.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

என்றார் பாரதியார்.

அமிழ்தம் அவனது மொழியாகும். அன்பே அவனது வழியாகும் என்றார் நாமக்கல் கவிஞர். எல்லோரிலும் பார்க்க தமிழ் உணர்ச்சி மிகத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று பாடினார் பாரதிதாசன். மேடைகளில் எல்லாம் இத்தொடர் முழங்குகின்றது. கவிஞர் கந்தவனம் இதற்குமேலே தமிழை உயர்த்தவேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ் உயிருக்குமேல்' என்று பாடியுள்ளார். மாவிட்டபுரத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் இலக்கிய மகாநாட்டில் 'தமிழ் எங்கள் ஊயிருக்கு நேர் என்ற தலைப்பிலே ஒரு கவியரங்கம் நடந்தது. அதில் கவிஞர் கந்தவனமும் பங்பற்றினார். 'இதுவும் ஒரு தலைப்பா? என்று தலைப்பைப் பகிடிபண்ணினார் கவிஞர். சபையில் இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். வீரத்தமிழர் உயிரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அப்படி மதிப்பில்லாத உயிருக்குத் தமிழ் நேர் என்று பாடலாமா என்று கேட்டார் ஒரு கேள்வி. கரகோஷம் வானைப் பிளந்தது. தொடர்ந்து அற்ப உயிரிலும் பார்க்க தமிழ் மேலானது என்று முழங்கிநின்றார் கவிஞர். அந்த நல்ல பாடல்களில் ஒன்று இது:

தமிழ் எங்கள் உயிருக்கும் மேல்மேல்-அன்புத்
தமிழ் எம்மை உருவாக்கி உய்விக்கும் வேல்வேல்
தமிழ் தன்னிற் பற்றென்று சொன்னால்-இன்பத்
தமிழ் பண்பைப் பின்பற்றி காட்டுங்கள் முன்னால்
தமிழிற் பற்றில்லாத பேரின்-உயிர்க்குத்
தமிழன்னை நேரென்று கவிஞர் சொல் வாரோ
தமிழ் எங்கள் கண்கண்ட தெய்வம்-நாளும்
தமிழ்த்தாயை மனம்வைத்து வணங்கினால் உய்வோம்.

**இரசிகமணி. கனக. செந்திநாதன்.**

கவிஞர் கந்தவனம் மணிவிழா 1993- ஒருபார்வை

# நினைவுகளே நில்லுங்கள்

நன்றி தமிழோசை

"பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும்....... மன்னன் தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர் துடைக்க மறப்பேனா" என்ற உணர்ச்சிக்கவிஞன் காசி ஆனந்தன் பாடிய பாடலுக்கு ஏற்ப தமிழீழத்தில் "கூழுக்காக கவி பாடாமல் கூனல் விழுந்த தமிழ் அன்னையின் கூன் நிமிரப் பாடிய நெஞ்சுரம் கொண்ட, நேர்பார்வை படைத்த பல கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். - வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவராக இன்று வாழுகின்ற கனேடிய மண்ணில் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்க்கவிஞர் "கந்தவனம்" என்கின்ற "தமிழ்வனத்திற்கு" 20-11-93 சனிக்கிழமை ரொறண்டோ Upper Canada College Perparatory School மண்டபத்தில் "மணிவிழா" நடைபெற்றது. தமிழுக்குத் தொண்டு செய்வோரை அவர்களது வாழ்நாளிலேயே கௌரவிக்க வேண்டும். வாழ்த்தவேண்டும், மேன்மேலும் அவர்களது பணி தொடர நாம் உறுதுணையாக நிற்க வேண்டும் என்ற சீரிய, உயர்ந்த சிந்தனை கொண்டவர்கள் என்ற வகையில் விழாவிற்குச் சென்றிருந்தோம்.

ஆசிரியர்கள், அதிபர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், இலக்கியகர்த்தாக்கள், ஆர்வலர்கள், நண்பர்கள், என அனைவராலும் மண்டபம் புதுமெருகுடன் காட்சி தர மணிவிழாக்குழுவின் தலைவர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்களின் தலைமையில் விழா ஆரம்பமானது.

பேராசிரியர் திரு. முத்துலிங்கம் அவர்கள் பாடிய இரு தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல்கள், (இதில் ஒன்று கவிஞர் கந்தவனம் இயற்றியது) அவரது கணீர் என்ற குரலோடு எம் காதுகளுக்குள் நுழைந்த போது எம்மையறியாமலேயே ஒரு வித தெம்பும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டது என்றால் அது பொய்யுரையல்ல. இவ்வாறான ஒரு உணர்வைத் தான் பாரதி "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே... என்று பாடினானோ? என்னவோ?

அதனைத் தொடர்ந்து எம் தேசத்தின் விடுதலைக்காக- எம் வாழ்வுக்காக தம்மை அழித்துக் கொண்ட மாமறவர்களுக்கும், சத்தியத்தீயில் வெந்து போன மக்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வரவேற்புரை நிகழ்த்திய விழாக்குழுவின் செயலாளர் திரு.எஸ்.ஜெகதீசன் அவர்கள் "கவிநாயகர் கந்தவனத்திற்கு" ஏன் மணிவிழாக் கொண்டாட வேண்டும் என்பதை இரத்தினச் சுருக்கமாக விளக்கியதுடன் எம்மவர்கள் மத்தியில் தமிழ் அன்னைக்கு ஆரணம் சூட்டி வாழ்ந்து வருகின்றவர்களை எதிர்காலத்தில் நாம் கௌரவிக்க வேண்டும் என்ற ஆவலையும் வெளியிட்டார். அவருடைய வரவேற்புரையில் மிக நல்ல, பயனுள்ள ஆதங்கம் நிறைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆசியுரை வழங்கிய சிவாகம ஞானபானு சிவஸ்ரீ சிவஞானச்செல்வக் குருக்கள் அவர்கள் கவிஞருக்கு ஆண்டவன் அருளுடன் நீடூழீ வாழ வேண்டும் என்ற ஆசியுடன் பொருள் பொதிந்த ஆசியுரையையும் வழங்கினார்.

வாழ்த்துரை வழங்கிய திரு. ஈழத்துப்பூராடனார் அவர்கள் "ஒரு மனிதனுடைய வாழ்வில் ஓராட்டு, தாலாட்டு, சீராட்டு, எல்லாம் தாராளமாக் கிடைக்கும். ஆனால் பாராட்டு கிடைப்பது அரிது. ஆனால் அந்தப் பாராட்டு இவ்வளவு சிறப்பாக கவிஞருக்குக் கிடைத்திருக்கின்றது என்றால் அது கவிஞருடைய தமிழ்த் தொண்டுக்கு கிடைத்த பாராட்டு என்று புகழாரம் சூட்டியதுடன் கவிஞர் 60 வயதிலும் இளமையாக, இனிமையாக இருப்பதற்கு காரணம் யாதோ என்ற கேள்வியை எழுப்பி "அமுதுண்டோர் சாவதில்லை" என்பார்கள் "தமிழுக்கு அமுதென்று பெயர்.." அதனால் தமிழ் அமுதை கவிஞர் உண்டார். இளமையாக வாழுகிறார் என்றுதற்குறிப்பேற்ற உவமையணியோடு கூறிய பொழுது சபையோர் மத்தியில் ஓர் 'இதமான' சுகம் ஓடியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அவரைத் தொடர்ந்து கனடாவில் தான் வாழும் காலத்தில் தன் இனத்தினதும், தாய்மொழியினதும் உயர்வுக்காக தன்னால் இயன்ற பங்களிப்பை என்றும் ஆற்றி வருபவரும், ஒரு காலத்தில் "டைகர் சிவலிங்கம்" என்று அழைக்கப்படுகின்ற அளவுக்கு தமிழீழச்சங்கத்தில் தலைவராக திகழ்ந்த திரு. நா.சிவலிங்கம் "தொண்டு செய்வோரை நாம் கௌரவிக்கத் தவறுவோமாயின் எதிர் காலசந்ததி எம்மை வசைபாடியே தீரும்" என்ற வரலாற்று உண்மையை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து விழாவுக்குத் தலைமை தாங்கிய தமிழர் தகவல் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. எஸ்.திருச்செல்வம். அவர்கள் தமதுரையில் தனக்கும் கவிஞருக்கும் இடையேயுள்ள "நட்பின்" ஆழம் 32 வருடங்களைக் கொண்டது என்று கூறியதுடன் எவர் ஒருவருடைய 60வது ஆண்டு நிறைவு அவரது குடும்ப வட்டத்துக்கு மேலாக சமூக வாழ்க்கையில் ஏதாவது ஒன்றின் மட்டத்திலே நினைக்கப்படுகின்றதென்ற தேவை ஏற்படுகின்றதென்றால் அவரது வாழ்க்கை ஏதோ ஒரு வகையில் சமூகப் பிரயோசனமுள்ளதாக அமைந்துள்ளது என்பதே கருத்து என்று கூறியதுடன் தொடர்ந்து உரையாற்றுகையில்.

கலைஞர்களையம், எழுத்தாளர்களையும் வாழும் போதே கௌரவிக்க நாம் பழக வேண்டிய தேவை இன்றைய காலத்தின் கட்டாயம் என்றும் மறைந்த பின் மலர் அடிப்பதும், சிலை எழுப்புவதும் தேவையில்லாதது என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்.

இதனையடுத்து "கவிஞர் கந்கவனம் மீதான பார்வை" என்ற தலைப்பில் உரைகள் இடம்பெற்றன.

கல்விச் சேவையாளராக திரு.தி. மாணிக்கவாசகரும், நாடகத்துறையாளராக திருமதி வள்ளிநாயகி இராமலிங்கமும் (குறமகள்) சமுகசமய சேவையாளராக திரு.பி. விக்கினேஸ்வரனும், இலக்கியவாதியாக திரு கே.ரி. சண்முகராசாவும், நண்பராக மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ.கனகசபாபதி அவர்களும், ஆசிரியராக

செல்வன் அளவெட்டி ஸ்ரீஸ்சுக்கந்தராசாவும் தங்கள் நோக்கில் கவிஞர் கந்தவனத்தைப் பற்றி உரை நிகழ்த்தினார்கள். ஆனால் கவிஞருடைய அரசியல் வாழ்வு பற்றி எவரும் உரையாற்றாதது ஏன்? இன விடுதலை, மொழியுரிமை போன்றவற்றோடு பின்னிப்பிணைந்து வாழ்ந்தவர் கவிஞர். இனவிடுதலையை முன்னெடுத்துச் சென்ற த.வி.கூ மேடைகளில் பலமுறை கவிஞரை யான் கண்டிருக்கிறேன். பேச்சாளராக, கவிஞராக, அண்மையில் கூட மறைந்த தலைவர் ஒருவரின் துணைவியாருடன் உரையாடும் போது கவிஞர் கந்தவனம் எங்கள் கட்சியோடு நெருக்கமானவர். பற்றுள்ளவர். அவருடைய மணிவிழாவக்கு தன்னால் நிற்க முடியாமல் தான் போகப் போவது பற்றிக் கவலைப்பட்டார். அப்படிப்பட்ட ஒரு–வருடைய அரசியல் வாழ்வு பற்றியும் பார்வையைச் செலுத்தியிருக்கலாம்.

காலத்தின் அருமை கருதி 60வது ஆண்டு விழாக் காணும் கவிஞரைப் பற்றி 6 நிமிடங்கள் மட்டுமே பேசுவதற்கு தலைவரால் அனுமதி வழங்கப்பட்ட விடயம் குறையில்லை என்றாலும் நிறைவாக பேச பலரால் முடியாதிருந்ததைக் காணமுடிந்தது.

இறுதி நிகழ்ச்சியாக விழாவின் நாயகர் கந்தவனம் தம்பதிகள் கௌரவிக்கப்பட்டனர். திரு.திருமதி ஜெகதீசன், திரு.திருமதி சிவலிங்கம், திரு.திருமதி. இளையபாரதி, திருமதி குறமகள் வள்ளிநாயகி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க திரு கனகசபாபதி அவர்கள் பட்டுச்சால்வை அணிவித்து கௌரவித்தார். இவர்களுடன் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், சிவஸ்ரீ சிவஞானச் செல்வக்குருக்கள் ஆகியோரும் மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.

கவிஞருக்கு பெண் கொடுத்து மேலும் பெருமை சேர்த்துக் கொண்ட குரும்பசிட்டி மண்ணின்மைந்தர்கள் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தனர். இவைகளை அடக்கமாக ஏற்றுக் கொண்ட கவிஞர் கந்தவனம் அவர்கள் பதிலுரை நிகழ்த்தினார்.

பதிலுரையின் இறுதியில் கனடாவில் தமிழ்ப்பிள்ளைகள் தமிழ்படிக்காத நிலை கண்டு உள்ளம் பொங்க வடித்தகவிதை ஒன்றை வாசித்து சபையோரைச் சிந்திக்க வைத்தார்.

இவ்விழாவின் முக்கியமான விடயம் என்வென்றால் கவிஞரைப்பற்றி கனடாவில் வாழுகின்ற கவிஞர்களும், சொல்லோவியர்களும் பாராட்டிப் பாடிய பா மலரும் திரு.எஸ்.ஜெகதீசன் அவர்கள் எழுதிய கவிநாயகர் கந்தவனம் என்ற கவிஞரின் வாழ்வு பற்றிய புத்தகமும் ஆகும்.

உண்மையிலேயே திரு.ஜெகதீசன் அவர்கள் தன்னுடைய ஆளுமையை மிகவும் திறம்பட காட்டியுள்ளார். முதியவர்கள் செய்த நற்பணியை இன்றைய இளம் கலை–முறை புரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை ஜெகதீசன் அவர்கள் கவிஞர் கந்தவனம் ஊடாக காட்டியுள்ளார். அவருடைய இது போன்ற பணி மேன்மேலும் தொடர நாம் உறுதுணையாக இருப்போம் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். கவிஞருடைய வாழ்வு பற்றிய புத்தகம் நிச்சயம் தமிழர் அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் ஆவன செய்ய வேண்டும்.

கவிஞர் அவர்கள்
"கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும்மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்......"

வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

வாழ்க! வளர்க! தொடர்க தமிழ்ப்பணி!.

**● பரமேஸ்வரன் தாட்சாஜெனி**

## கனடியத் தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நீ!
உன்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

வி. கந்தவனம்

மகாஜனாக் கல்லூரி முத்தமிழ் விழாவில் முதன் முதலாக ஒலித்த கனடா தமிழ் தேசிய கீதம். எதிர்காலத்தில் எங்குமே நிரந்தரமாக ஒலிக்கட்டும்

# மங்களமாய் நன்றி....

தாய்த் தமிழை நேசிப்பவர்களால்தான் தமிழ்ப்பணி சிறப்படையும். தமிழ் ஆலயத்தின் தமிழ்ப்பணிகளுள் ஒன்றாக அமைந்த கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களது மணிவிழா நிறைவு நாள் சிறப்புடன் நடைபெறுவதற்கு தமிழ் அன்பு கொண்டு பண்பாடு காத்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் 'தமிழ் ஆலயத்தின்' சார்பில் கவிஞர். வி. கந்தவனம் அவர்களுக்கு விழா எடுத்துச் சிறப்பித்த மணிவிழாக்குழு – (மொன்றியால்) நன்றி நவில்கிறது.

மணி விழா மண்டபம் ஒழுங்கு செய்து தந்த 'கனடா தமிழ் மன்றம்'

மணிவிழா மண்டப ஒழுங்கிற்கு நிதி உதவி வழங்கிய மக்ஸ் சோவே நிறுவனம்,

அழைப்பிதழ்கள் அறிவிப்பு இதழ்கள் வெளிவருவதற்குதவிய அன்பர்கள்,

மணிவிழா நிறைவுமலர் பொலிவுடன் மலர்வதற்குப் பொறுப்பாசிரியராகப் பணிபுரிந்த திரு. எஸ். ஜெகதீசன் அவர்கள்

மணிவிழாக்கவிஞருக்கு வாழ்த்துச் செய்திகள், கவிதைகள், கட்டுரைகள் தந்து சிறப்பித்த தமிழ் அன்பர்கள், பெரியார்கள், கவிஞர்கள்,

மணிவிழா நிறைவு மலரை மின்கணணி மூலம் வடிவமைத்துத் தந்த செல்வி. இரா.அன்பரசி (ஈழகேசரி அன்பு பப்ளிகேசன்ஸ்) ஈழகேசரி ஆசிரியர் திரு. வே. இராஜலிங்கம் அவர்கள், மலருக்கான அட்டை வடிவத்தை அமைத்த திரு. குமார் ரத்தினம் அவர்கள், படங்கள் உதவிய அகிலன் அசோசியேட்ஸ், சங்கர் அச்சக உரிமையாளர் திரு. ஸ்ரீ. தேமதுரம் திரு. ஞானேஸ்வரன் ஆகியோர்க்கும் நன்றிகள்.

மணிவிழா நாயகனின் தமிழ்ச் சேவையைக் கௌரவிக்குமுகமாக வருகை தந்த தமிழ்ப்பெருமக்கள்,

நிதியுதவி வழங்கிய தமிழ் வள்ளல்கள் மற்றும் அன்னைத் தமிழை ஆராதனை செய்து வளர்க்கும் யாவருக்கும்

'தமிழ் ஆலயத்தின்' சார்பில் மணிவிழாக்குழு மனம் நிறைந்த நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துப் பெருமை கொள்கிறது.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்க்கலைகள்!
வாழிய கந்தவனத் தமிழ்க்கவி!

**மணி விழாக்குழு**

**திரு. கவிதாராஜன் (தமிழ் ஆலயம்)**
**திரு. கே.ரி. சண்முகராஜா**
**திரு. வி. எஸ். நேசாந்தர்**
**திரு. எஸ்.ஏ. சிவபாதம்**
**திரு. திருமாவளவன்**
**திரு. கேதா**

**மலராசிரியர்:**
**திரு. எஸ். ஜெகதீசன்**



சங்கர் அச்சகம் (416) 264-2715